OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
13 JUN 1910
MADRAS.

# விவேக போதினி

"எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"——திருவள்ளுவர்

தொகுதி II } ஸாதாரண௵ சித்திரை௴ 1910-௵ மே௴ { பகுதி 11

## உபரதி

### SELF-CONTROL

இரண்டாம் ஸாதனமாகிய உபரதியைக் கைவல்ய நூலாசிரியர் 'அமர்செய்யும் காமமாதி வரின் அடக்குதல் ஸஹித்தல்' என வர்ணித்திருக்கிறார். பொதுவாக முமுக்ஷுவானவன் விஷயங்களைவிட்டு ஒதுங்கி மிக ஜாக்கிரதையாகத் தன் மனதை அடக்கிச் சுத்தநிலையிலேயே நிற்க முயலவேண்டும். அவ்வாறு செய்யுங்கால் எழும் விஷய எண்ணங்களைத் தடுப்பதே உபரதி என்று சொல்லப்படும். 'நாம் வரும் விஷயங்கள்தம்முள் இருந்துகொண்டே உபரதியைப் பழகுவோம்' என்று இறுமாந்திருக்கலாகாது. ஒதுங்க வேண்டியவனுக்கு இந்த எண்ணம் பிறந்ததே அவன் மனது விஷயங்களில் ஈடுபட்டுவிட்டது என்பதற்கு அடையாளம். மேலும் பழகுபவன் விஷயமத்தியில் ஒதுங்காது இருப்பானாகில் அதில் பெரும்பாலும் ஈடுபட்டு முன் பலநாள் கஷ்டப்பட்டு ஸம்பாதித்த மனஸ்சுத்தத்தை ஒரே தடவையில் இழந்து, மிகுந்த தாழ்ந்த நிலையை அடையும்படி நேரிடும். உபரதிவிஷயத்தில்தான் 'சாண் ஏற' ஏமாந்தால் 'முழம் சறுக்கும்' என்ற பழமொழி நன்றாகப் பொருந்தும். இவைகளை உணர்ந்து விஷயங்கள் மத்தியில் முதலில் ஒதுங்கியும், அவ்வாறு செய்ய முடியாவிடில் அவைகளால் உண்டாக்கப்படும் மனப்பற்றை எழவொட்டாது அடக்கியும் முமுக்ஷு உபரதியில் பழகவேண்டியது.

இத்தன்மையான உபரதிக்குக் காரணம், யமம் (கொல்லாமை முதல் தானம் வாங்காமை வரைஉள்ள 5 குணங்கள்) நியமம் (சுத்தம் முதல் பகவானிடம் ஈடுபடுதல் வரைஉள்ள 5-குணங்கள்) ஆஸனம் (வெகுநாழிகை மாறாது நிலைத்து உட்காரக்கூடியவிதம்) பிராணாயாமம் (மூச்சை அதிகவேகமில்லாமலும், அதிக மெதுவாக இல்லாமலும் ஒழுங்காகவிடுதல்) பிரத்யாஹாரம் (மனதை விஷயத்திலிருந்து நீக்கும் அப்பியாஸம்) தாரணை (மனதைஏகாக்கிரப்படுத்தல்) தியானம் (ஏகாக்கிரப்பட்டுக்கொஞ்சநாழிகை நிற்றல்) ஸமாதி (புத்திஅசையாது பரம்பொருளிடம் நிற்றல்) என்ற எட்டு அங்கங்களை உடைய யோகமே. இது ஹடயோகம் போலில்லாதுபகவத் ஸம்பந்தமாக இருப்பதால் இதற்கு ராஜயோகம் என்ற ஒரு பெயரும் உண்டு. பகவத்பக்தி, மனம் அடக்கிப்பழகுதல் இவைகளால் வரும் உபரதி நிலைத்து நிற்காது.

இதன் ஸ்வரூபமாகிய மனோநிரோதத்தைப்பற்றி முன்னரே கூறியாய்விட்டது. இதன் காரியம் விஷய வியவஹாரம் குறைவது. நாம் ஸதாவிஷயங்களிலேயே காலத்தைப் போக்குகிறோம். சிற்சில ஸமயங்களில் தொழில் செய்து மற்றைய ஸமயங்களில் அவைகளைப்பற்றி விடாது பேசுதல், பின்னர் எல்லாவற்றையும் விட்டுவிஷய ஸ்வப்நங்களால் அடிக்கடிக்கலைக்கப்பட்டு உறங்குதல், ஆகிய இம்மாதிரியே நாம் காலம் கழிக்கிறோம். இதையே தாயுமானவரும் 'யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும் உறங்குவதும்' ஆகமுடியும் என்றார். இந்தவிதக் காலம் போக்குதல் உபரதியால் வரவரக்குறைய பகவத்காலக்ஷேபம் வரவர அதிகரிக்கும். நல்ல ஸ்வப்நம் அற்ற ஸுஷுப்தி காலத்தில் தேகத்தை மறப்பதுபோல தேகம் முதலியவைகளை மறக்கும் வரையில் இதில் பழகவேண்டியது. இதற்கப்பால் இது வேண்டியதில்லை. இதன் பலம் பிரம்மலோக ஸாமீப்யம் என்று சாஸ்திரங்கூறும். அதாவது ஆசார்யனிடம் செய்யும் சிரவணாதிகள் வேரூன்றி நன்றாகத் தழைத்து யாதொருகஷ்டமுமின்றி நிஷ்டைக்கு ஸஹாயமாக ஏற்படுவதே.

இதைத்தான் வித்யாரண்ய ஸ்வாமிகள் பஞ்சதசிப் பிரகரணத்தில் பின்வருமாறு கூறியிருக்கிறார். 'உபரதிக்கு ஹேது அஷ்டாங்கயோகம், ஸ்வரூபம், மனோநிரோதம், கார்யம், வியவஹாரம் குறைதல், எல்லை, தேகத்தை மறத்தல், பலம், பிரம்மலோக ஸாமீப்யமே.'

விவேக போதினி

தொகுதி 2] ஸாதாரணஹு சித்திரைமீ [பகுதி 11

## ஞானகாண்டம்

### GNANAKANDA

முன்னர் எடுத்துக் காட்டியபடி கர்மகாண்டத்தில் கூறப்பட்டிருக்கும் ஸன்மார்க்கத்தில் பழகி அதன்நோக்கத்தின்படி நிஜவைராக்கியம் அடைந்து, ஸத்குருவை அணுகி அவரால் செய்யப்படும் சோதனையில் தேறிய பின்பு அவர் அவன் கஷ்டத்தைத் தீர்க்கப் புகட்டும் விஷயங்களே ஞானகாண்ட விஷயங்கள். இவைகளுக்கு உபநிஷத்துக்கள் அல்லது வேதாந்தங்கள் என்றபெயர்களும் உண்டு. உபநிஷத்து என்ற பதத்திற்கு அஞ்ஞானத்தை அழிப்பது என்றும், பரம்பொருள் அருகாமையில் முமுக்ஷுவை அஞ்ஞானம் நீக்கிக்கொண்டு சேர்ப்பது என்றும் பொருள்கள் தாதுப்படி நோக்கில் வெளியாகும். வேதாந்தம் என்பது வேதத்தின் முடிவு என்று பொருள்படும். இதில் இரண்டுவித அர்த்தபாவங்கள் அடங்கியிருக்கின்றன. முதலாவது இவைகள் வேதங்களின் முடிவில் இருக்கின்றன என்பதையும், இரண்டாவது ஸாதாரண விஷய அறிவுகள் அநேகவிதமாக இருப்பினும் எல்லாம் இந்த ஞானகாண்டத்தில் கூறப்படும் முடிவில் அடங்கி ஏக ரூபத்தை அடைகின்றன என்பதையும் கருத்தாக உடையது. ஆகவே இதில் அடங்கியிருக்கும்சாந்தமானபரமபதவிஷயமே ஆவலுடன் வரும் முமுக்ஷுவைத் திருப்திப்படுத்தும் திறனுடையது. ஆதலால் ஸத்குரு இதை ஒழுங்காகப் பக்குவியான தன் சிஷ்யனுக்கு உபதேசிக்கத் தொடங்குவார்.

அவர் உபதேசிக்கும் ஒழுங்கைச் சற்று எடுத்து விவரிப்போம். சிஷ்யன் குருவைச் சென்றடைந்ததும், அவனுக்கு முதலில் ஞானகாண்டங்களாகிய உபநிஷத்துக்களை அவர் அத்யயனம் செய்துவைப்பார். இந்த விஷயம் அனுவசியம் என்றும், முன்னர் புஸ்தகங்களில்லாத காலங்களில் இது அவசியமாயினும் இப்பொழுது வேண்டியதில்லைஎன்றும் எண்ணிவிட வேண்டாம். வேதஸ்வரங்களைப் பற்றிக் கூறுங்கால் வேதத்தை ஸ்வரத்தோடு அத்யயனம் செய்தவன் சிறப்பை எடுத்துக் கூறியாய் விட்டது. உபநிஷத்துக்களின் நடை மிக எளிதாகவும், விஷயம் மிகச்சிறந்ததாகவும் இருப்பதால் அவைகளை அத்யயனம் செய்யும் பொழுதே சிஷ்யனுக்கு மனம் ஸ்வரத்தில் ஈடுபட்டு நிலைப்பதோடுகூட ஒருவாறு அவைகளின் அர்த்தங்களிலும் ஈடுபட்டுத் திருப்தி அடையும். இவ்வாறு அத்யயனம் முடிந்ததும், குரு அவைகளின் பொருளைக்கூறி, உபநிஷத்துக்களை ஒன்றோடொன்று ஒப்பிட்டு அவைகளின் விஷயங்கள் இப்படிப்பட்டவை, அவைகளுள் எது முடிவான மார்க்கம் என்பவைகளை நேரிடக்கூறாமல் சிஷ்யன் உணரும்படி கற்பிப்பார். இதோடு ஆகிமுதல் கொண்டே அவன் தேஹஸ்திதி, மனோநிலை முதலியவைகளுக்கு ஏற்ப அவனுக்கு ஓர் உபாஸனையை விதித்து அவனை அதில் பழகி வரும்படி செய்வார். இவ்வாறு அவனுக்குப் பழக்கமும், அறிவும் முதிர்ந்து வரவர அவனுக்கு மேலான நிலைகளுக்குரிய பழக்கங்களை உபதேசித்துத் தாமும் அவ்வாறு இருந்து காட்டி உபநிஷத்துக்களில் உள்ள ரஹஸ்ய விஷயங்களையும் எடுத்துக் காட்டி அவனை எளிதில் விருத்தி அடையும்படி செய்வார். இவைகளால் தேஹம் நானல்ல, பிரபஞ்ச விஷயங்கள்எனதல்ல, நான் இவைகளுக்கு அப்பாற்பட்டவன், இவைகளைவிட அறிந்துகொள்ள வேண்டியவை வேறொன்றுமில்லை என்று

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 13 JUN 1910 MADRAS.

உபநிஷத்துக்களில் கூறப்படு ஞானநிலை சிஷ்யனுக்குப் பழக்க பலத்தால் உறுதியானதும், ஸமயம் பார்த்துப் பக்குவகாலத்தில் குரு தமது முடிவான தொழிலாகிய மஹா வாக்ய உபதேசம் செய்வார். எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்ட நீயே உண்மையான பரம்பொருள் என்ற விஷயத்தைக் குரு தக்க நிலையில் கூற, இதுகாறும் விருத்தியானமனதில் அதுநேரிடப் பதியும். உடனே அவனுக்குத்தேகப்பிரஞ்ஞாதிகள் மறைய அவன் அசைவற்று ஞான நிஷ்டையிலிருந்து ஸமாதி நிலையை அடைந்து, வெயிலில் அடிபட்டவன் நிழலில் வந்து இளைப்பாறுவதுபோல சற்றுக் களைப்பாறுவான். பின்னர் பழக்க பலத்தால் குரு இவனுக்கு ஸமாதி ஸதாகாலமும் நிலைக்கும்படி செய்ய, முடிவில் தமக்கும் தமது சிஷ்யனுக்கும் யாதொரு பேதமே இல்லாத ஸம நிலைக்கு அவன் வரும்படி செய்வார். அதாவது சிஷ்யனை அவர் ஜீவன் முக்தன் ஆக்குவார்.

மானிடப்பிறவியின் முடிவாகிய இப்பரம பத விஷயத்தை வெளியாக்கும் ஞானகாண்ட பாகங்கள் எவை என்ற விஷயத்தை எடுத்துக் கொள்வோம். ஞானகாண்ட பாகங்களுக்கு உபநிஷத்துக்கள் என்று பெயர். அவைகள் அநேகம். அவைகளுள் 1008-உபநிஷத்துக்கள் முன் காலங்களில் இருந்தன என்று தெரிய வருகின்றது. இப்பொழுது நமக்கு 108 – உபநிஷத்துக்கள் தான் வந்து எட்டியிருக்கின்றன. இவைகளுள் 10-உபநிஷத்துக்களே முக்கியமானவைகளாகப் பெரியோர்களால் மதிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுள் ஞானகாண்ட விஷயங்களும் அதற்குவேண்டிய உபாஸனு பேதங்களும் பூர்ணமாக அடங்கியிருத்தலால் இவைகள் இவ்வாறு மதிக்கப்பட்டனபோலும். ஈச, கேன, கட, பிரச்ன, முண்டக, மாண்டூக்ய, தைத்ரீய, அயிதிரேய, சாந்தோக்ய, பிரஹதாரண்யக உபநிஷத்துக்களே, 10-முக்ய உபநிஷத்துக்கள். மற்றைய உபநிஷத்துக்கள் சிறியவையாயும், அதி ரகஸ்ய விஷயங்களைச் சுருக்கமாகவும் கூறுவதால் ஸாதாரண உபநிஷத்துக்களாக மதிக்கப்படுகின்றன.

இவ்வுபநிஷத்துக்களில் கூறப்படும் விஷயங்களை ஒருவாறு குறிப்பாகக் கூறுவோம். உபநிஷத்துக்களில் பொதுவாக முதலில் அநேக வித உபாஸனக்கிரமங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளில் சிலபின்வருவன. எந்தத்தேவதைகளையும் சிவ விஷ்ணுக்களாகப் பாவனை செய்து ஆராதனை செய்வது, பரம்பொருளை ஹிருதய குஹையில் இருப்பதாகவாவது, அல்லது ஸூர்யமண்டலத்தில் இருப்பதாகவாவது பாவித்து ஆராதனை செய்வது, ஓம் என்ற பிரணவ மந்திரத்துள் அடங்கியிருக்கும் அர்த்தபாவத்தை பரம்பொருளாக எண்ணி ஆராதனை செய்வது, பிரபஞ்சம், ஜீவாத்மாக்கள் இவைகளுள் பரவியிருந்து இவைகளை அடக்கியாளும்பொருளைப் பரம்பொருளாக எண்ணி ஆராதிப்பது, பிரபஞ்சம் முழுவதும் பார்த்தவிடமெல்லாம் ஸச்சிதானந்தமயமான பரம்பொருளாக எண்ணி ஆராதிப்பது, ஆகிய இவைகளே கர்மகாண்டத்தில் முதிர்ந்துவரும் முமுக்ஷுவுக்கு உபநிஷத்துக்களில் ஏற்பட்டுள்ள சில ஆராதனைகள். இதன் பின்பு நடுவில் வரும் சிறு கதைகளில் ஏற்படும் குரு சிஷ்ய ஸம்வாதங்கள் மூலமாக அவை சிறந்த உண்மையை வெளிப்படுத்தி, முடிவில் பரமநிலையிலிருப்பவர் மனதினூறும் ஆனந்த வெள்ளம் ததும்பி வழிவதால் வெளியாகும் பரவச வாக்கியங்களால் அந்நிலையைக் கூறாமல் கூறும். பொதுவாக உபநிஷத்துக்களில் முன் எடுத்துக்காட்டிய ஆனந்தக்களிப்பே ஏராளமாக விருப்பதால் அவைகள் ஒழுங்காக ஓர்வித ஸித்தாந்தத்தையும் நிலை நிறுத்துவனவாகத் தோற்ரு. உபநிஷத்துக்களை

வாசிக்கும் ஸாதாரண ஜனங்கள் எல்லோரும் அவைகளில் ஒழுங்கே இல்லை என்னும், முரணுனவாக்யங்கள் காணப்படுகின்றன என்றும் அவைகளைக் குற்றங் கூறுவர். இந்த அபிப்பிராயத்தை உண்டாக்கும் சிற்சில வாக்கியங்கள் பின்வருவன.

1. 'ஆதியில் இரண்டற்ற ஒன்றே இருந்தது.'

2 'இரண்டு உண்டு, பரம்பொருள் ஒன்று அவரை அனுஸரித்து நிற்பது ஒன்று. ஒன்று தொழில் நடத்துகின்றது, மற்றொன்று ஸாக்ஷி மாத்திரமாக நிற்கின்றது.'

3. 'இரண்டாவதை உணருகிறவன் பிறந்து இறந்து வருந்தவேண்டும்.'

4. 'பரம்பொருள் ஸத்யத்தை விரும்புவர், அதையே எண்ணுவர், பூம்யாதி பிரபஞ்சமும், ஜீவாத்மாவும் அவனுக்குத் தேஹம்.'

5. 'பரம்பொருள் ஸத்யஞானம் அனந்தம்.'

6. 'ஸச்சிதானந்தம் பிரம்மம்.'

இவைகள் இவ்வாறு முரணுக இருப்பினும், ஸனுதன தர்மம், வேதம் இவைகளின் நோக்கம், இதை அவைகள் அதிகாரிபேதம் அவஸரபேதம் முதலியவைகளை அனுஸரித்து வெளியாக்கும் வழி. இவைகளை நன்குணர்ந்தவருக்கு இந்த விஷயத்தில் உண்டாகும் மனச்சஞ்சலம் உடனே நீங்கிப்போகும். மற்றையவர்களுக்கும் இந்த விஷயங்களை நினைப்பூட்டினுல் உடனே வந்த சங்கை ஏன் தீரமாட்டாது?

இவ்வாறு உபநிஷத்துக்களும் கர்மகாண்டம்போல அதிகாரி பேதத்திற்கு ஏற்பமாறுபாடான உபாஸனுதிகளைக்கூறின் அவைகளின் உண்மை நோக்கம் இன்னது என்பது விளங்காமல் போய்விடுமே என்ற சங்கை பிறக்கும். உபநிஷத்துக்கள் வேதத்தின் நோக்கத்தை வெளியிடவந்தவைகளாதலின் அவைகளில் இந்த நோக்கம் வெளியாகாமல் போகவில்லை. ஆனந்தக் களிப்புகளையே இந்தவிஷயத்தில் அவைகளுள் நாம் முக்கியமாகக் கவனிக்கவேண்டும். இவைகள் பொதுவாக முடிவுகூறும் பாகமாகிய இறுதியிலேயே பெரும்பாலும் காணப்படுகின்றன. இவைகளிலிருந்து இரண்டற்ற பரிசுத்தநிலையே இவைகளது முடிவாகியபரமபதம் என்பது விளங்கும். இவைகளை வற்புறுத்த நேராக உபநிஷத்ஸாரம் என்று மதிக்கப்படும் நான்கு வாக்கியங்கள் இவைகளில் காணப்படுகின்றன. அவைகளுக்கே மஹா வாக்கியங்கள் என்று பெயர். அவை பின்வருவன.

1. ப்ரஜ்ஞானம் பிரம்மம்:—இது ருக்வேதம், அயிதிரேய உபநிஷத்தில் இருப்பது. இது விசாரணையால் ஏற்படக்கூடிய முடிவு. இதன்பொருள் 'அறிவே பிரம்மம்' என்பது.

2. தத்வமஸி:—இது ஸாமவேதம் சாந்தோக்யோபநிஷத்தில் இருப்பது. இது உபதேசமஹாவாக்கியம். இதன் பொருள் 'நீயே அது' அல்லது 'நீ அது ஆனுய்' என்பது.

3. அஹம்பிரஹ்மாஸ்மி:—இது யஜுர்வேதம், பிரஹதாரண்யக உபநிஷத்தில் இருப்பது. இது அனுபவ மஹாவாக்கியம். இதன் பொருள் 'நானே பிரம்மம்' அல்லது 'நான் பிரம்மாய் இருக்கிறேன்' என்பது.

4. அயமாத்மா பிரஹ்ம:—இது அதர்வணவேதம் முண்டகஉபநிஷத்தில் இருப்பது. இது ஸஹஜஸ்திதிமஹாவாக்கியம். இதன் பொருள் 'இந்த ஆத்மா பிரம்மம்' என்பதே

ஆகவே உபநிஷத்துக்களில் அநேகவிதக் கொள்கைகள் காணப்பட்டபோதிலும் அவைகளின் நோக்கம் இன்னது என்பது இப்பொழுது நன்ருக விளங்கியிருக்கும்.

இப்படியிருப்பினும் முற்கூறிய உபநிஷத்துக்களிலிருக்கும் விஷயங்கள் குறிப்பாகவும் மற்றைய பேதமான விஷயங்கள் மத்தியிலும் இருப்பதால் இவைகளுக்குப் பொருள் கூறப்புகுந்தோர் தம் நிலைக்கேற்ப ஒவ்வொரு முடிவை ஏற்றமாகக் கொண்டிருக்கின்றனர். தமது ஸித்தாந்தத்திற்கு முரணுன விஷயங்களை ஒடித்துப் பொருள்கூறி தமது நிலையை அவர்கள் ஸ்தாபித்திருக்கின்றனர். இவ்விதமான அநேகம் விருத்தி உரைகள் (வியாக்கியானங்கள்) உபநிஷத்துகளுக்கு உண்டு. இவை

களுள் நான்குவித ஸித்தாந்தங்களே நம்பரத கண்டத்தில் எல்லோராலும் இப்பொழுது அங்கீகரிக்கப்பட்டு வந்திருக்கின்றன. பரதகண்ட வாஸிகள் எல்லோரும் இந்த நான்கு ஸித்தாந்தங்களுள் ஏதாவது ஒன்றைப் பின் பற்றுபவர்களாகத் தான் இருப்பார்கள். இந்த முடிவுகளுக்கு, அத்வைதம். சிவாத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம், என்று பெயர். இவைகள் நான்கும் உபநிஷத்துக்கள் பொருளை விளக்குவனவாக வெகு காலமாக இருப்பன. இவைகளைப் பிற்காலத்தில் ஒழுங்குபடுத்தி தகுந்த யுக்திவாதங்கள் வேத ஸம்பந்த ஆராய்ச்சிகள் முதலியவற்றால் நிலைநிறுத்தி எல்லோருக்கும் பயன்படும்படி வெளியிட்டவர்கள் தக்ஷிண தேசத்தைச் சேர்ந்த நான்கு பரமாசாரியர்கள். அவர்கள் பெயர் முறையே ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாள், ஸ்ரீமத் நீலகண்ட சிவசாரியர், ஸ்ரீமத் ராமானுஜாசாரியர், ஸ்ரீமத்வாசாரியர், என்பவைகளே. இவர்கள் சரித்திரம், இவர்கள் உபநிஷத்துக்களைப் பொருள்படுத்தி வெளிப்படுத்திய முடிவான விஷயங்கள், இவைகளைப் பின் வரும் ஸஞ்சிகைகளில் முறையே தொகுத்து எழுதுவோம். இங்கு அவர்கள் எடுத்துக்கூறும் முடிவைமாத்திரம் காட்டுவோம்.

அத்வைத ஆசார்யராகிய ஸ்ரீமத் சங்கராசாரியர்:—உண்மையா யிருப்பது பிரம்மம் ஒன்றே மற்றவை எல்லாம் தோற்றமே ஒழிய வேறல்ல, ஆதலால் பிரம்மமே நான் என்று நிலைத்திருப்பதே பரமபதம் என்பர். சிவாத்வைத ஆசார்யராகிய நீலகண்ட சிவம்:—உண்மையாக இருப்பன ஜகத் ஜீவன் சிவன், முன்னிரண்டும் தனி வஸ்துக்களல்ல, சிவனைச் சார்ந்தவை அவைகளுள் ஜீவன் பக்குவியாகி சிவனது அருளால் முடிவில் சிவனொடு ஸூர்யன் ஒளியில் மங்கி நிற்கும் விளக்குப்போலக் கலந்து ஓர்வித ஸ்வதந்தரப் பிரஞ்ஞையோடிருப்பதுவே பரமபதம் என்பார். விசிஷ்டாத்வைதஆசார்யராகிய ஸ்ரீமத் ராமானுஜாசார்யர்:—மூன்று தனி வஸ்துக்களாகிய சித், அசித், ஈசுவரன் என்பவை இருக்கின்றன, இவைகளுள் சித்தாகிய மனிதன், அசித்த நான் என்ற அகங்காரம், இரண்டையும்மறந்து ஈசுவர ஞாபகத்தில் (வைகுண்டத்தில் ஈசுவரன் முந்நிலையில்) பெருநெருப்பிலிருந்து வரும்பொறி எவ்வாறு அதன் பாகமாகியும் நெருப்பால் பரவப்பட்டும் இருக்கிறதோ, அவ்வாறே தானும் பரமாத்மாவால் பரவப்பெற்ற அவரதுபாகம் என்று ஆனந்தித்துக்கொண்டிருப்பதேபரமபதம் என்பர். த்வைத ஆசாரியராகிய ஸ்ரீமத்வாசாரியர்:—முன்னர் எடுத்துக்கூறிய மூன்று பொருள்களும் தனித்தனியே இருப்பவை. ஓர் சித்தாகிய ஜீவன் அபாரசக்திமானாகிய ஈசுவரனது தாஸன் என்ற மாறா உணர்ச்சியுடையவனாகி அந்நிலையில் நிலைபெறுவதே பரமபதம் என்பர். இவ்வாறு இவர்கள் முன்னுள்ள ஸித்தாந்தங்களைக் கைக்கொண்டு இந்த முடிவிற்குத் தகுந்த வேத வாக்கியங்களைத் தமக்கு ஆதாரமாகக் காட்டி தம் நிலையை உறுதிப்படுத்துகின்றனர்.

இவர்கள் கூறும் முடிவுகள் பேதப்பட்டிருந்த போதிலும் இவர்களுக்கு அநேக விஷயங்களில் ஒற்றுமை உண்டு. எல்லோரும் தத்வமஸி என்றது போன்ற வேதங்களில் காணப்படும் மஹாவாக்கியங்களையே முடிவாகக்கருதி வ்யாக்யானம் செய்கின்றனர். எல்லோரும் தோற்றமான விஷயம் வரையில் ஜகத், ஜீவன், பரன் ஆகிய மூன்றையும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். கர்மத்தால் பந்தம் உண்டாகின்றது என்றும் அநேக ஜன்மங்களில் செய்யப்படும்பகவத்பக்தி, ஸத்கர்மங்கள் ஆகிய இவைகள் பந்தத்தை நீக்க ஸஹாயமாகும் என்றும், பந்தம் முற்றிலும் விடுபட முமுக்ஷுக்கள் மூன்று நிலைகள் மூலமாகப்போகவேண்டும் என்றும், அவைகளுக்கு ஏற்ப பிரஸ்தானத்திரயங்கள் மூன்று இருக்கின்றன என்றும், எண்ணுகின்றனர். அவர்கள்

கூறும் பிரஸ்தானத்ரயங்கள் பின்வருவன.

1. பகவத்கீதை.—இது பாரதம் பீஷ்மபர்வத்தில் கிருஷ்ணபகவானால் யுத்தம் செய்யப் பின்னடைந்த அர்ச்சுனனுக்குத் தைர்யம் வருவதற்காகக் கூறிய சிறந்த உண்மைகள் அடங்கியது. இது உபநிஷத்துக்களின் ஸாரமாதலால் இதை முமுக்ஷு முதல் நிலையில் படிக்கவேண்டியது.

2. உபநிஷத்துக்கள்.—இவை கீதாவிஷயங்களை விஸ்தாரமாக எடுத்துக் கூறுபவை. இவை இரண்டாம் நிலைக்கு ஏற்றவை.

3. பிரம்மஸூத்ரம்.—இதற்கு சாரீகமீமாம்ஸம் என்று ஓர் பெயருமுண்டு. இது வேதவியாஸரால் உபநிஷத் விஷயங்களைத் தொகுத்துச் சுருக்கமாகக் கூறப்பட்டஅட்டவணை. இது மூன்றும் நிலையில் சிஷ்யனுக்கு மனனம் நிஷ்டை இவைகளுக்கு உபயோகமாவது.

ஓம் என்ற பிரணவ மந்திரத்திலும் காயத்ரீ மந்திரத்திலும் வேதஸாரம் அடங்கியிருக்கிறது என்று எல்லா ஆசார்யர்களும் அங்கீகரிக்கின்றனர்.

இப்பொழுது முற்கூறிய நான்கு நிலைகளும் வேத ஸம்மதமானவை என்பது விளங்கும். இப்படி இருப்பினும் இவைகள் ஒவ்வொன்றிற்கும் விரோதமான வாக்கியங்கள் வேதத்தில் காணப்படுகின்றன. அவைகளுக்கு அர்த்தம் கூறுங்கால் ஒவ்வொரு ஆசாரியரும் தாம் எடுத்துக்கொண்ட நிலைக்கேற்ப அவைகளைப் பொருள் படுத்துகின்றனர். இவர்கள் பொருள் படுத்தும் விதங்களை உற்று நோக்கில், நிஷ்பக்ஷபாதமாகப் பார்க்கும் ஒருவனுக்கு இவர்களுள் இன்னார் கடைப்பிடித்த நிலையே வேதநோக்கத்திற்கு நன்றாகப் பொருந்தியது என்பது அவர் பண்ணும் விசித்திர அர்த்தங்களின் பொருத்தங்களிலிருந்து வெளியாகும். இப்படிப் பார்த்ததில் இக்காலத்தவர்களில் அநேகர் ஸ்ரீமத்வாசாரிய வித்தாந்தப்படி வேதம் முழுவதையும் பொருள்படுத்துவது பெரும்பாலும் பொருந்தாது என்றும், ஸ்ரீராமானுஜாசாரியர் ஸித்தாந்தப்படிப் பொருள்படுத்துவது பெரும்பாலும் பொருந்தியபோதிலும், சில முடிவான முக்கிய வாக்கியங்களுக்கு அவைபொருந்தாவென்றும், நீலகண்ட சிவத்தினது அர்த்தமும் சற்றேறக் குறைய இதேமாதிரி என்றும், ஸ்ரீமத் சங்கரரதுபொருள் ஸ்ரீமத்ராமானுஜாசாரியர் ஆதாரமாகக்காட்டும் அநேகவாக்கியங்களுக்கு இசைந்தும் அவர் அர்த்தங்கள் பொருந்ாத வாக்யங்களுக்கு மிகநன்றாகப் பொருந்தியும் இருக்கின்றன என்றும், சிற்சில இடங்களில் மாத்திரம் இவரது அர்த்தம் முற்றிலும் பொருந்தாமல் காணப்படும் என்றும், அபிப்பிராயப்படுகின்றனர். ஸ்ரீமத்சங்கராசாரியர் பாகுபாடாகிய பரவித்தை அபரவித்தை என்பதைப் பின்பற்றி நோக்கில் ஸ்ரீமத் சங்கரர் ஒருவருக்குத்தான் வேதத்தை அதிகமாக ஒடிக்காது நேராக அர்த்தம் பண்ணமுடியும் என்றும், இப்படி அர்த்தம்பண்ணினால் முற்கூறிய மற்றைய மூன்று நிலைகளுக்கு ஓர்வித சிறப்பு உண்டாக இடமிருக்கின்றது என்றும், இக்காலத்தில் அநேகப்பெரியோர்கள் அங்கீகரிக்கின்றனர். ஆகவே சங்கரர் எல்லா நிலை பேதங்களையும் ஒப்புக்கொண்டு அவை வேதத்தில் கூறும் அபரவித்தைகள், வேதத்தில் இவைகளைவிட மேலானதாயும், இவைகள் கொண்டு சேர்க்கும் முடிவாயும் உள்ள அத்வைதநிலை என்னும் பரவித்தை ஒன்றிருக்கிறது, அதுவே வேதமுடிவு என்று கூறுவதால், அவர் செய்த விசித்திர அர்த்தங்களின் ஸஹாயமின்றியே அவர் ஸித்தாந்தந் தான் முடிவானது என்பது எல்லோருக்கும் விளங்கும். ஸ்ரீமத் சங்கரர் எடுத்துக் காட்டிய முடிவை பலர் பலவிதமாக உலகவிஷயங்கள் முதலியவைகளைக்கைக்கொண்டு ஆக்ஷேபித்து, மற்றைய மூன்றுநிலைகளை முடிவுநிலைகள் என ஸ்தாபிக்கமுயலலாம். ஸ்ரீமத் சங்கரர் கூறும்நிலை ஞான காண்ட முக்கிய பாகங்களில் உள்ளது, அதை அங்கீகரிக்க மற்றைய நிலைகள் இல்லை என்று ஸ்தாபிக்கவேண்டியது அனுவசியம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
13 JUN 1910
MADRAS.

அது ஸ்வபாவத்திலேயே மேலானது, அநுபவத்தால் நேரிட அறியக்கூடியது, வாதத்தால் கலைக்க முடியாதது, அதை அங்கீகரிக்கின் மதத்துவேஷம் மூர்த்தி துவேஷம் முதலிய கெட்ட குணங்கள் ஒருவனை அணுகா, அந்த நிலையே நமது ஸநாதனதர்மத்தின் விரவிற்குப் பொருத்தமானது. மற்றைய மூன்று நிலைகள் முடிவில் இந்நிலைபோலத் தோன்றும், என்பவைகளை ஒருவராலும் எவ்வித யுக்தியாலும் மறுக்கமுடியாது.

ஆகவே ஞானகாண்டவழியும் முடிவும் யாவை என்றகேள்விகளுக்குப்பதில்பின்வருவன. பலபெரியோர்கள் அபிப்பிராயப்படி ஞானகாண்டமுடிவு பிரம்ஸத்யம் ஜகத்மித்யா. இதை உள்ளபடி உணர்ந்து நிலைபெறுவதற்கு மற்றை ஆசார்யர்கள் கூறும் நிலைகள் யாவும் அவசியமான படிகள். அவைகளை நம்மைப்போன்ற ஸாதாரண ஜனங்கள் பின்பற்றுவிடில், வேதசிகையின் முடிவு அவர்களை மீளாத்துயரத்துக்கு ஆளாக்கும். ஆகவேதகுந்த உபாஸனைகள் ஸித்தாந்தங்கள் மூலமாக மனிதனைப் பரம்பொருளாகி நிற்கும்படி செய்வதே ஞானகாண்டத்தின் நோக்கம். இதைச்சிலர் அத்வைத ஸம்பிரதாயப்படி ஞானகாண்டமுடிவே ஒழிய வேறல்ல என்று ஆக்ஷேபிக்கலாம். இந்த முடிவே உபநிஷத்துக்களின் இறுதியில் காணப்படுவதால் இங்கு எடுத்துக்கூறப்பட்டது. எல்லாமதஸ்தர்களுக்கும் ஸம்மதமாக இருக்கும்படி பொதுவாகக்கூறின் தகுந்த உபாஸனைகள் மூலமாகப் பரமார்த்தமாகிய பரமபத நிலையை மனிதன் அடையும்படி செய்தலே உபநிஷத்துக்களின் நோக்கம், என்று கூறலாம். இதில் பரமபத நிலை என்ற தொடரை ஒவ்வொரு மதஸ்தர்களும் தத்தம் முடிவுக்கேற்பப் பொருள்படுத்திக்கொள்வர்.

இனிப் பின்வரும் ஸஞ்சிகைகளில் 10-முக்கிய உபநிஷத்துக்களின் ஸாரபாகத்தை எடுத்து எழுதுவோம்.

## நூல் பயிற்சி

### STUDY OF LITERATURE

"கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை"

இந்தச் செய்யுளுக்குப் பொருள் எழுதிய பரிமேலழகர் "உம்மைக் கற்கவேண்டு மென்பதுபடநின்றது" என்று குறிப்பாகச் சொல்லி முடித்தார். கற்கவேண்டியது ஒவ்வொருவனுடைய கடமையென்பதே இதன் கருத்து. அப்படிக் கல்வியில்லாதபோது பெரியோர் பாற்சென்று கேட்டாயினும் உறுதி பயப்பதாகிய பொருள்களை உணர்ந்தொழுக வேண்டுமென்பது இங்கே வற்புறுத்தப்பட்டது. அப்படிக் கற்பதுதான் பாஷையைத் தெளிவாய்த் தெரிந்துகொள்ள ஸாதகமாகு மென்பது நிச்சயம்.

அநேககாலமாகப் பாஷையைப்படிப்பது உபயோகமா, அல்லது, தொழில்செய்வதற்கு மிகவும் ஸாதகமாகவுள்ள கருவிநூல்களை மட்டில் கற்பது உபயோகமா என்ற சந்தேகம் பலருக்கிருந்தது. இவ்விஷயத்தில் பல தேசங்களிலும் கற்றறிந்த பெரியோர் தமக்குத் தோன்றியுள்ளகருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். பார்க்கப் போனால் ஒருவன் எந்தெந்தப் பிரயோஜனத்தை நாடிக் கல்வி கற்க முயற்சி செய்கிறானோ அதைப் பொருத்தே அவன் படிக்கவேண்டிய நூல்களையுந் தேர்ந்தெடுக்க வேண்டுமென்பது புலப்படும். எனினும் பாஷாஞான மிருந்தால் நன்னடக்கை, உண்மை, நன்றியறிதல் முதலிய நற்குணங்களின் கருத்தும், அவற்றின் மேம்பாடுந் தெளிவாகத் தெரிவதோடு, பதார்த்தங்களைப் பகுத்தறியும் சக்தியும், தன்னுடைய குற்றக்குறைபாடுகள், பிறருடைய தோஷங்கள், முதலியவைகளை அப்போதைக்கப்போது தெரிந்து, அதற்கேற்ப நல்வழியில் நடக்க ஊக்கமும், ஒருவன் அடைவானென்று நூலாராய்ச்சி செய்தப் புலவர்கள்

எல்லாரும் திடமாகக் கூறுகின்றார்கள். நமது தேசத்தில், சாதாரணமாக வழங்கிவரும் பழைய கதைகளுள், உண்மையைச் சோராது காப்பாற்ற வேண்டுமென்று தனக்கு ஒரு பெரியவர் உபதேசித்த விஷயத்தை எக்காலத்திலும் மனத்துட்கொண்டு அதன்படி நடந்துவந்த கள்வனொருவனும்மந்திரியாய்விட்டானென்பதும், இன்னும் இதைப்போன்ற சில நல்லபழக்கங்களாலும் குற்றமற்ற ஒழுக்கங்களாலும், பலர் தாழ்ந்த நிலைமையினின்றும் உயர்ந்த பதவிக்கு வந்திருக்கிறார்களென்ற அநேக சரித்திரங்களும், எல்லோருக்குந் தெரிந்திருக்கலாம். ஆகவே வியாபாரத்துக்கு ஏதாவது மூலதனம் வேண்டியது அவசியமாவது போலவே, ஒருவன் வாழ்நாட்களைக் கௌரவமாய்க் கழிக்க நற்குண நற்செய்கைகள் முக்கியமாகத் தோன்றும்.

இவ்விதம் நல்ல பழக்கங்களைக் கைக்கொள்வதற்கும், மனம், வாக்கு, காயம் என்ற மூவிடத்தும் பரிசுத்தகுணம் மேம்பட்டு விளங்குவதற்கும், நமது முன்னோர்களுடைய சரித்திரங்கள், அவர்களுடைய நடவடிக்கைகள், முதலியவை யாவும் நாம் நன்றாயறிய வேண்டுமென்பது நன்கு விளங்கும். ஆதலால் பாஷா ஞானம் அத்துணைச் சிறந்ததல்லவென்றும், தொழிலுக்கு உபயோகமாகவுள்ள கருவிநூல்களைக் கற்பதே போதுமானதென்றுங் கூறுவது பிழையாகும். இதனால் ரஸவாதம் முதலிய உபயோகமான ஸ்ாதகசாஸ்திரங்களைக் கற்கக்கூடாதென்றாவது அல்லது அவைகளைக்கற்பது குறைவென்றாவது சொல்ல வரவில்லை. எந்தத்தேசத்திலும் தொழிற்பயிற்சி மிக்கிருக்கவேண்டியது பொதுஜன நன்மைக்கு அவசியம். இந்தியாதேசத்திலோ இப்படிப்பட்ட தொழிலபிவிருத்தி நாளுக்கு நாள் மேம்பட்டு வரவேண்டுமென்றே எல்லோருக்கும் கருத்துள்ளது. ஆயினும் வெகுகாலமாக நமது தேசத்தில் பாஷா ஞானமும் தொழில் முயற்சியும் ஒன்றுக்கொன்று சாதகமாகவே பழக்கத்தில் வந்ததாகத் தெரிகிறதே தவிர, இவ்விரண்டனுள் ஒன்றுதான் மேன்மையுள்ளது, இன்னொன்று தாழ்ந்தது என்ற விவாதம் ஒருபோதும் இருந்ததேயில்லை. முழுமையும் யோசியாதவர்களே நமது பெரியோர்கள் உலகத்தில் பணம் முக்கியம் என்ற கருத்தைத் தெரிந்துகொள்ளாமல், மோக்ஷத்தையே நாடிக் கொண்டிருந்தார்களென்று சொல்லுவார்கள். "வைகறையாமந் துயிலெழுந்து தான் செய்யும், நல்லறமும் ஒண்பொருளுஞ் சிந்தித்து" என்று தொடங்கிய செய்யுளில் உள்ளகருத்து மிகவும் இக்காலத்தில் பாராட்டற்கு உரியது. ஒவ்வொருவனும் தன் குடும்ப ஸம்ரக்ஷணைக்காகவும், இன்னும் தான் அவசியம் செய்தே தீரவேண்டிய கடமைகளாகிற தருமங்களைச் சரிவரச்செய்து முடிப்பதற்குமாகப் பொருள்தேடவேண்டுமென்றே, நமது முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இது பற்றியே "திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்று சுருக்கமாக இந்த அறிவு நமக்குப் புகட்டப்பட்டிருக்கிறது. இன்னும் தமிழகத்துக்கு ஓர் திலகம்போல் விளங்கும்பரமஉபகாரியாகிய மகா மகோபாத்தியாயர் ம-௱-௱-ஸ்ரீ சுவாமிநாதய்யரவர்கள் அருமையாகத் தேடி நமக்கு அச்சிற்பதிப்பித்துதவியுள்ள மதுரைக் காஞ்சியென்ற சங்கச் செய்யுளில், விடியற்கால வருணனையைப் பலவாறு சொல்லும் கவி, இல்லறத்திலிருக்கும் ஒவ்வொருவனும், தான் அன்று தேடவேண்டிய பொருளைக் காலையில் நினைத்துக் கொண்டு எழுந்தான் என்று சொல்லியிருக்கிறார். செல்வம் நிலையில்லாதது என்றும், பொன்னும் மண்ணும் ஒன்றுதான் என்றும், நமது பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்களென்றால், பொருளைப் பிறருக்குபயோகமாக்க வேண்டு

மென்றும், இக்காலத்தி லிருப்பவர்களைப் போல, அதில் விசேஷ அபிமானம் வைக்கக் கூடாதென்றும், அப்படி அபிமானித்தல் பிறகு மனதின் நிம்மதிக்குந் தூய்மைக்குமிடை யூறுகி விடுமென்றும், நமக்குத் தெளிவாகத் தெரிவிக்கவே அப்படிச் சொன்னார்களென்று கொள்ளவேண்டும். இப்போது மேனாட்டில் பிரபல சீமானான கார்னேகி யென்பவர் "கோடீச்வரனாக இறப்பவனைப் பிறர் மதிக்கமாட்டார்கள்" என்ற சுருக்கமான கருத்தால் மேற் கூறிய உண்மையைத் தான் விளக்கினார்.

இவ்விதமாகப் பாஷையைப் படிப்பதால் செல்வத்தின் பெருமை, அதன் உபயோகம் முதலியவை தெரிவதோடு, அதைச் சம்பாதிக்கவேண்டிய முறைகளும், ஒவ்வொருவனும் தன் குடும்பத்தை நல்ல ஸ்திதியில் வைத்துக் கொள்ளவேண்டு மென்ற தருமமும் நன்கு விளங்கும். இக்கருத்து அடியில் உள்ள குறளால் தெரியும்.

"நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
வில்லாண்மை யாக்கிக் கொளல்"

எனவே தொழிலபிவிருத்தியில் மனதைப் பூர்ணமாய்ச் செலுத்துவதோடு, பாஷையினபிவிருத்தியிலும் கவனிக்கவேண்டியது அவசியமாகின்றது. பாஷாபிவிருத்தியென்றால், சிலர் பாஷையைத் தாங்கள்தான் சீர்திருத்த வேண்டுமென்று தொடங்குகின்றார்கள். அவ்விதந் தொடங்கி தமக்குள்ள பாஷா ஞானமே பிறருக்கும் உள்ளதென்று நம்பி, ஆங்கிலம், வடமொழி முதலிய பாஷைகளிலிருந்து தமக்குச் சுலபமாய்ப் பதங்கள் வருவதால், அம்மாதிரியே யாவரும் உபயோகிக்கவேண்டுமென்றும், அக்கருத்துக்கிணக்கமாய்ப் பல புத்தகங்களை எழுதி வெளியாக்கிவிடவேண்டுமென்ற எண்ணத்துடன், தமக்குத் தெரியாததொரு நெறியில் பிரவேசித்து விடுகிறார்கள். வேறு சிலர் ,புத்தகங்கள் எழுதினாலன்றிப் பாஷையினுள்ள நயம் தமக்கும் பிறருக்குந் தெரியாதென்று நினைத்துவிடுகிறார்கள். கிராமவாசிகளின் தமிழ்க் கல்வியை நன்றாய்த் தெரிந்து கொள்ளாத பலர், தாம் பேசுவதுபோலவே யெழுதத் தலைப்பட்டு இதுதான் எளிய நடை யென்று சொல்லுகிறார்கள். இதற்கெல்லாங் காரணம் என்னவெனின், பாஷாபிவிருத்தி யென்ற சொற்றொடரின் பொருள் தெரியாமையாம். ஒவ்வொருவனும் தான் பாஷையைக் கற்றுத் தன்னை விருத்திசெய்துகொள்ளவேண்டுமென்பதே இச்சொற்றொடரின் கருத்தாகக் கொள்ளவேண்டும். பலர் கற்றால்தான், பாஷை யெல்லோருக்குந் தெரிந்து விருத்தியாகுமே யல்லது ஒவ்வொருவரும் தாம் தாம் பேசுவதுபோலவே யெழுதத் தலைப்பட்டுப் பல திசைச்சொற்களைச் சேர்த்து விடுவார்களானால் பாஷை சீர்திருத்தமடையுமென்பது பகற்கனவாகும்.

ஏராளமாகப் புத்தகங்கள் எளிய நடையிலும் உயர்ந்த நடையிலும் ஏற்கனவே எழுதப் பெற்றிருக்கின்றன. சிந்தாமணி, சிலப்பதிகாரம், குறள் முதலிய உயர்ந்த கிரந்தங்களும், வெற்றிவேற்கை, நன்னெறி முதலிய எளிய நடையில் எழுதப்பட்டுள்ள அறிவு புகட்டும் நூல்களும், தமிழ்ப்பாஷையில் அநேகம் இருக்கின்றன. இவற்றைக் கற்றுத் தெரிந்துகொள்ள யாவரும் முயற்சி செய்யவேண்டும். கடவுள் சிருஷ்டியில் மனிதன் உயர்ந்த பொருளாயிருக்கிறான். அவன் மூளையும் இடைவிடாது ஏதாவது ஒரு தொழிலில் பிரவேசிக்கக்கூடியதே. ஆகவே, வேறு ஒன்றுமில்லாதபோது சாதாரண மனிதர்கள் "வெறுங்கோட்டி" நிரப்பி ஏதாவது வம்பு பேசியாவது பொழுது போக்குவார்களேயொழிய, சும்மாவிருப்பது யோகிகளுக்குத்தான் கூடும். இவ்விதமாகப் பிரயோஜனமற்ற சொற்களையே சொல்லிக்கொண்டு காலம் போக்குவதில் கிராம

வாசிகளுக்கு நகரவாசிகள் தோற்றவர்களில்லை. ஜான் மோர்லி துரையவர்கள் பாஷையைப் பற்றிச் (Morley's Studies in Literature) செய்துள்ள உபந்நியாஸ மொன்றில் வருஷ வரும்படியில் ஆயிரத்தி லொரு பாகங்கூட புத்தகங்களில் செலவழிக்காதவர்கள் அநேகர் இருக்கிறார்களென்றும், காலம் போவதை யெண்ணி தினம் அரைமணி நேரமாவது ஒருவன் படித்தால் ஒரு வருஷத்தில் எவ்வளவோ படித்து விஷயங்கள் தெரிந்து கொள்ளலாமென்றும், ஆன்மாவுக்கு உறுதி பயப்பதும், வாழ்நாளைக் கழிப்பதில் நமக்குத் தெரியவேண்டிய பொதுவிதிகளைச் சொல்லக் கூடியதுமான பழைய நூல்களை ஒவ்வொரு வரும் படிக்கவேண்டு மென்றும் பல நியாயங்களுடன் சொல்லியிருக்கின்றார்.

"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்"

என்று திருவள்ளுவர் எடுத்துக் கூறுவது போல உபயோகமற்ற வீண் வார்த்தைகளைத் தவிர்த்துப் பாஷாபிமானம் மேலிட்டு வருவதே நன்மை பயப்பதாகும். பாஷாஞானம் அறிவின் முதிர்ச்சிக்கும், மனத்திண்மைக்கும், நன்னடக்கைக்கும் ஆதாரமாகுமாதலால் அதை யொவ்வொருவருங் கைக்கொள்ள வேண்டும். இவ்விஷயமாக மேற்கூறிய ஜான் மோர்லி பிரபு அடியில் வருமாறு சில வருஷங்களுக்கு முன் சொல்லியிருக்கிறார். "நான் இப்போது சொல்ல வந்தது நீங்கள் பணத்தில் ஆசைவைக்கக்கூடாதென்றல்ல; அல்லது பலர்கூடிப்பேசி ஆனந்திப்பது, அயல்வீட்டுக்காரர்களுடன் அளவளாவுதல், முதலிய பல சௌகரியங்களைப்பற்றியும் கூட்டுறவினாலடையும் பயனைப்பற்றியும் இழித்துக் கூறவும் எனக்கு மனமில்லை. ஆனால் எல்லாப் பொருள்களுள்ளும் மேலானதாக நினைக்கப்படும் நிம்மதியாகிய இன்பமடையவும், தருமம், கடமை முதலிய குறைவின்றி நிலைபெறவும், முக்கியமாக ஒருவனுக்கிருக்க வேண்டியவை யிரண்டுள. அவையாவன; மூதறிவும், நடுவுநிலைமையும். பிறவற்றினும், பாஷாஞானமே இந்த இரண்டு வஸ்துக்களும் நமக்கு எளிதில் கிட்டும்படி செய்கிறது. ஆகையால் நீங்கள் பாஷாஞானத்தை யபிவிருத்தி செய்ய முயற்சிக்கவேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்றார்.

ஸி. பி. வெங்கடரமண அய்யர், பி.ஏ

---

முக்கியமானதை முதலிற் செய்.—பிரதிதினமும் நாம் செய்யவேண்டிய பலதொழில்களையும் சீர்தூக்கிப் பார்ப்போமேயானால் அவைகளில் சில வெகு முக்கியமானவைகளாகவும் மற்றவைகள் சாதாரணமானவைகளாகவும் காணப்படும். எவை முக்கியமானவைகளோ அவைகளைத்தான் நாம் முதலில் செய்யவேண்டும். சிலர் அவ்வண்ணம் நடந்து கொள்ளாமல் சாதாரணமானவைகளை முதலில் செய்வார்கள்; அப்புறம் கை, கால், புத்தி, இவைகளெல்லாம் ஓய்ந்தபிறகு முக்கியமானவைகளை ஆரம்பித்துத் தயங்கி நிற்பார்கள். இதன்றி, சிலர் எப்பொழுதும் சாதாரணமானவைகளையே முதலில் ஆரம்பித்துச் செய்வார்கள். இது இவர்களுடைய புத்தியும் சாதாரணமென்று வெளிக்காட்டுவதுபோலாம். எத்தொழிலால் தங்களுக்குப் பொன்காசு கிட்டுமோ அத்தொழிலை விட்டு விட்டுப் பித்தளைக் காசுகிட்டும் ஒரு சாதாரணத் தொழிலை எவனாவது செய்வானா? இவ்வாறான பழக்கத்தில் நாம் விழாமல் நம்மைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும்.

நீ எந்தக் கருமத்தைத் தொட்டாலும் அதை முதலில் முடித்துவிட்டு மற்றவைகளை ஆரம்பி. அநேகமாய் முடிந்துவிட்டதென்று ஒரு காரியத்தை விட்டுவிட்டு மற்றதை ஆரம்பிக்காதே. அது அநேகமாக முடிந்தபோதிலும் முற்றிலும் முடியவில்லையல்லவா? முக்கியமானதை முதலில் செய்து மற்றவைகளைப் பிந்திச் செய்வதும், தொட்ட காரியத்தை முற்றிலும் முடித்துக்கொண்டு மற்ற காரியங்களில் புகுவதும், நம்முடைய உறுதியையும், எல்லாக் கருமங்களையும், முடிக்கும் சக்தி நம்மிடமிருப்பதையும் வெளிக்காட்டுகின்றன. நீ தொட்ட காரியங்களில் ஏதாவதொன்றை நிறுத்தும்படி வந்தால், அது நீ உத்தேசித்த காரியங்களில் வெகு சொற்பமானவையாகவிருக்கட்டும்.

பண்டித-நடேச சாஸ்திரி.

# ஸம்பாஷணை குறிப்புகள்

## HINTS ON CONVERSATION

கல்வி கேள்விகளிலும் அனுபவத்திலும் மிகத் தேர்ச்சி பெற்றவரான ஒருவர் தன் மகனுக்கு வேண்டிய பல நீதிகளை உபதேசித்திருக்கிறார். அவற்றுள் முக்கியமான சிலவற்றை இதனடியில் எடுத்தெழுதுவோம்:—

ஒரு சங்கத்தில் நீ போய் உட்கார்ந்தால் அடிக்கடிப்பேசவேண்டியதாக நேரிடும். நேரிட்டால் ஒவ்வொரு தடவையும் நீடித்த காலம் பேசாதே. அப்படி நெடுநேரம் பேசாமலிருக்கும் பக்ஷத்தில் ஒருகால் உன் பேச்சு ஜனங்களுக்கு உவப்பாயிராவிடினும் சங்கத்திலிருப்பவர்கள் உன் பேச்சைக்கேட்டுச் சலித்துப்போகாமலிருப்பார்கள். இது ஒரு பெரிய காரியமல்லவா?

நீ ஒரு சங்கத்துக்குப்போய் சேர்ந்தவுடன் அங்கு நடக்கும் நடத்தை, குணம், இவைகளை முதலில் நன்றாய் அறிந்துகொண்டு பேசத்தொடங்குமுன் உன் மனதில் வெளியிடச் சில அபிப்பிராயங்களிருக்கலாம். சங்கத்தில் உன்னைச் சாதாரணமாகப் பேசுகிறவனென்று எண்ணுகிறவர்களைப் பார்க்கிலும் விகல்பமாய்ப் பேசுவதாக எண்ணுகிறவர்களே எப்பொழுதும் மிகுதியாய் இருப்பார்களென்று நீ எண்ணி நடக்கவேண்டும். நீ செய்யும் நிந்தைகள் அவர்களுக்கு எவ்வளவு உயர்ந்ததாயிருப்பினும் அவைகளை அவர்கள் விரும்புவார்களா? ஆகையால் சில நற்குணங்கள் சிறிதும் ஒரு சங்கத்திலில்லையென்பதை நீ முன்னமே அறிந்திருப்பாயானால் அவ்வித நற்குணங்களைப் பற்றிய பேச்சை நீ எடுக்கக்கூடாது. அதுபோலவே யாரிடமாவது ஒரு துற்குணமிருப்பதாய் உனக்கு நிச்சயமாகத் தெரிந்தால் அதைப்பற்றியும் வாயைத்திறக்கலாகாது; ஏனெனில் நீ அவைகளைப் பற்றி என்ன தான் பொதுவாய்ப் பிரசங்கித்தாலும் யாரிடத்தில் இவைகளின் பொதுநிலை மிதமோ அவர்களெல்லாரும் தங்களைப் பற்றியே நீ நோக்கம் வைத்துச் சொல்வதாக எண்ணுவார்கள். இவ்விதமான எச்சரிக்கைகளை நீ உனக்கே உபயோகப்படுத்திக்கொண்டு, வேறு யாராவது பேசும்பொழுது உன்னைக் குறித்தே பேசுவதாக நீசந்தேகப்படக்கூடாது.

பேசும்பொழுது பேச்சின் மத்தியில் அடிக்கடி வேறு விஷயங்களைக் கொண்டுவராதே. அந்த விஷயங்கள் வெகு சுருக்கமாயும் ஸந்தர்ப்பத்தை நன்றாய் ஒட்டினதாயுமிருந்தால் மாத்திரமே அவைகளை நீ சொல்லலாம்; அடிக்கடிக் கிளைக்கதைகளைச் சொல்வது, நீ கேட்டுக்கொண்ட சங்கதியைப்பற்றி மிகுதியாய்ப் பேச யோக்கியதை இல்லாததை வெளியிடுவதாகும்.

நீ சொல்வதை ஜனங்கள் அதிக ஆவலுடன் கேட்கவேண்டுமென்று உனக்கு இஷ்டமிருக்கும்பக்ஷத்தில் அவர்களைக் கையைப்பிடித்து உட்காரவைக்காதே. எப்பொழுது அவர்கள் ஆவலுடன் கேட்கவில்லையோ அப்பொழுதே நீயும் வாயை மூடவேண்டியதுதான்.

சிலபேர்கள் நீடித்துப் பேசுகிறவர்களாயிருப்பார்கள். அப்படி அவர்கள் நீடித்துப் பேசிக்கொண்டிருக்க உனக்கு இஷ்டமில்லாவிட்டால், உன் பக்கத்தில் உட்கார்ந்திருப்பவர்கள் காதில், குசுகுசு என்று மாத்திரம் ஓதாதே. அப்படிச் செய்வாயாகில் அதைவிடப் பேசுகிறவனுக்கு அதிகமான மனவருத்தம் வேறொன்றுமிராது. பேச்சென்பது எல்லாருக்கும் பொதுவான ஆஸ்தியாம். ஒரு சமயத்தில் ஒருவன் புண்ணியவசத்தினால் இந்த ஸம்பத்தை அடைந்திருந்து வாயைத்திறந்து விட்டானானால், நீ மரியாதையாய்க் காது கொடுத்துக் கேட்கவேண்டுமேயன்றி நீ அப்பிரியப்பட்டதாய் காட்டக்கூடாது. அவனிஷ்டப்படி நீ சாந்தமாய் உன்மட்டில் காது கொடுத்துக் கேட்கும் பக்ஷத்தில் பேசுகிறவனுக்கு உன்னிடத்தில் அளவில்லாத பிரியமிருக்கும். அப்படியில்லாமல் அவன் பேசிக்கொண்டிருக்கும்பொழுது நீ எழுந்துபோவதனாலாவது, அல்லது வேறு எவ்விதத்தினாலாவது, அவன் சொல்லுவது உனக்குப்பிரியமில்லையென்று காண்பிப்பாயாகில், அதைவிட அவனுக்கு அவமரியாதை வேறில்லை.

பண்டித நடேச சாஸ்திரீ.

# துர்க்கவதி ராணியர் வீரத்தன்மை

## RANI DURGAVATI: HER HEROISM

வீரத்தன்மை சிரேஷ்டம் என்பர்; அதையுடைய வீரரைச் சாமான்னியராக நினைத்தல் கூடாது. சாதாரண பரகதியினும் சிறந்த பரகதிக்குரியவராவர் அவர். ஆண்பாலரான வீரரைப்பற்றிக் கொண்டாட வேண்டியதாயிருக்க வீரத்தன்மை காட்டிய பெண்பாலரான அரசியர்களை, எவ்வளவுதான் புகழக் கூடாது.

தலைப்பில்கண்ட ராணிதுர்க்கவதி என்னும் புண்ணியவதியும், இத்தகையனர் என்பது கீழ்கண்ட விவரங்களால் தெளிவுறும்.

நாகபுரத்திற்கு வடமேற்குப் பிராந்தியத்தில், நர்மதை ஆறு உற்பத்தியாகிற மேட்டு நிலத்தில், மத்யமாகாணங்களும், மத்திய இந்தியா கார்ய நிர்வாஹ நாடுகளும் கலந்து மயங்கும் பாகத்தில் காண்ட்வானு, என்னும் பிராந்தியம் உண்டு. அவ்விடத்து ஜனங்கள், காண்டர் எனப்படுவர். இங்கே கர்க் என்னும் பழையபட்டணம் இருந்தது;—கர்க-மண்டலர் என்னும் அரசவம்சத்தினர் துரைத்தனம் செய்து வந்தனர்.

கி. பி. 358ஆ ஜாதுராவ் அரசரானர். இவர்க்குப் பின் 40-வது அரசர் ஸங்கராம்-ஸா என்பவர் சுமார் 50 வருஷம்வரை அரசுநடத்தி கி. பி. 1530ஆ இறந்தார். அப்பொழுது டெல்லி நகரத்தில் பேபர் ஆளத்தொடங்கிய காலம். ஸங்கராம ஸாகுமாரர் ஆமன்-தாஸ் சொல்பகாலம் துரைத்தனம் நடத்தி இறந்து விட்டார். இறந்தபின் அவர் குமாரர், தளபதி-ஸா என்றவர் சிங்காசனம் ஏறினர். ஏறும்பொழுது கல்யாணமாகாத சிறுவராயிருந்தார். பக்கத்தில் மோஹோபா (Mohoba) என்னும் மற்றொரு இராஜதானியில், துர்க்கவதி என்னும் இராஜகுமாரி, கல்யாணத்துக்குத் தகுதியான பருவம் அடைந்திருந்தாள். இவள் விசேஷ ரூபவதி எனப்பெயர் பெற்றிருந்தாள். இம்மாதை விவாகம் செய்துகொள்ள, தளபதி-ஸா எண்ணங்கொண்டு, அவர் தரபில் வதுவைப் பேச்சு விட்ட காலத்தில் தாழ்ந்த குலம் என்றும், வேறு நிச்சயம் நிறைவேறிவிட்டதென்றும், பெண்ணுக்குத் தகப்பனர் அப்பேச்சை ஆதரிக்கவில்லை. அக்கன்னியர்க்கு மாத்திரம் தளபதி-ஸாவை அடையவேண்டுமென்று இச்சை இருந்தது. அதன்பேரில் தண்டு எடுத்து வந்து தகப்பனரை யுத்தத்தில் வென்றே, தன்னை மணம் செய்துகொள்ள வேண்டுமென்று, துர்க்கவதி இராஜக்கன்னிகை தெரிவித்ததின்பேரில், தளபதி-ஸா அப்படியே சண்டையில் கன்னிகையைக்கொண்டுபோய் விசேஷ உற்சாகமாக செலவுகளுடன் மணம் செய்துகொண்டார். நான்கு வருஷத்துக்குள் பீர் நாராயணர் எனப்புத்திர சந்தானம் உண்டாய் தளபதி-ஸா காலகதிஅடைந்தார். தம் குமாரர் இளம் பிராயமாயிருந்ததைப் பற்றித் துர்க்கவதி ராணியர் தாமே ராச்சிய பரிபாலனம் ஒழுங்காயும் வலிமையாயும் நடத்தி வந்தனர். துலுக்க ராணியர்களால் (Begums of Bhopal) செம்மையாய் இக்காலத்தில் ஆளப்பட்டு வருகிற போபால் நாடு, துர்க்கவதியரால், ஜெயிக்கப்பட்டு, கர்க-மண்டல இராச்சியத்தில் சேர்க்கப்பட்டது. ஜப்பல்பூர் என்ற ஊருக்குப்பக்கத்தில் ஒரு பெரிய தடாகத்தை இவ்விராணியர் வெட்டுவித்து, அதற்கு ராணிதால் என்னும் பெயர் நாளைக்கும் வழங்கிவருகிறது. (Indore) இண்டூர் அஹலியாபாய் என்னும் அரசி எப்படி பேர் பெற்றுளோ, போபால் ராணியர் எப்படி தம் பரிபாலனத்தை செவ்வையாய் நடத்தி வருகிறரோ, அப்படிப்பட்ட மேலான பராக்கிரமும், புண்ணிய சிந்தையும் அடைந்து துர்க்கவதி பிராட்டியரும் தம் ராச்சியத்தை நடத்தி, தமது பேர் நாளைக்கும் ஞாபகம் இருக்கும்படி, நன்மை புரிந்தனர்.

அதற்குமுன், பல துலுக்க அரசர் இந்த கர்க-மண்டல ஆதிபத்தியத்தை அடக்கப் பார்த்தும் மாளாது போய்விட்டது. டெல்லியில் அக்பர் அரசர் ஆட்சி நடை பெற்று வந்தது. அக்பர் நெறி தவறுத துரையே ஆயினும் வெளி நாடுகளை வெல்ல வேண்டும் என்ற ஆசைப் பற்றற்றவரல்ல.

அக்பர் மகாவரசர் குறிப்பையறிந்த படைத்தலைவர் அஸாப்கான் (Asaf Khan) என்றவர் கற்றுமாணிக்கபுரம் என்ற ஊரில் தம்படையை வைத்திருந்தவர். கர்க-மண்டல இராஜதானிக்குக் கிட்டமான ஊரில் இருப்பவர். அக்பர் ஆட்சி ஆரம்பமாய் 9-ஆண்டுக்கெல்லாம், 10000-கால் படையின

ளைக்கூட்டிக்கொண்டு கர்க மண்டல ராஜதானியைப்பிடிக்க வந்து சேர்ந்தார். திடீர் என படை வரவே குடிகள் வெருண்டனர், துர்க்கவதி-ராணியர், தம் நிலைக்காட்டிக் கொள்ளாமல், 1000 யானை, 100) குதிரை, சொற்ப கால்படையினர் இவர்களைக்கூட்டி, தாமும் யுத்தசன்னதராய், ஈட்டி அம்புகளைப் பூண்டு யானைமேல் உட்கார்ந்து படையை நடத்தினர். (கிறிஸ்தவ சகம் 1565) இப்படை எதிர்நிற்குமா, என அஸாப் கான் கர்வப்பட்டு நினைத்தார்; கைகலந்தது, ராணியருடைய படை வீரத்தனமாய்ப் பாய்ந்து குதித்து வரவே, எதிரியர் கலங்கினர்; கலைந்தனர்; இடம் பெயர்ந்து ஓடினர். ராணியர் ஜனம் வெருட்டிப் போயிற்று, துலுக்கர் ஓட, இராணியர் வெருட்ட வெகுதூரம் சென்றனர். இப்படிக்கு இருக்கையில் பொழுது விழுந்து இருட்டிற்று. சில நேரம் பட்டாளம் இளைப்பாறி மறுபடியும் துலுக்கரை வெருட்டலாம் என்று ராணியர் நினைத்திருந்தார். இதனுள் இந்துக்கள் மனம் மாறிற்று; வெருட்டிப்போக மனவலிவு இல்லாதவராய்த் தளர்ச்சி பெற்றனர். இதனை அறிந்த அஸாப் கான் முன்னடி கொண்டுவராமல் விடப்பட்டிருந்த பீரங்கிகளைத்தருவித்து, மறுநாள் உதயவேளையில் ராணியரைத் தாக்கினன். ராணியரும், குமாரரும், வைகறையில், மலைச்சந்து நுழை ஒன்றில், கலைந்த படையைச் சேர்த்து, ஒழுங்கு படுத்தி எதிர்த்தனர். இரண்டு தடவை துலுக்கர் ஜனம் கலைந்து தளர்ந்தது. துலுக்கர் தாம் யுத்தநோக்கம் துறந்து கும்புகூடி தாய் மகவு இவர்களை எப்படியாவது மாய்க்கக் கருதி வளைத்தனர். இதற்குள், பீர்-நாராயண அரசச் செல்வர்க்குக் காயம்பட்டுக் குதிரைவாயினின்று கீழே விழுந்தனர். உடனே குழந்தையை வெளியில் சிகிச்சையின் நிமித்தியம் அனுப்பி விட்டு, ராணியர் தாம் மாத்திரம் இரணத்தில் நின்று, படையினர் நெருங்கிப் போகப் பார்த்தனர். இந்தச் சமயத்தில் ஒரு அம்பு வந்து ராணியர் கண்ணில் தைத்தது. தைத்ததைப் பிடுங்கினதில், முள்ளு வெளியில் வராவிடினும், அவரைவிட்டு விலக மனம் வரவில்லை. யானைப்பாகர் திரும்பிச் சென்று ஆற்றினைத் தாண்டித் தப்பித்துவிடலாம் என்று சொல்லியும் இராணியர் இணையவில்லை. இந்துப்பட்டாளத்தினர் பின்பக்கத்தில் பெரிய ஆறு; முன்னாள் நீரற்று மணலாயிருந்த ஆறு, திடீர் என வெள்ளப் பெருக்கு எடுத்து நீச்சாய் ஓடிற்று. பின்னிடையவோ வழி கிடையாது. இந்தச் சந்தர்ப்பத்தில், இராணியர் அமரின்பேரில் நோக்கமாயிருந்த வேளையில், மறுபடியும் அம்பு ராணியர் கழுத்தில் வந்து தைத்தது. இனிமேல் உயிர் துறத்தலே தகும் எனக்கொண்டு, யானைப்பாகன் கைவாளைத் தாம் வாங்கித் தம் உடம்பைத் தாமே குத்திக்கொண்டு உயிர் மாய்ந்தனர். பக்கத்திலிருந்த ஆறு படையினரும் தற்கொலை புரிந்தனர்.

இவ்விராணியர் உயிர்விட்ட இடத்து, மலையில் பளிங்குக்கல் மிகுதியாவதுபற்றி, அப்பளிங்கினாலேயே ஸமாதி கட்டப்பட்டுள்ளது. ஸமாதியை நாளைக்கும்பார்க்கலாம். அந்நாட்டினர், துர்க்கவதி இராணியரை இன்னும் நினைத்து வருகிறார்கள், பெயரை வாழ்த்தி வருகிறார். சுமார் 400-ஆண்டுக்கு முன் நடந்த சங்கதியானாலும் நாட்டில் துர்க்கவதி கதை வழங்கப்படுகிறது.

அஸாப்கான் பின்பட்டு ராணியர் இளம்குமாரர் பீர் நாராயணர் மறைந்திருந்த சௌரகர் என்னும் கோட்டையை விரைந்து சென்று, தம் தண்டுகளுடன் முற்றுகையிட்டனர். இரண்டுமாதம் வரையில் முற்றுகை நடந்து கோட்டை பிடிபடாமல் நின்றது. முற்றுகையில் பீர் நாராயணதுரை இளைஞர் கொல்லப்பட்டார். ராஜவம்சத்தில் சேர்ந்த பெண்பாலர் அனைவரும் எதிராளி கையில் அகப்படக்கூடாது என்று ஹடமாய் ரஜபுத்திரப் பெண்பிள்ளைகளுடைய வழக்கப்படி அரண்மனையில் நெருப்பு மூட்டி அதில் தாமே உயிர் விட்டனர். ரஜபுத்திரப் பெண்கள் இவ்வாறு உயிர்விடுவதற்கு ஜோஹர் என்றுபேர். இராணி துர்க்கவதியின் தங்கையரும் பீர் நாராயணர் வதுவை செய்ய நிச்சயமாயிருந்த மற்றொரு பெண்ணரும் நெருப்பில் சாகாமல் பிழைத்த இவ்விருவரையும் அக்பர் இடத்துக்கு அனுப்பினார்கள்.

இந்தக் கதையில் மகிழ்ந்துகொண்டாடவேண்டிய சங்கதிகளாவன: (1) கர்க-மண்டலகுலத்தினர் கி. பி. 400-முதல் 1560 வரையில் க்ஷேமமாய் அரசாண்டது, (2) துர்க்கவதி ராணியர் கல்யாணம், யுத்தத்தின்பேரில் தகப்பனார் சம்மதம் நிறைவேறியது, (3) தள்பதிஸா அல்பாயஸானது, (4) துர்க்கவதிக்கு ஆண் சந்ததி சீக்கிரத்தில் உண்டானது, (5) கணவர் இறந்தபின்னரும் துர்க்கவதி சீராயும்

பராக்கிரமமாயும் துரைத்தனம் செய்தது, (6) அவரால் பெரிய தடாகம் பிரதிஷ்டையாய் அது இன்னும் இருப்பது, (7) துலுக்கர் பொறாமைகொண்டு இராச்சியத்தைக் கட்டிக்கொள்ளப் பார்த்தும் வெகுநாள்வரையில் நிறைவேறாமல் இருந்தது, (8) அக்பர் நாளில் அஸாப் கான் செய்தப் பிரயத்தனம், அதற்குச் சளைக்காமல் துர்க்கவதி போர் ஆடினது, (9) முதல் முதல் ராணியர்ஜனம் வெற்றி யடைந்தது, துலுக்கர் கலைந்து ஓடினது, (10) இரவில் இராணியரைச் சேர்ந்த இந்துக்கள் வெருண்டு பின்னிடைந்தது, பீர் நாராயணர் காயப்பட்டு விலகவேண்டி நேர்ந்தது, (11) இராணியர்க்கும் அம்பு இரண்டு தடவை தைத்தது, (12)-பின் பக்கத்து ஆறு தெய்வீகமாய் இரவில் வெள்ளம் பெருக வாய்ந்தது, (13) இராணியர் தாமே குத்திக்கொண்டது, (14) பீர் நாராயணர் கொல்லப்பட்டது, (15) மற்பு அரசக்குலத்துப் பெண்கள் நெருப்பு வைத்துக் கோட்டையை எரியச் செய்து தங்கள் மானத்தைக் காப்பாற்றிக்கொண்டது. இச்சங்கதிகள் அற்புதங்களாம்.

டி. ஆர். ராமநாதய்யர், பி.ஏ., எல்.டி.

---

கௌரவமான மாதிரிகள்.—இது இக்காலத்து நாகரிகத்துக்கு மாத்திரமல்ல, எக்காலத்திலும் ஒருவனுக்கு இவ்வுலகவாழ்க்கையில் மேன்மேலும் மரியாதையை விளைவிக்குமாகையால், எல்லாரும் அவசியமாக அப்பியசிக்க வேண்டும். நிஜமாகவே அதிக சக்தியில்லாதவர்கள், கௌரவமான மாதிரிகளைப் பழகிவருவதால், தங்களுக்கு மேலானவர்கள் தங்களைக் கண்டு மயங்கும்படி செய்து விடுவார்கள். ஒருவன் தான் நடந்துகொள்ளும் மாதிரி வெகு கௌரவமாயிருந்தால், அவனுக்கு எவ்வளவு திறமையிருக்கிறதோ, அதற்குப் பதின்மடங்காம், நன்கு மதிக்கப்படுவான். உலகத்தில் அநேகம் பெயர்கள் அதிசீக்கிரத்தில் முன்னுக்கு வருவது கௌரவமான மாதிரிகள் அவர்களிடம், மற்ற குணங்களுடன், அதிகமாக விருப்பதாற்றான். என்ன சிலாக்கிய குணங்களிருப்பினும், சிலர் அநியாயமாக அடங்கி கீழ் ஸ்திதியிலிருப்பது, இக்கௌரவமான மாதிரிகள் இல்லாத காரணத்தாற்றான். S. M. N.

# இயற்கை அற்புதங்கள்

**WONDERS IN NATURE**

## XVI. தண்ணீர்: தாங்கு குணம்

**WATER: BUOYANCY**



தண்ணீரின் ஐந்தாவது அற்புத குணத்திற்குத் தாங்கு குணம் என்று பெயர். இது தண்ணீரில் இருக்கிறது என்பதை நாம் எளிதில் அறியலாம். தண்ணீரில் சடை, மரத்துண்டு முதலிய இலேசான வஸ்துக்களைப் போட்டால் மேலே மிதக்கின்றன. உள்ளே முழுகிப்போகக்கூடிய, கல், இரும்பு முதலிய பதார்த்தங்களைத் தண்ணீரில் போட்டு அவைகளைத் தூக்கிப்பார்த்தால், அவைகள் நிறை குறைந்துவிட்டதுபோலக் காணப்படுகின்றது. கிணற்று மரக்காலை நன்றாக அடிவரை எட்டும்படி விட்டு வெளியில் இழுப்போமாகில் தண்ணீர் மேல் மட்டம் வருகிறவரையில் லேசாகவும் பின்னர் அது அதிக கனமாகவும் காணப்படுகின்றது. இதுபோலவேதான் குளம் அல்லது ஆறுகளில் தண்ணீர் எடுக்கும் பொழுதும் தண்ணீருள்ளிருக்கும் வரையில் குடம் இலேசாகவும், வெளியே வந்ததும் கனமாகவும் காணப்படுகின்றது. மேலும் முற்கூறிய சடை முதலியவற்றை தண்ணீருள் அழுத்திப் பிடித்தால் அவை நமது கையை வந்து அழுத்துகின்றன, அவைகளைவிட்டுவிட்டால் வேகமாக மேலேகிளம்பி தண்ணீர் மேல்மட்டத்தில் வந்து மிதக்கின்றன. இந்த அனுபவங்களிலிருந்து தண்ணீருள் ஓர் வஸ்துவை அழுத்தினஉடன் ஏதோ ஒன்று அதைத் தாங்கி நிற்க, இருவர் சேர்ந்து தூக்கும் பாரம் ஒவ்வொருவ

னுக்கும் குறைந்து விட்டதாகத் தோற்றுவது போல, நமக்கு வஸ்து நிறையில் குறைந்துவிட்டதாகக் காணப்படுகின்றது. இந்தக் குணத்திற்கே தாங்து துணம் என்று பெயர். இந்தக் குணம் சடை முதலிய இலேசான வஸ்துக்களைத் தண்ணீருள் அழுத்துங்கால் கண்ணுக்குப் புலப்படும், மற்றைய முழுதும்வஸ்துக்கள் விஷயத்தில் நிறைக்குறைவு ரூபமாக அவைகள் தூக்குபவர் கைக்குப் புலப்படும் இருக்கின்றது. மேலும் முற்கூறியதிலிருந்து தாங்கு குணத்தின் அளவு வஸ்துவின் நிறைக்குறைவே என்பது விளங்கும்.

இந்தத் தாங்கு குணத்தை அளப்பதற்குத் தண்ணீரின் மூலமாக வஸ்துக்களின் பருமனை அறியும் வழி முக்கியம். அது பின்வருமாறு, தண்ணீரில் ஓர் வஸ்துவை அழுத்தினால், தண்ணீர் மேலே உயருகிறது. முன்னிருந்த உயரத்திற்கும் பின்னிருந்த உயரத்திற்கும் இடையில் உள்ள தண்ணீரின் பருமன் உள்ளே அழுத்தப்பட்ட வஸ்துவின் பருமனுக்கு ஸரியாகத்தான் இருக்கவேண்டும் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். தண்ணீருள் வஸ்து போய் கொஞ்சம் இடத்தைப் பிடித்துக்கொண்டு விட்டபடியால், அவ்வளவு பருமனுடைய தண்ணீர் வேறு அவ்வளவு இடத்தைப் பிடித்துக்கொள்ள வேண்டியது. முன்னிருந்ததைவிடப் பின்னர் தண்ணீர் மேல்மட்டம் ஏறுவதால் முன் மட்டத்திற்கும் பின் மட்டத்திற்கும் இடையிலுள்ள தண்ணீரின் பருமன் அழுத்தப்பட்ட வஸ்துவின் பருமனுக்கு ஸரியாக இருத்தல் வேண்டும். ஆகவே அழுத்தப்படும் வஸ்துவால் தன் பருமனுக்கு ஸமமான அளவு உள்ள தண்ணீர் இடம் மாற்றப்படுகிறது. இந்த அதிகத் தண்ணீருக்கு இடம்மாறும் தண்ணீர் என்று பெயர். இதன் பருமன் தண்ணீருள் அழுந்தும் வஸ்துவின் பருமனுக்கு ஸரி. ஒருவஸ்துவின் பாதிபாகத்தைத் தண்ணீருள் அழுத்தினால் இடம் மாறு தண்ணீரின் பருமன் அதற்குத் தகுந்தபடி இருக்கும், முழுவதும் அழுத்தினால் அது முன்னிருந்ததைப்போல இரண்டுமடங்கு ஆகும். இந்த விஷயத்தின் ஸஹாயத்தால் தண்ணீரில் முழுகும் வஸ்துக்களின் பருமனை எளிதில் கண்டுபிடிக்கலாம். இதற்காகவே (அவுன்ஸ்கிளாஸ் போன்ற) அளவுகள் குறிக்கப்பட்ட அளவு உருளைப்பாத்திரங்கள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. இதில் இடசத அம்ச அளவுகள் ஒழுங்காகக் குறிக்கப்பட்டிருக்கின்றன. இதில் 60-அளவு வரையில் தண்ணீரை விடுவோம். பின் எர் கரடுமுரடான ஓர் சிறு கல்லை இதனுள் போடுவோம். தண்ணீர் 65-வரையில் ஏறினால் உடனே கல்லு 5-இடசத அம்ச அளவு உடையது என்போம். மிதக்கும் வஸ்துக்களுக்கு இவ்வளவு எளிதில் பருமன் கண்டுபிடித்துவிட முடியாது. ஓர் மிதக்கும் வஸ்துவைத் தண்ணீரில் போட்ட உடன் தண்ணீர் 60-லிருந்து 62-க்கு ஏறினால், தண்ணீருள் அழுந்திய வஸ்துவின் பாகம் 2-இடசத அம்ச அளவு உடையது என்று அறியலாம். இந்த வஸ்துவின் பருமன் உணரவேண்டுமாகில் இதைத் தண்ணீருள் முழுத்தக்கூடிய கல்லை எடுத்து முதலில் அளவு உருளைப் பாத்திரத்தில் 50-லிருக்கும் தண்ணீரில் போடவேண்டும். 54-வரைத் தண்ணீர் ஏறினால், கல் 4-இடசத அம்ச அளவுடையதாகும். பின்னர் சிறு நூலால் கல்லை மிதக்கும் வஸ்துவோடு கட்டித் தண்ணீருள் இரண்டையும் முழுகவிடவேண்டும். தண்ணீர் 60-க்கு ஏறினால் கல்லும் மிதக்கும் வஸ்துவும் சேர்ந்து 10-இடசத அம்ச அளவுஉடையதாகும். ஆதலால் மிதக்கும் வஸ்து (10—4) அல்லது 6-இடசத அம்ச அளவு உடையதாகும். இவ்வாறு தண்ணீரில் கரையாத எந்தவஸ்துவினது பருமனையும் அறியலாம்.

முன்னரே ஒருவஸ்துவைத் தண்ணீருள் முழுத்துங்கால் அதில் ஏற்படும் நிறைக்குறைவே தண்ணீரின் தாங்கு குணத்தின் அளவு என்று கூறினோம். அதை இங்கு அளக்கப்புகுவோம். ஒருதட்டு சிறிதாயும் அடியில் கொக்கியுடையதாயும் உள்ள தராசு ஒன்றை எடுத்துக்கொள்வோம். இதற்குத் திரவ நிறைத்தராசு என்று பெயர். சிறிய தட்டின் கொக்கியிலிருந்து ஒரு சிறு கல்லைத் தொங்கவிட்டு அதை முதலில் நிறுப்போம். பின்னர் சிறிய தட்டில் ஓர் சிறு அளவு உருளைப்பாத்திரத்தை வைத்து அதற்கும் தடைகட்டுவோம். பின்னர் வாய் அகன்ற அளவை உருளைப்பாத்திரத்தில் ஓர் அளவு வரையில் (40-இடசதஅம்ச அளவு என்போம்.) தண்ணீர்விட்டுச்சிறு தட்டடியில் கொண்டுவந்து, கல் தண்ணீரில் உடனே நீண்ட தட்டு இறங்கும். இதனாலேயே தண்ணீருக்குத் தாங்குகுணம் உண்டென்பது விளங் தண்ணீர் மத்தியில் நிற்கும்படி வைப்போம். முழுவதும் முழுகி பாத்திரத்தில் எங்குந் தாக்காது

கும். இப்போதுஅடிப்பாத்திரத்தில்தண்ணீர்48-இடசத அம்ச அளவுக்குப் போயிற்று என்றால் கல், 8-இடசத அம்சஅளவு உடையது என்பதாகும். மெதுவாகச் சிறு தட்டின்மேலிருக்கும் பாத்திரத்துள் தண்ணீரை விடுவோம். இங்கு எட்டாவது அளவிற்குத் தண்ணீர் வந்து எட்டியதும் திராசு ஸமமாகிவிடும். இதனால் கல்லின் மேலுள்ள தாங்கு குணம் 8-இடசத அம்ச அளவுடைய தண்ணீரின் நிறைக்கு ஸமம்: அதாவது கல்லின் பருமனுடைய தண்ணீரின் நிறையே கல்லின்மேல் தாக்கும் தாங்குகுணம் என்பது வெளியாகும். ஆனால் கல்லின் அளவு தண்ணீரே கல்லை முழுத்துங்கால் இடம்மாறும் தண்ணீர். ஆதலால் ஓர்வஸ்துவைத் தண்ணீருள் மூழ்த்தினால் அதன்மேல் உண்டாகும் தண்ணீரின் தாங்குகுணம் அதனால் இடம் மாறும் தண்ணீரின் நிறைக்கு ஸமம் என்று தெரியவரும்.

மிதக்கும் வஸ்துவின் விஷயத்தில் ஓர் அற்புதம் காணப்படும். முன்போன்ற சோதனையை ஒரு சடையைக்கொண்டு செய்வோம். அதன் முழுகிய பாகத்தின் அளவு எவ்வளவோ அவ்வளவு உள்ள தண்ணீரின் நிறையே அதன் தாங்குகுணம் என்பது வெளிவரும். உடனே அடிப்பாத்திரத்தை எடுத்துவிட்டுச் சடையை அவிழ்த்து நீண்ட தட்டில் போட்டு அதிலிருக்கும் தடையைத் தவிர மற்றைய கனங்களை எடுத்துவிடுவோம். தராசு ஸமமாகவே இருக்கும். இதனால் சடையைத் தண்ணீரில்போடுங்கால் அதன் முழுநிறையே அதன்மேல் உள்ள தாங்குகுணத்தின் அளவு: அதாவது சடையைத் தண்ணீரில் போட்டால் அது தன் முழுநிறையையும் இழக்கின்றது என்பது வெளியாகும். ஆகவே தண்ணீரில் மிதக்கும் வஸ்துக்கள் எல்லாம் தமது முழுநிறையையும் இழக்கின்றன; இந்தநிறையே அதன்மேலுள்ள தாங்குகுணத்திற்கு ஸமம்: இந்த நிறை மிதக்கும் வஸ்துவின் முழுகிய பாகத்தின் அளவு எவ்வளவோ அவ்வளவு உடைய தண்ணீரின் நிறை: இந்தத் தண்ணீரே இடம்மாறு தண்ணீர் என்பவை தெரியவருகின்றன.

இம்மாதிரி வஸ்துக்களுக்குத் தண்ணீரில் முழுத்தப்படுங்கால் அதன் தாங்கு குணத்தால் தம்பருமனுக்கு ஸமமான பருமனுடைய(அதாவது இடம்மாறு) தண்ணீரின் நிறை எவ்வளவோ அவ்வளவு நிறை குறையும் என்பதை ஆதியில் ஸைரக்யூஸிலுள்ள (ஸிஸிலித்தீவில் உள்ள ஓர் பட்டணம்) ஆர்கிமீடீஸ் என்ற ஓர் தத்துவசாஸ்திரி ஆராய்ந்து அறிந்தார். ஆதலால் இந்த உண்மைக்கே ஆர்க்மீடீஸ் ஸித்தாந்தம் என்று பெயர். இவருக்கு முதலில் இந்தத் தாங்கு குணத்தின் அளவு முழுத்தப்படும் வஸ்துவின் பருமனைப்பொருத்ததே ஒழிய அதன் நிறையைப் பொருத்ததல்ல என்று தோன்றிய மாதிரியைப்பற்றி ஓர்கதை உண்டு. ஹைரோ என்ற ஸைரக்யூஸ் அரசன் பொன்னால் ஓர் கிரீடம் செய்யும்படி ஓர் தட்டானுக்கு உத்தரவு அளித்தான். தட்டான் கொஞ்சநாளில் உத்தரவுப்படி கிரீடத்தைக் கொண்டுவந்து கொடுக்க அதில் கொஞ்சம் வெள்ளி கலந்திருக்குமோ என்ற ஸந்தேகம் அரசனுக்குப் பிறந்தது. இதை உள்ளபடி அறிய முடியாது அரசன் ஆர்க்மீடீஸிடம் இதை ஒப்புவித்து முடிவு செய்யும்படி உத்தரவளித்தான். ஆர்க்மீடீஸ் இதில் முயற்சித்துக்கொண்டிருக்கையில், ஒருநாள் ஆற்றில் ஸ்நானம் செய்யுங்கால் ஓர் எண்ணம்தோன்ற திடீரென்று நிர்வாணமாக 'கண்டுபிடித்துவிட்டேன்! கண்டுபிடித்துவிட்டேன்!' என்று கூவிக்கொண்டு வெளியிலே ஓடி வந்தாராம். உடனே வீடு சென்று ஓர் நல்ல தங்கத் துண்டை எடுத்து தண்ணீரில் நிறுத்து அதன் நிறைக்குறைவைக் கண்டுபிடித்துத் தங்கம் தன் நிறையில் $\frac{1}{19}$ குறையும் என்று கண்டார். பின்னர் அரசன் கிரீடம் தன் நிறையில் $\frac{1}{19}$ விட அதிகமாகக் குறைவதைக் கண்டு இதில் ஏதோ கலப்பிருக்கிறது என்று நிரூபித்தார். தட்டானுக்குத் தகுந்த தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வாறு ஆர்க்மீடீஸால் கண்டறியப்பட்ட இந்தத் தாங்குகுணத்திற்கும் தண்ணீருள் உள்ள மேல்நோக்க அழுத்தத்திற்கும் உள்ளவித்தியாஸத்தை நன்றாகத்தெரிந்துகொள்ளவேண்டும். தாங்குகுணம், ஓர் வஸ்துவை தண்ணீருள் போடுங்கால் அந்த வஸ்துவின்மேல் தாக்குவது. இது வஸ்துவின் நிறையைப் பொருத்ததல்ல. அதன் முழுகிய பாகத்தின் பருமனைப் பொருத்தது. முழுகும் வஸ்து பாத்திரத்தில்படாது, எந்தஆழத்திலிருந்தபோதிலும்அதன் மேலுள்ள தாங்குகுணம்மாறாமலே இருக்கும். இதன் அளவு முழுத்தியிருக்கும் வஸ்துவால் இடம்மாறும் தண்ணீரின் நிறை. மேல்நோக்க அழுத்தம் தாங்குகுணத்தைப்போல மேலேநோக்கியிருந்தபோதிலும் முழுத்தப்படும் வஸ்துவோடுஸம்பந்தப்பட்டதன்று

தண்ணீருள் ஒவ்வொருஇடத்திலும்இருப்பது. அது ஆழம் அதிகமாக ஆக அதிகமாகும் தன்மையுடையது. முழுத்தப்படும் வஸ்துவின் மேல் தாக்கும்மேல் நோக்க, கீழ்நோக்க, பக்க அழுத்தங்கள் சேர்ந்து உண்டாவதே தாங்குகுணமாதலில் மேல் நோக்க அழுத்தம் தாங்குகுணத்தின் ஓர் பாகமே ஒழிய வேறல்ல.

ஆகவே ஓர் வஸ்துவைத் தண்ணீரில் போட்டு நடுவில் உள்ளே நிறுத்தினல் அதன்மேல் உள்ள அழுத்தங்களால் முடிவாக உண்டாகும் தாங்குகுணம் அதை, நேரே மேல் நோக்கியும், அதன் நிறை அதைக் கீழ்நோக்கியும், தள்ளுகின்றன. ஆகவே தாங்குகுணம் வஸ்துவின் நிறையைவிடக் குறைந்திருப்பின் வஸ்து கீழே முழுகிப்போய்ப் பாத்திரத்தடியில் நிற்கும். தாங்குதுணம் நிறையை விட அதிகமானல் வஸ்துமேலே நோக்கிக்கிளம்பும். இதன் மேல்பாகம் நீர் மட்டத்தைத் தாண்டத் தொடங்கியதும் தண்ணீருள் முழுகியிருக்கும் பாகம் வரவாக் குறைந்துகொண்டே வரும். அப்பொழுது அந்த வஸ்துவின்மேலுள்ள தாங்குகுணம் வரவாக் குறைந்துகொண்டே வரும். முடிவில் இரண்டும் ஸமமாகுங்கால் வஸ்து மேலே கிளம்பாது நின்று மிதக்கும். ஆகவே வஸ்து அசையாது மிதக்குங்கால் முழுகிய பாகத்தால் உண்டாகும் தாங்குகுணம் வஸ்துவின் நிறைக்கு ஸமமே. அசைவற்று மிதக்கும் வஸ்துவைச் சற்றுத் தண்ணீருள் அழுத்தினல் முழுகும் பாகம் அதிகப்பட தாங்குகுணம் வஸ்துவின் நிறையைவிட அதிகரித்துவிடும். உடனே வஸ்துமேலே கிளம்பி முன்நிலைக்குப்போய் விடும். அந்த வஸ்துவைச் சற்று உயர்த்தினல் முழுகும்பாகம் குறையத் தாங்குகுணம் வஸ்துவின் நிறையைவிடக்குறையும்ஆதலால்வஸ்துகீழேஅழுந்தி முன்னிலைக்கே போகும். ஆகவே மிதக்கும் வஸ்துக்களில் தாங்குகுணம் நிறைக்கு ஸமமாக இருந்தால்தான் அவை அசையாமல் மிதக்கும். ஆதலால், அசையாமல் மிதக்கும். ஒரு வஸ்துவின் மேலுள்ள தாங்குகுணம் அதன் நிறைக்கு ஸமமாக இருத்தல் வேண்டும். தண்ணீருள் இருக்கும் வஸ்துவின் நிறையும் அதன் மேலுள்ள தாங்குணமும் ஸமமாக இருப்பின் வஸ்து தண்ணீருள் விட்ட இடத்தில் எல்லாம் நிற்கும். ஊர்க்காய்க்குப்போடும் எலுமிச்சம் பழங்களை ஜலத்தில்போட்டுச் சுடவைக்குங்கால் அவைகளுள் உஷ்ணஸமயத்தில் இரண்டொன்றுதண்ணீருள்நடுவில்கீழும்போகாதுமேலும் போகாதுநிற்பதைசிலர்பார்த்திருக்கலாம். இந்தவிடத்தில்தான்நிறையும்தாங்கு குணமும் ஸமமாக இருப்பதுமுற்கூறியவிஷயங்களோடுதாங்குகுண அளவை ஸம்பந்தப்படுத்திநோக்கில்பின்வருவனதெரியவரும் தண்ணீருள் முழுத்தப்பட்டிருக்கும் வஸ்துவின் நிறை, தன்னளவு உள்ள தண்ணீரின் நிறையை விட, அதிகமாயிருப்பின் வஸ்து உள்ளே முழுகும்: குறைந்திருப்பின் வஸ்து மேலே கிளம்பி ஒழுங்குப்படி மிதக்கும்: அதற்கு ஸமமாக இருப்பின் வஸ்து தண்ணீருள் எங்கு நிறுத்தினலும் நிற்கும்.



வஸ்துபரிமாணம் குறையாதிருக்க தாங்குதுணத்தால் குறையும் நிறை எங்கு மாயமாக மறைந்துவிடுகின்றது என்ற சங்கை பிறக்கும். இதைத் தீர்க்கப் பின்வரும் சோதனையைச் செய்வோம். முன்னெடுத்துக் கொண்ட திரவ நிறைத்தராசை எடுத்து, அதன் சிறுதட்டில் முன்போல சிறு அளவைப் பாத்திரத்தை வைப்போம். நீண்டதட்டில் வாயகன்ற அளவைக்குழாயில் 30 வரையில் நிற்கும்படி தண்ணீரைவிட்டு, சிறு தட்டில் நிறையிட்டுத் தராசை ஸமப்படுத்துவோம். பின்பு கயிற்றில் ஓர் கல்லைக்கட்டி அதைத் தராசில் படாமலும், தண்ணீருள் பாத்திரத்தைத்தொடாமலும், மூழ்கியும் இருக்கும்படி ஓர் தாங்கு கருவியிலிருந்து தொங்கவிடு

வோம். உடனே தண்ணீரின் நிறை அதிகரிக்கும். பாத்திரத்தில் தண்ணீர் 36 வரையில் ஏறியிருப்பின் கல் 6-இடசத அம்ச அளவுடையது என்பது தெரிய வரும். சிறு தட்டிலுள்ள பாத்திரத்தில் தண்ணீரை விடுவோம். இது அறு அளவு வந்ததும் தராசு ஸமமாகும். இதனால் கல்லின் பருமனுக்கு ஸம மான அளவுடைய தண்ணீரின் நிறை பாத்திரத்தில் அதிகமாகிவிட்டது என்பது வெளியாகும். அதாவது பாத்திரத்துள் கல்லின் இட அளவு உடைய தண்ணீரை விட்டதற்கு ஸமம் என்பதே. ஆகவே கல்லிழக்கும் நிறை தண்ணீர் பெற்றது. இதைமுன் செய்த சோதனையோடு பொருத்திப்பார்த்தால் பின்வரும் உண்மை வெளியாகும்: ஒரு வஸ்துவைத் தண்ணீருள் அழுத்தி அந்த வஸ்துவை மாத்திரம் தனிமையாக நோக்கில் நிறையில் குறைந்ததாகவும், பாத்திரத்தையும் தண்ணீரையும் மாத்திரம் தனியே நிறுத்தால் முன் குறைந்த அவ்வளவு நிறை அதிகமாக இருப்பதாகவும் காணப்படும். இரண்டையும் சேர்த்து (தண்ணீரையும் வஸ்துவையும் முதலில் வெவ்வேருக வெளியிலும், பின்னர்வஸ்துவை தண்ணீருள்போட்டும்) நிறுக்கில் யாதொரு நிறைக்குறைவும் காணப்படாது. வஸ்து இழந்த கனத்தைத் தண்ணீர் பெறுகின்றதே இதற்குக்காரணம்.

தண்ணீர்போன்ற எண்ணெய், பால், பாதரஸம் முதலிய திரவபதார்த்தங்களிலும் இந்தத் தாங்கு குணம் உண்டு: முற்கூறிய ஆர்க்கிமீடீஸ் விதிதாந்தமும், மிதக்கும் ஒழுங்கும் உண்டு. இந்த விஷயத்தையும் இதிலிருந்து வெளியாகும் விஷயங்களையும் பின்னர் கூறுவோம். இவைகள் வாயுவுக்கும் உண்டு. காற்றெடுக்கும் கருவியின் மேல் தட்டில் ஓர் சிறுதராசைவைத்து அதில் ஒரே நிறையுள்ள இரும்புத்துண்டை ஓர் தட்டிலும், சடையை மற்றொரு தட்டிலும் வைத்துத் தராசை ஸமப்படுத்துவோம். பின்னர் இதை ஓர் கண்ணாடிப் பாத்திரத்தால் மூடி உள்ளிருக்கும் காற்றைக் கூடியவரையில் எடுத்துவிடுவோம். உடனே சடையின் நிறை அதிகமாகிவிட்டதுபோலக் காணப்படும். இதிலிருந்து ஸாதாரண ஸமயத்தில் சடை இழந்திருக்கும் நிறை, இரும்பு இழந்த நிறையைவிட அதிகம் என்று தெரியவரும். இது சடையின் பருமன் அதிகமாயும் இரும்பின் பருமன் குறைவாயும் இருப்பதற்குத் தகுந்தபடி இருப்பதால் வாயுவிலும் திரவ வஸ்துக்களிலிருப்பதுபோலத் தாங்குகுணம் இருக்கின்றது என்பது தெரியவரும்.

பருமன்—Volume.
இடம்மாறும் தண்ணீர்—Displaced water.
அளவு உருளைப் பாத்திரம்—Graduated cylinder.
அளவு—Metre.
இட சத அம்ச அளவு—Cubic centimetre.
திரவநிறைத்தராசு—Hydrostatic balance.
நிறை—Weight.
கனம்—Gramme.
வஸ்து பரிமாணம்—Mass.
தாங்கு கருவி—Stand.
காற்றெடுக்கும் கருவி—Air-pump.
விதிதாந்தம்—Principle.
குவிந்த—Convex.
குழிவான—Concave.

**நீட்டல் அளவு—Length**

1 அளவு—$39\frac{4}{5}$ அங்குலம்
[10 ஸஹஸ்ர அம்ச அளவு—1 சத அம்ச அளவு
10 சத அம்ச அளவு—1 தச அம்ச அளவு
10 தச அம்சஅளவு—1 அளவு
10 அளவு—1 தச அளவு
10 தச அளவு—1 சதஅளவு
10 சத அளவு—1 ஸஹஸ்ர அளவு
10 ஸஹஸ்ர அளவு—1 மஹா அளவு]

**நிறை அளவு—Weight**

1 கனம்—1 சத அம்ச இடம் சுத்த ஜலத்தின் நிறை
[10 ஸஹஸ்ர அம்சகனம்—1 சத அம்சகனம்
10 சத அம்ச கனம்—1 தச அம்ச கனம்
10 தச அம்ச கனம்—1 கனம்
10 கனம்—1 தச கனம்
10 தசகனம்—1 சத கனம்
10 சதகனம்—1 ஸஹஸ்ர கனம்
10 ஸஹஸ்ர கனம்—1 மஹா கனம்]

**இடம்—Litre**

(1000 சத அம்ச இடம்)—1.இடம்

இதையும் கனம்அளவு இவைகளைப்போல எடுத்து விஸ்தரிக்கலாம்.

# குமார ஸம்பவம்

**BIRTH OF KUMARA**

பண்டித நடேசசாஸ்திரியாரால் மொழிபெயர்ப்பு

(முன் தொடர்ச்சி)

53. அவ்விடத்தில் பிரம்பாலாகிய ஆஸனங்களில் அம்மாமுனிவர்களை ஹிமவான் இருக்கச்செய்து அவர்கள் உத்தரவுப்படி தாமும் உட்கார்ந்து அஞ்சலி பந்தம் பண்ணிக்கொண்டு பின்வருமாறு பேசலுற்றார்:—

54. "முனிவர்களே! தங்களை நான் இன்று கண்டுகொள்ளும்படி பெற்ற பாக்கியமும், நான் எதிர்பார்க்காமல் தாங்களே யிவ்விடம் வரும்படி நான் அடைந்த ஸம்பத்தும், மேகங் காணமல் மழை பொழிந்ததுபோலும், பூப்பூக்காமல் பழம் பழுத்ததுபோலும் எனக்கு விளங்குகின்றது.

55. தாங்கள் இன்று என்மேல் கருணைபுரிந்த கடாக்ஷத்தால் நான் என்னை, ஒரு மூடன் திடரென்று புத்திமானுய்விட்டால் எவ்வாறு தன்னை எண்ணிக்கொள்வானே, அதுபோலும் இரும்புமயமாயிருந்த ஒரு பொருள் ஒரே நொடியில் தங்கமாய் மாறினல் அது எவ்விதப் பெருமை அடையுமோ அதுபோலும் எண்ணிக்கொள்ளுகின்றேன்.

56. இன்று முதல் எல்லாப் பிராணிகளும் தங்கள் தங்கள் பரிசுத்தப்பதவியை வேண்டி என்னை நாடிவரும் மகிமையை நான் அடைந்துவிட்டேன். எனெனில் தங்களைப்போன்ற மாமுனிவர்கள் எங்செங்கு ஒரு நிமிஷகாலமாவது வாஸம் செய்கின்றார்களோ அவ்விடம் தீர்த்தம் என்ற மகிமையை அடைகின்ற தன்றோ.

57. அந்தண உத்தமர்களே! நான் பரிசுத்தமடைந்திருக்கின்றது இரண்டு மகிமையாற்றான் என்று நான் எண்ணியிருக்கின்றேன். அவைகள் யாவை எனில் என் தலையில் கங்கையின் பிரவாஹம் விழுவதாலும், தாங்களிப்பொழுது காலலம்பிய ஜலம் என் வீட்டில் விழுந்ததாலும் தான்.

58. எனக்கோ என்தேகம் இருவித அமைப்பாக விருக்கிறது. அசையும் தேகம் (ஜங்கமம்) ஒன்று; அசையாத்தேகம் (ஸ்தாவரம்) மற்றொன்று. இவ்விருவித தேகங்களையும் நான் உங்களுக்கு ஊழியம் செய்வதில் நான் அமர்த்தியிருக்கின்றேன். அசையுந் தேகம் உங்களுக்கு ஏவல் செய்வதற்கும் அசையாத் தேகம் உங்கள் கால் மிதிப்பதற்குமாக நீங்கள் அனுக்கிரகம் பண்ணவேண்டும்.

59. என் தேகம் எல்லாத்திசைகளிலேயும் வியாபித்து நின்ற போதிலும் என்னிடம் இப்பொழுது பொங்கியிருக்கும், உங்களுக்கு ஊழியம் செய்யவேண்டும் என்ற அவாவானது தங்கிநிற்க என் தேகத் திலிப்பொழுது இடமில்லை.

60. வெகு ஒளிபொருந்தி பிரகாசிக்கும் உங்கள் தர்சனத்தால் எனது குகைகளுக்குள்ளிருக்கும் இருள் அகன்றதுடன் என் உள்ளத்தில் ரஜோகுணத்தையும் தாண்டி நிற்கும் தமோகுணம் என்ற அக்ஞான இருளும் நீக்கப்பட்டது.

61. என்னுலுங்களுக்கு வதாவது ஒருகாரியம் ஆகவேண்டியிருக்கும் என்பதை நான் நினைக்க இடமேயில்லை. அப்படி ஏதாவது ஒருக்காலிருக்குமாயின் இது ஏன் என்னல் முடித்துக் கொடுக்கமுடியாமலிருக்கும். அதெல்லாம் ஒன்றுமல்ல. தாங்கள் இங்குவந்ததெல்லாம் என்னைப் பரிசுத்தம் பண்ணி வைக்கவேண்டியே என்று நான் நினைக்கின்றேன்.

62. உங்களுக்கு ஒன்றிலும் ஆசை என்பதில்லை. என்றிருப்பினும் ஏதாவது ஒருவித அடிமைத்தொழிலில் என்னை ஏவவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனெனில் சேவகர்கள் தங்கள் யஜமானர்கள் அதிகமாகத் தங்களை ஒருவேலையில் ஏவினுற்முன் தங்களிடம் அவ்வெஜமானர்கள் அதிக கருணை வைத்திருப்பதாக எண்ணவிடமுண்டு.

63. இதோ நானிருக்கின்றேன். அதோ என் மனைவி யிருக்கின்ருள். எங்கள் வமிசத்தின் உயிராக விளங்கும் எனது குமாரத்தியும் இதோ விருக்கின்ருள். எங்களுள் யாரைக்கொண்டு உங்களுக்கு என்ன காரியமாகவேண்டும் கட்டளையிடுங்கள். ரத்தினம் முதலிய வஸ்துக்களைப்பற்றி எனக்கு அவசியமேயில்லை. எல்லாம் உங்களுடையதாகவே நீங்கள் எண்ணலாம்."

64. இவ்வாறு இமவான் சொல்லவே அதே பொருளை மறுபடியும் இரண்டாவது தடவை எடுத்துச் சொல்லுவதுபோல் அவர் பேசின சப்தம் குகையாகின்ற முகத்தினின்று எதிரொலியால் வெளிக்கிளம்பிக் கேட்கலாயிற்று.

65. அவ்வாறு இமவான் பேசி ஒய்ந்ததும் முனிவர்கள் தங்களுக்குள் பேசுவதில் முதல்வரான அங்

கிரஸரை மறுமொழி சொல்ல ஏவலானார்கள். அவர் அம்மலைகளின் மன்னவரை நோக்கிப் பின்வருமாறு பேசலானார்:—

66. "இதோநான், அதோ என் மனைவி" என்று தாங்கள் சொன்ன சொற்கள் எல்லாம் உங்களுக்கு முற்றிலும் தகும். இவைகளுக்கு மேலாகவும் செய்ய உமக்கு இஷ்டமுண்டு. ஏனெனில் உமது மனம் உமது சிகரங்கள்போல் உயர்ந்து ஓங்கி நிற்கின்றது.

67. ஸ்தாவர உருவங்கொண்ட விஷ்ணுபகவான் நீங்கள் என்று கூறியிருப்பது உண்மையே. *உமது வயிற்றிலன்றோ அசைகின்றவும் அசையாதவுமான அநேக வஸ்துக்கள் தங்கியிருக்கின்றன.

68. நீங்கள்மட்டும் பாதாள உலகம் முதல்பற்றி இப்பூமியின் பாரத்தைத் தாங்கிக்கொண்டு ஓங்கி நிற்காவிடில் இப்பாரத்தைத் தாமரைத்தண்டுபோல் மிருதுவாக விருக்கும் தமது படங்களால் ஆதிசேஷன் எவ்வாறு தாங்கிக்கொள்ளுவார்.

69. உமதுகீர்த்திகளாகின்ற நதிகள் ஒருஇடத்திலும் குறுகாதவைகளாய் வெகு வெண்மையானவைகளாய் சமுத்திரத்தின் அலைகளாலும் தடுக்க முடியாதவைகளாய் வெகு புண்யமானவைகளாகையால் உலகத்தையே பரிசுத்தம் பண்ணுகின்றவைகளாய் விளங்குகின்றன. அப்படியே உமது ஸந்ததிகளும்.

70. கங்கைக்கு விஷ்ணு பாதத்திலிருந்து பெருகுவதால் எவ்வளவு மகிமை உலகத்தாரால் சொல்லப்படுகின்றதோ அதே மகிமை மறுபடியும் அக்கங்கை இரண்டாவது தடவை உம்மிடமிருந்து உதிப்பதால் அடைந்திருக்கின்றதன்றோ.†

71. குறுக்கும் நெடுக்கும் கீழுமாய் விஷ்ணுபகவான் வியாபித்தார் என்ற மகிமை அவருக்குத் திரிவிக்கிரமாவதாரம் பண்ணினபொழுது விளங்கலாயிற்று. அவ்விதமகிமை உம்மிடத்தில் எப்பொழுதும் இயற்கையாகவே யிருக்கின்றதல்லவா.

72. யாகத்தில் கொடுக்கப்படும் யஜமான பாகம் வாங்கிக்கொள்ளும் யோக்கியதை (இந்திராதிகளுக்குப்போல)உமக்கேயிருக்கின்றமையால் மேருவுக்குப் பெருமையான தங்க சிகரம் கிடைத்தும் பிரயோஜனமற்றதாய்ப்போயிற்றன்றோ.‡

---

* ஸ்தாவராணும் ஹிமாலய கீதை

† ஆகையால் நீங்கள் எங்களைப்போன்ற முனிவர்கள் நாடி வரவேண்டிய தீர்த்த ரூபமுள்ளவர் என்றபடி. விஷ்ணுகரணத்துக் கொப்பானவர் என்றபடியுமாம்.

‡ மேருவுக்குத் தங்க சிகரம் இருந்தும் நீர்தான் பெரியவர் என்று முனிவர்கள் இமவானைப் புகழ்ந்தபடி அதற்கு ஆதாரமாக யக்ஞபாகம் இமவானுக்காகையால் அவர் தான் பெரியவர் என்று அங்கிரஸர் எடுத்துக் காட்டலானார்.

73. உமது கடினகுணங்கள் எல்லாவற்றையும் உமது ஸ்தாவர சரீரத்தில் (இலை முதலியவைகளில்) விட்டிருக்கின்றீர். நல்லோர்களுக்குப் பணிவிடை செய்ய பக்தியால் வணங்கி நிற்கும் இச்சரீரத்தில் அவைகள் ஒன்றுமில்லையன்றோ.

74. ஆகையால் நாங்களிப்பொழுது வந்திருக்கும் காரியத்தைக் கொஞ்சம் சொல்லுகின்றோம். கேளுங்கள். அது தங்களுக்குத்தான் முக்கியமான காரியம். உமக்குப்பெருமை கிடைக்கும் வழியைச் சொல்லப்புகுவதால் இக்காரியத்தில் நாங்கள் ஸம்பந்தப் பட்டவர்களாகின்றோம்.*

75. எவரொருவர் பாலசந்திரனை வஹிப்பதுடன் மற்றவிதப் பொருளை ஒரு பொழுதும் குறிக்காது அணிமா முதலிய எண்வித ஐசுவரியம் நிரம்பியதாய் விளங்கும் ஈசுவரன் என்ற பதத்தையும் வஹித்திருக்கின்றாரோ,

76. ஒன்றுடன் மற்றொன்று பரஸ்பரம் இணங்கும் சாமார்த்திய முள்ளவைகளாய், பிருதிவீ, அப்பு என்ற எண்ணுருவம் கொண்டவைகளாய் காணப்படும் எண் மூர்த்திகளால் (அஷ்டமூர்த்தி) எவரொருவர் நாம் நம்முன்னர்க்காணும் இவ்வுலகத்தை வழியில் ரதத்தைக்குதிரைகள் வகிப்பதுபோல வகிக்கின்றாரோ,

77. எவரொருவரை யோகிகள் பரமாத்மஸ்வரூபீ என்று தேடிக்கொண்டும் வித்வான்கள் மறுபிறப்பை நீக்கி வைக்கும் வழி என்று சொல்லிக்கொண்டும் இருக்கின்றார்களோ,

78. அவ்வீசுவரர், இவ்வுலகத்தில் நடக்கப்பட்ட எல்லாவித நடவடிக்கைகளுக்கும் சாட்சியாயிருக்கப்பட்டவர் எங்களிடம் ஸமாசாரம் சொல்லியனுப்பி உங்கள் கன்னிகையைத்தமக்கு விவாகம்செய்து கொடுக்கக்கேட்கின்றார்.

79. மொழியின் பொருளை மொழியுடன் சேர்த்து வைப்பதுபோல உமது பெண்ணை நீங்கள் சம்புவுடன் சேர்த்து வைக்கக் கடவீர்களாக. நல்ல புருஷனிடம் ஒப்பிவைக்கப்பட்ட கன்னியின் விசாரம் தந்தைக்கு நீங்குமன்றோ !

80. சராசரங்களாய் இவ்வுலகத்தி லிருக்கும் எல்லாவஸ்துக்களும் உமது குமாரியை ஒருதாயாகக்

---

* பயனை அனுபவிக்கப் போகிறவர்கள் நீங்கள்தான் என்றபடி

கருதட்டும். ஏனெனில் ஈசன் இவ்வுலகத்துக்கே தந்தையல்லவா?

81. தேவர்கள் முதல் முதல் ஈசனுக்கு வணங்கி அதன் பின்னர் தங்கள் கிரீடக்காந்தி உமது கன்னிகையின் பாதங்களில் பரவ அவ்வம்மணிக்கு வணங்கட்டும்.

82. கலியாணப்பெண்ணோ உமை; அப்பெண் கன்னிகாதானம் பண்ணிக்கொடுக்கப்பட்டவர் நீங்கள்; பெண்ணைக் கேட்கவந்தவர்கள் ஸப்தரிஷிகளாகிய நாங்கள்; மாப்பிள்ளை ஜகதீசன்;—இவைகளிவ்வளவும் உமது குலத்தின பெரும் சிறப்புக்காகவன்றோ.

83. தாம் ஒருவரையும் புகழாது மற்றெல்லோராலும் புகழப்பட்டவராய் தாம் ஒருவரையும் வணங்காது மற்றெல்லோராலும் வணங்கப்பட்டவராய் இவ்வுலகம் முழுமைக்கும் குருவாய் நிற்கும் ஈசனுக்கு உமது பெண்ணைக் கொடுப்பதால் நீங்கள் குருவாகும் பெருமையை அடையுங்கள்."

84. இவ்விதமாய் மாமுனிவர்கள் சொல்லிக்கொண்டிருந்தபொழுது இமவானுக்குச் சமீபத்தில் கீழ் நோக்கின முகத்துடன் நின்றுகொண்டிருந்த பார்வதி விளையாட்டாக ஒரு தாமரைமலரைத் தனது கையில் பற்றி அதிலிருந்த இதழ்களை எண்ணிக்கொண்டிருந்தாள்.

85. இமவான் தமது மனோரதம் நிரம்பிற்றென்று கருதிக்கொண்டபோதிலும் தமது மனைவியாகிய மேனையின் முகத்தைப் பார்க்கலானார். கன்னிகளைக் கலியாணம் செய்து கொடுக்கும் விஷயத்தில் புருஷர்கள் பெரும்பாலும் தங்கள் மனைவிகளுடைய நோக்கப்படி செய்கின்றவர்களன்றோ!

86. மேனையும் தனது கணவன் மனோரதங்கள் எல்லாம் சரிவர நிரம்பியதாக எண்ணினாள். உத்தமிகள் தங்கள் கணவர்கள் மனத்தின் நோக்கப்படி நடந்து அவ்வாறே நடக்கும் குணமுள்ளவர்களல்லவா!

87. இனிமேல் நாம் செய்யவேண்டிய காரியம் இதுதான் என்று இமவான் தமது உள்ளத்தில் கருதி தாம் பேசிமுடித்ததும் மங்கலசிங்காரம் செய்துகொண்டிருந்த தமது பெண்ணைக் கையால் எடுத்துக்கொண்டு,

88. "குழந்தாய்! வா. இங்கு நான் உன்னை ஜகதீசனுக்குக் கலியாணம் செய்துகொடுக்க நிச்சயித்துவிட்டேன். உன்னைக்கேட்க மாமுனிவர்கள் வந்திருக்கின்றார்கள். இன்றுதான் கிருகஸ்தன் அடைய விரும்பும் கன்னிகாதான பயனை நான் அடைந்தேன்"

89. என்று பார்வதியிடம் சொல்லி முனிவர்களை நோக்கி இமவான் "முக்கண்ணருடைய மனைவி உங்கள் எல்லாரையும் இதோ வணங்குகின்றாள்" என்றார்.

90. அவ்வாறு இமவான் சொல்லவே தாங்கள் கருதிவந்த காரியத்தை அவ்வண்ணம் மேன்மையாகச் செய்து முடித்ததற்கு முனிவர்கள் அவரை துதித்து எப்பொழுதும் முன்னிற்கும் பயனுடன் கூடியவைகளான ஆசீர்வசனங்களை அம்பிகையை உத்தேசித்து முனிவர்கள் விடுத்தார்கள்.

91. தான் அவ்வாறு நமஸ்காரம் செய்யும் பொழுது தனது காது தங்கக்குண்டலங்கள் நழுவவிளங்கிய பார்வதியை, அருந்ததீ தேவி, பார்வதி என்ன வெட்கபட்டபோதிலும் தூக்கித் தமது மடியின்மேல் உட்காரவைத்துக் கொண்டார்.

92. தமது பெண்ணைவிட்டுப் பிரிந்து போகப்போகின்றோம் என்ற எண்ணத்தால் கொஞ்சம் துக்கத்துடன் கண்களில் நீர்த்ததும்ப காணப்பட்ட மேனையைப் "பயப்படவேண்டாம். மற்றொரு மடந்தையை நாடாத மாப்பிள்ளை கிட்டினார்" என்று சொல்லி அருந்ததி ஆற்றலானாள்.

93. மாவுரி உடுத்த அம் மாமுனிவர்களை இமவான் 'என்று முகூர்த்தம் வைத்துக்கொள்ள விடை கொடுக்கின்றீர்கள்?' எனவே அவர்கள் 'இன்று நான்காம் நாள்' என்று சொல்லி அவ்விடம் விட்டுப் பிரயாணப்பட்டார்கள்.

94. ஸப்தரிஷிகள் அவ்வண்ணம் இமவானிடம் விடைபெற்றுப்புறப்பட்டு மறுபடியும் சிவபெருமானிடம் வந்து, தாங்கள் போன காரியத்தை முடித்து வந்ததாக அவரிடம் சொல்லி அவரிடம் விடைபெற்று ஆகாயமார்க்கமாய் தங்களுடைய இருப்பிடத்துக்குச் சென்றார்கள்.

95. பார்வதியைச் சீக்கிரம் அடைய அதிக அவாவுடனிருந்த ஈசனும் அம்மூன்று நாட்களையும் வெகு சிரமத்துடன் கழிக்கலானார். இவ்விதமான ஆசை ஐம்புலன்களையும் வெற்றிகொண்ட ஈசனையே வாட்டிற்றென்றால் மற்றெவனைதான் வதைக்காமல் விடும்!

## உமையின் விவாகம் என்ற
## ஏழாவது சருக்கம்

1. அம்மூன்று நாட்களும் கழிந்தபிறகு இமவான் சுக்கிலபட்சத்தில் பார்வதியின் ஜன்மலக்கினத்திலிருந்து ஏழாவது லக்கினங்கூடிய திதியில் தமது பந்துக்களுடன்கூட தமது பெண்ணின் கலியாண ஸம்ஸ்கார விதியை ஆரம்பிக்கலானார்.

2. ஒவ்வொரு வீட்டிலும் அவ்வோஷதி பிரஸ்தத்தில் பெண்பிள்ளைகள் தாங்கள் பார்வதியின்மேல் வைத்திருந்த அபிமானத்தால் கலியாணத்துக்கு என்று நடத்தவேண்டிய ஸந்தோஷ அலங்காரங்களை நடத்துவதில் மெய்ம்மறந்திருந்தார்கள். குடிகள் அந்நகரத்தில் தங்கள் அரசரிடம் அதிக அன்பு பாராட்டி வந்தவர்களாகையால் அரண்மனைக்கும் மற்ற வீடுகளுக்கும் கலியாண அலங்கார விஷயத்தில் ஓர்வித வித்தியாஸமு மில்லாமலிருந்தது.

3. ராஜ வீதிகளெல்லாம் மந்தாரை மலர்கள் பரப்பப்பட்டு ஒவ்வொரு உயர்ந்த இடங்களிலும் கொடிகள் தூக்கிக்கட்டப்பட்டுப் பிரகாசிக்கின்ற தங்கத் தோரணங்கள் எங்கும் விளங்க அந்நகரம் அன்று தன்னிடம் விட்டு அங்குவந்த சுவர்க்கலோகம் போல் காணலாயிற்று.

4. இமவானுடையகுஞ்சுகுழந்தைகளில் பார்வதி ஒருவள் என்றாலும் அவள் அக்காலத்தில் இமவானுக்கு வெகுநாள் பிரிந்து கண்ட குழந்தைபோலும், உயிர்போய் திரும்பிப் பிழைத்த பெண்போலும் அவள் விவாக சமயம் ஸமீபிக்கவே அதிக அன்புக்குப் பாத்திரமானாள்.

5. பார்வதியை ஒவ்வொரு பதிவிரதையும் தங்கள் மடியில் உட்காரவைத்து ஆசீர்வாதம் பண்ணலானார்கள். நகையின்மேல் நகை அவளுக்கு ஸன்மானம் வரலாயிற்று. இமவான் வம்சத்தைச் சேர்ந்த பந்துக்களுக்கு வெவ்வேறு குழந்தைகள் இருந்தனவென்றாலும், எல்லாப் பந்துக்களுடைய அன்பும் பார்வதியினிடம் ஒரேவிதமாக விளங்கலாயிற்று.

6. சூர்யோதயமான மூன்றாவது முகூர்த்தத்தில் சந்திரனுடன் உத்திரபல்குனநக்ஷத்திரம் சேர்ந்திருந்த சமயத்தில் அநேக குழந்தைகளுக்குத் தாயார்களாக விருந்த சுமங்கலிகள் பார்வதியின் மேனியை சிங்காரிக்க ஆரம்பித்தார்கள்.

7. பார்வதி வெண்கடுகு அமைந்து அருகம்புல் கலந்துவைக்கப்பட்டிருந்த பட்டாடையை இடுப்பில் உடுத்து கையிற் விற்பற்றி* மங்கலஸ்தானத்துக்காக சிங்காரம் பண்ணிக்கொண்டபொழுது அச்சிங்காரத்துக்கே ஒரு அழகாக விளங்கினாள்.

8. கலியாண சிங்காரத்துக்காக வென்று பார்வதி வழக்கப்படி வில்ஒன்றை கைப்பற்றியபொழுது சுக்லபக்ஷத்தின் ஆரம்பத்தில் சூரியனுடைய கரத்தால் (கிரணத்தால்) விருத்தி அடைகின்ற சந்திர ரேகைபோல் விளங்கலானாள்.

9. ஸுமங்கலிகள் பார்வதியை மங்கலதைலம் தேய்த்து அதன்மேல் லோத்திரப் பொடிபூசி குளிப்பாட்டி அவள் மேனியில் உயர்ந்த வாசனைப்பொடி பூச ஸ்நானத்திற்குத் தக்க ஆடையுடன் ஸ்நானம் செய்யும் அறைக்குள் அழைத்துப்போனார்கள்.

10. அங்கு நல்முத்து மாலைகள் அழகாய் எங்கும் தொங்கிக்கொண்டிருந்த வைடூரிய பீடத்தில் பார்வதியை உட்காரச்செய்து மங்கல வாத்யங்கள் கோஷிக்க பொற்குடங்களில் ஏற்கனவே எடுத்து வைக்கப்பட்டிருந்த தீர்த்தங்களால் அவ்வுத்தமிகள் அம்பிகைக்கு ஸ்நானம் பண்ணிவைத்தார்கள்.

11. மங்கல ஸ்நானத்தால் வெகு பரிசுத்தமான மேனியுடன் விளங்கிக்கொண்டும், மணக்கோலத்துக்கேற்ற ஆடையணிந்தும் நின்ற பார்வதி, மேகங்கள் நன்றாக மழைபொழிந்து ஓய்ந்தவுடன் அழகாய் நாணற் பூத்து விளங்கும் பூமியுகம்போல் சோபிக்கலானாள்.

12. ஸ்நானஞ்செய்த விடத்திலிருந்து அம்மடந்தைகள் பார்வதியை தங்கள்மேல் அணைத்துக்கொண்டு ஏற்கனவே அஸ்மானகிரி கட்டப்பட்டு மாணிக்க ஸ்தம்பங்கள் நான்கு நாட்டப்பட்டு மங்களாஸனம் போடப்பட்டு கலியாண சடங்குகள் நடத்த திட்டாணி கட்டப்பட்டு விளங்கிய முகூர்த்தப்பந்தலில் அழைத்துவந்து உட்காரவைத்தார்கள்.

13. பார்வதியை சிங்காரிக்க நியமிக்கப்பட்டிருந்த பெண்டுகள் அக்கலியாணவேதியில் பார்வதியை கிழக்குமுகமாக உட்காரவைத்து அவள் முன்பாக நின்று எல்லாவித ஆபரணங்களும் தங்களிடம் சித்தமாயிருந்தபோதிலும் அவளுடைய இயற்கையான அழகானது அவைகளை எல்லாம்

* ராஜகன்னிகைகள் விற்பிடித்து ஸ்நானம் செய்யவேண்டும் என்பது விதியாம்.

விட அதிகமாயிருந்தபடியால் கண்கள் கூச்சலடைந்தவர்களாய் இன்னத்தைக்கொண்டு அவளை இன்னும் அதிக அழகாகச் செய்யலாம் என்பது தெரியாமல் ஒரு நிமிஷம் திகைக்கலானார்கள்.

14. ஒரு சுமங்கலி வாசனைப்புகை ஏற்றிப் பார்வதியின் தலைமயிரை உலர்த்தி அருகம்புல்லும் வெண்மதூக மலரும் பின்னலில் வைத்து வெகு அழகாகப் பார்வதியின் கூந்தலைப் பின்னலானாள்.

15. வெண் அகில் குழம்பைப் பார்வதியின் மேனியில் வாஸனைச் சாந்தால் அம்மேனியின் மேல் சில மடந்தைகள்சித்திரமெழுதலானார்கள். அவ்வாறு சிங்காரிக்கப்பட்ட பார்வதியின் தேகம் சக்கிரவாக பறவைகள் உட்கார்ந்திருக்க சோபிக்கும் கங்கையின் மணற்குன்றுகளைவிட அதிக சோபையுடன் விளங்கிற்று.

16. கூந்தல் சிங்காரிக்கப்பட்ட அழகு பெற்ற பார்வதியின் முகம் வண்டு உட்காரப்பெற்றச் சோபிக்கும் தாமரை மலர் மேகரேகையால் கொஞ்சம் மறைக்கப்பட்டுச் சோபிக்கும் சந்திரபிம்மம்இவைகளுடைய அழகையும் கீழாக்கிற்றென்றால் அதற்கு அழகில் ஒப்பிட்டுக் கூற ஒன்றுமே யில்லாமலிருந்தது என்று சொல்லலாம்,

17. 'லோத்திர'ச்சாந்தால் முதல் முதல்பரிசுத்தமாகப் பண்ணப்பட்டுக் கோரோசனைச் சாந்துப்பூச்சால் அதிகசெவந்திருந்தபார்வதியின் கன்னங்களில் அவள் காதுகளின்மேல் வைக்கப்பட்டுத் தொங்கிக்கொண்டிருந்த யவாங்குரங்கள் (நாத்துகள்) தங்களுக்குள்ள நிறத்தைக்காட்டிலும் மேலான நிறம் அடைந்திருந்தபடியால் பார்ப்பவர்கள் கண்களைப் பறிக்கின்றவைகளாய் விளங்கின.

18. வயிற்றில் அழகாய் மடிப்புகள் விழுந்து வெகு புஷ்டியுடன் விளங்கிய பார்வதியின் உதடுகள் தேன்மெழுகால் தடவப்பட்டதும் தங்கள் இயற்கை நிறத்தினின்று கொஞ்சம் நீங்கி பட படவென்று அசையும்பொழுது அம்மாது சிரோன்மணி அடைந்திருந்த இளமைப்பருவத்தின் பயன் சமீபித்தது என்பதைத் தெரிவிக்கலாயின.

19. அப்பார்வதியின் தோழிகள் அவள் பாதங்களில் செங்குழம்பு ரஸத்தால் அலங்காரம் செய்யும்பொழுது பரிகாசமாய் உன் கணவருடைய தலையிலிருக்கும் சந்திரகலையை இப்பாதங்களினால் நீ உறைவாய் என்று ஆசீர்வசனத்துடன் சொன்னபொழுது பார்வதி வாயைத்திறவாமல் தமது கையிலிருந்த புஷ்பஹாரத்தால் அவர்களை அடிக்கலானாள்.

20. பார்வதிக்குக் கண்களில் மையிடவந்த மடந்தை நன்றாக மலர்ந்திருக்கும் கருநெய்தல் பூவின் இதழ்போல் பிரகாசித்த அவளுடைய கண்களின் அழகைக்கண்டு திகைத்து அவளுடைய கண்களுக்கு அதிக அழகை உண்டாக்கக் கருதி அம்மையையிடும் புத்தியைவிட்டு ஒழிந்து கலியாணகாலத்தில் ஒரு மங்கலமான அலங்காரம் அது என்று செய்யலானாள்.

21. ஆபரணங்களினால் நன்றாகச் சிங்காரிக்கப்பட்ட பார்வதி மலர்ந்து கொண்டிருக்கும் மலர்களினால் கொடி எவ்வாறு விளங்குமோ அதுபோலும் உதயமாகும் நட்சத்திரங்களினால் இரவு எவ்வண்ணம் சோபிக்குமோ அதுபோலும், வந்து கரைகளோரம் உட்கார்ந்து கொண்டிருக்கும் நீர்ப்பறவைகளால் நதி எவ்வாறு சோபிக்குமோ அதுபோலும் சோபிக்கலானாள்.

22. பார்வதி கண்கொட்டாதபடி நிலைக் கண்ணாடியில் வெகு சோபையுடன் விளங்கும் தனது அழகைப்பார்த்துக்கொண்டு எப்பொழுது சிவபெருமான் வரப்போகின்றார் என்று மனத்தினுள் அவஸரப்படலானாள். உத்தமிகள் தங்கள் மேனியைச் சிங்காரித்துக்கொள்ளுவதின் பயன் தங்கள் அன்பன் தங்களை அவ்வாறு சிங்காரித்துக்கொண்டிருக்கப் பார்க்கவேண்டும் என்பது ஒன்றேதான்.

23, அப்பொழுது மேனை,

24 மங்கலார்த்தமாய் குழைத்து வைக்கப்பட்டிருந்த ஹரிதாலச்சாந்தையும் மனச்சிலைச் சார்தையும் தமது நடு விரலால் குழைத்தெடுத்துக் கொண்டு வெள்ளை தந்த ஓலையிட்டுவிளங்கிய பார்வதியின் முகத்தை கொஞ்சம் நிமிர்த்தி பார்வதிக்கு நினைவு தெரிந்த காலம்முதல் எதானது தமது ஒரே எண்ணமாய் எப்பொழுதும் தமது மனத்தினுள்ளிருந்ததோ அதாகின்ற கலியாணக் கோலத்திற்கிடும் பொட்டைத் தமது பெண்ணின் நெற்றியில் இடலானார்.

25. அதன் பிறகு மேனை பார்வதியின் மணிக்கட்டில் கலியாணக் கங்கணமாகிய சரட்டைக் கட்ட ஆரம்பித்துத் தமது கண்களில் ஆநந்த பாஷ்பம் பெருகவே கட்டவேண்டிய இடம் தவறி அதை

வைக்கத் தமது தாதி அதைத் தன் கைவிரலால் சரியான இடத்தில் அகற்ற அதன்மேல் கட்டி முடிக்கலானர்.

26. பார்வதி புதிய வெண்பட்டாடை அணிந்து தம் மேனியைக் கண்ணுடியில் பார்த்துக் கொண்ட பொழுது நுரைத்திரன் நிரம்பிய பாற்கடற்கரை போலும் பூர்ணசந்திரன் கூடி விளங்கும் சரத்கால ராத்திரிபோலும் சோபிக்கலானுள்.

27. எச்சமயத்தில் எதுசெய்து வைக்கவேண்டுமோ அதைச் செய்து வைப்பதில் வெகு சாமர்த்தியமுள்ள மேனை தமது குலத்துக்கே கீர்த்தி விளைவிக்கத்தோன்றி யிருந்த பார்வதியைத் தாம் எப்பொழுதும் பூஜைசெய்யும் குலதேவதைகளுக்கு நமஸ்காரம்பண்ணும்படி செய்து அதன் பிறகு பதிவிரதைகளையும் நமஸ்காரம் செய்யும்படிப் பார்த்தாள்.

28. அவ்வுத்தமிகள் "உமை தங்களை வணங்கின போது உனது கணவருடைய அன்பு உன்னிடம் ஒருநாளும் குறையாத அன்பாக இருக்கக்கடவது" என்று ஆசீர்வாதம் பண்ணலானுர்கள். ஆனல் அச்சிவபெருமானுடைய பாதி சரீரத்தையே தன்னுடையதாகச் செய்துகொண்ட பார்வதி அவ்வாறு தனது பந்து ஜனங்கள் தனக்குச்செய்த ஆசீர்வாதத்துக்கும் மேலான பதமடைந்தாளன்றே!

29. வெகு சமர்த்தரான இமவான் தன்மனத்தின் உற்சாகத்துக்குத் தக்கபடிக்கும், தனது சம்பத்துக்கு ஏற்றபடிக்கும் தான் அச்சமயத்தில்' பார்வதிக்குச் செய்ய வேண்டியவைகளை எல்லாம் செய்து முடித்துத் தனது நல்லோர்களான நண்பர்கள் நிரம்பிய சபை நடுவே உட்கார்ந்து சிவபெருமானுடைய வரவை எதிர்பார்க்கலானுர்.

30. இவ்வண்ணம் உனக்கு சிங்காரம் நடந்து கொண்டிருந்தபொழுது கைலாயத்தில் சிவபெருமானுடைய கல்யாணத்துக்குத் தக்கபடி அவர் சிங்காரம் செய்துகொள்ள பிராஹ்மி முதலான ஏழு மாதிரிக்களும் சில அலங்காரங்களைக் கொண்டுவந்து முப்புரத்தை முன்பு எரித்த அவர் முன்பாக வைக்கலானுர்கள்.

31. அவ்வாறு அவர்கள் கொணர்ந்து வைத்தார்கள் என்ற கௌரவத்தால் சிவபெருமான் அவ்வலங்காரங்களைத் தமது கையில் தொட்டார் (தரிக்கவில்லை என்றபடி) ஆனல் ஸர்வேசுவரனுயிருக்கும் அச்சிவபெருமானுடைய விபூதி கபாலம் முதலிய வேஷங்களே கலியாணம் செய்துகொள்ளப் போகும் மணக்கோலமாக மாறலாயின.

32. அவரது திருநீற்றுப்பூச்சே அழகான சந்தனப்பூச்சாகவும் அவரிடமிருந்த மண்டைஓடே அழகான கிரீடமாகவும் அவர் உடுத்திருந்த ஆனைத்தோலே ஓரங்களில் அன்னப்பறவை பூ போட்டிருந்த வெண்பட்டாகவும் மாறின.

# இந்துலேகை

(295-ம் பக்கத் தொடர்ச்சி)

## 4-ம் அத்தியாயம்

### காதலர்—பிரிவு

"அம்மா, நாளை சூர்யோதயம் பட்டணம் போகிறேன். தயைசெய்து எனக்கு வேண்டியவற்றையெல்லாஞ் சித்தஞ் செய்து வை. தகப்பனுர் உள்ளே இருக்கிருரா?"

"ஆனல், போவது நிச்சயந்தானே? என்ன, போவதென்று தீர்மானித்துவிட்டனையா?" என்று கேட்டாள் பார்வதியம்மாள்.

"ஆமாம், நிச்சயந்தான். யாதொரு சந்தேகமுமில்லை. நான் காலையில் புறப்படத்தான்வேண்டும்" என்றுன் மாதவன்.

"உன் தகப்பனுர் காலையில் வெளியே போகும் போது உன்னை வரும்படிச் சொன்னர். ஆகையால், போய் உன்தந்தையைக் கண்டுவா" என்ருள் பார்வதியம்மாள்; உடனே மாதவன் கோவிந்தபாணிகருடைய வீட்டிற்குப் புறப்பட்டான்.

கோவிந்தபாணிகர் கொஞ்சம் சரக்குடையவர் தான். மகா யோக்யர். நல்ல புத்திசாலி. தாராள மனதுடையவர். அவர் வீட்டில் அவரை யாச்ரயித்திருப்பவர் ஒருவருமில்லையாதலால் பணச்செலவு அதிகமில்லை. கொஞ்ச காலத்திற்குள் அளவற்ற திரவியஞ் சேகரித்துவிட்டார்.

மாதவன் போனவுடன் பாணிகர் அவனைப் பார்த்து ஸ்நானம் முடிந்துவிட்டதாவெனக் கேட்டார். மாதவனும் ஆயிற்றென்று பதிற் கூறினன். பிறகு கோவிந்தபாணிகர், "நீ நாளைக்குப் போகப்போகிருயோ?" எனக் கேட்டார்.

"அண்ணு, தாங்கள் விடையளித்தீர்களானல், நான் போகிறேன். நான் போகத்தான் வேண்டுமென நினைக்கிறேன்" என்றுன் மாதவன்.

"அவசியமாய் போகவேண்டுமென்று உனக்குத் தோன்றினல், நீ போகத்தான் வேண்டும். உன் வழிச்செலவுக்கும் மற்றுமுள்ள சில்லரை செலவுகளுக்கும் பணம் உன் குடும்பத் தலைவனைக் கேட்க வேண்டியதில்லை. நான் தருகிறேன். உனக்குவேண்டியவற்றை உனக்கு ஒரு ஜதைக்கடுக்கன் வாங்கியிருக்கிறேன். இதோ பார். கெம்பு எப்படியிருக்கிறது?" என்று சொல்லிக்கொண்டு ரூ 500 பெறும்

படியான இரண்டு கடுக்கன்களை அவனிடம் கொடுத்தார். பின்னும் தன் அருமைப் புதல்வனைப்பார்த்து, "அப்பா, கண்மணி, சட்டப்பரீக்ஷையில் அவ்வளவு உயர்வாய்த் தேறியதற்காக உனக்கொரு வெகுமதியளிக்கவேண்டு மென்றிருந்தேன். இதோ இருக்கின்றன அவைகள்" என்று அன்பாய் மொழிந்தார்.

"ஓ! இக்கடுக்கன்கள் மிகவும்அழகாயிருக்கின்றன. உமது பரிசுக்கு நான் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். நீர் மகா தாராளகுணமுடையவர். அண்ணா, உன்னோடு காலைபோஜனம் அருந்த ஆசைப்படுகிறேன். நான்போய்ச் சென்னைக்கொரு கடிதம் எழுதவேண்டும். தபால் வேளையாயிற்று. கடிதம் எழுதிப்போட்டு இதோ ஒரு க்ஷணத்தில் திரும்பி வந்துவிடுகிறேன்." என்றான் வணக்கத்துடன் மாதவன்.

மாதவன் தன் வீட்டினருகே வந்துகொண்டிருக்கையில், இந்துலேகையின் தோழி அம்மு வீட்டினின்று வருவதைப் பார்த்தான்.

"என்ன சமாசாரம்? ஏதாவது விசேஷமுண்டோ?" எனக்கேட்டான் மாதவன்.

ஐயா, என் எஜமானியம்மாள் வீட்டின் ஸ்நானாலயத்திற்குட் போயிருக்கின்றனள். உங்களுக்கு அவகாசமிருந்தால் என்னுடன் வந்துபார்த்துப்போகச்சொன்னாள்" என்றாள் அத்தோழிப்பெண்.

"ஆ அப்படியானால் நிரம்பவும் நல்லது" என்றான் மாதவன்.

"அவளுடன் இன்னும் யாராவது இருக்கின்றனரோ?"

"வேறொருவருமில்லை, ஐயா," என்றாள் அம்மு.

"முன்னேபோ" என்று கூறி மாதவன் அவளைப் பின்றொடர்ந்து சென்றான். அவன் ஸ்நானாலயஞ் சென்றவுடன் இந்துலேகைத் தன் ஓலைகளைக் கழற்றிவிட்டு எண்ணெ தேய்த்துக்கொள்ளச் சித்தமாயிருப்பதைக் கண்டனள். இந்துலேகைத் தன் காதலனைக் கண்டவுடன் ஓலையைத் திரும்ப காதிற் போட்டுக்கொண்டு புன்சிரிப்பாய்ச் சிரித்து நின்றனள்.

மாதவன் ஆவலாய்த் தன் காதற்கிழத்தியை அருகே அழைத்து நன்றாய் ஆலிங்கனஞ் செய்துகொண்டான். இந்துலேகை உடனே தன் நாயகனின் அதரத்தில் ஒருமுத்தமிட்டுவிட்டு, அவனது கைகளினின்றும் மார்புனின்றும் விடுபட முயன்றனள். தன் ஆசைமணாளன் தன்னைப்பின்னையும் அதிகமாய் இறுகத் தழுவுவதைக்கண்டு "என்னை விட்டு விடு, என்னை விட்டு விடு." என்று கூவினாள்.

"நான் நாளையதினஞ் சென்னைக்குப் போகின்றேன்" என்றான் மாதவன்.

"அப்படித்தான் எனக்குங் கேள்வி. ஆனால் ஐகோர்ட் இன்னும் பதினைந்து தினங்களுக்கு மூடியிருக்குமாமே. அது உண்மையா? அப்படியாயின், நீ என் நாளைக்கே செல்லவேண்டும்? உனது பாட்டனார் கோபம் மேலிட்டவராயிருப்பதினால், நீ என்ன, இவ்வளவு அவசரமாய்ப் போகவேண்டும்?" என்றாள் இந்துலேகை.

"நேற்றையதினமவர் ஒரு சபதஞ் செய்துகொள்ளவில்லையா?" என்றான் மாதவன்.

"ஆம். என் சமாசாரம் அவருக்குத் தெரியாது போலும். ஆகையால்தான் இத்தகைய சபதஞ்செய்திருப்பர்" என்று பதில் சொன்னாள் இந்துலேகை.

"உன் சமாசாரம் அவருக்குத் தெரியவேண்டியதேன்? உன் யோசனையை யவர் என் கேட்கவேண்டும்? அவரிஷ்டபிரகாரம் நீசெய்துதான் தீரவேண்டும், மாதவீ!" என்றான் மாதவன்.

"ஆம் அவர் விருப்பத்தின்படிதான் நான் ஒழுகவேண்டும். அதுமாதிரியே நான் செய்வேன். ஆனால் சில விஷயங்களில் என் கோரிக்கைபடியேதான் காரியம் முடியும். அதேமாதிரிதான் நானுஞ் செய்வேன். அச்சில விஷயங்களி லொன்றுதான் இந்தச் சபதமும்" எனக்கூறினாள் இந்துலேகை.

"என் கண்மணியே! என் காதற்களஞ்சியமே! இவ்வாறு நீ பேசுவாயானால் உன் பாட்டனார் உன்னை வீட்டினின்றுந் துரத்தி விடுவார்."

"நல்லது, நேற்றையதினம் நான் மனதிற் வரித்திருக்கும் என் நாயகனைத் துரத்தவில்லையா? நாளையதினம் என்னையுந்தான் துரத்திவிடட்டுமே."

"ஆனால் மாதவி, உன் நாயகன் உன்னைக் காப்பாற்ற வழியற்றிருக்கும்போது................."

"ஆனாலென்ன? உலகத்தில் வீட்டைவிட்டுத் துரத்தப்பட்டவர்களுக்கு ஈச்வரன் சாதாரணமாய் என்ன கொடுக்கிறானோ அவற்றிற்குமேல் அதிகமாய் ஒன்றும் நான் ஆசைப்படவில்லையே. இன்னும் சிறிது நேரமாவது நாம் என் இங்கு தாமதிக்கவேண்டும்? எல்லாருக்கும் நமது உள்ளக்கருத்தை

மரியாதையாய்ச் சொல்லிவிட்டு, நமது விருப்பத்தின்படி நடப்போம். அது நன்றாயிருக்கும்.''

''நாம்செய்ய வேண்டியதைப்பற்றி எல்லாம் முன்னமே தீர்மானித்ததாய் விட்டது. என் மாமனும் அதற்கு இசைந்துவிட்டார். எவரும் எதிர்ப்பாராத இந்தச் சச்சரவு அப்புறந்தோன்றிற்று. இப்போதோ, நமது தீர்மானங்கள் எல்லாம் கலைந்து போயிற்றே.''

''கொஞ்சங்கூட இல்லை. நமது தீர்மானங்களை மாற்ற பிரம்மதேவன் வந்தாலும் முடியாது. நாளை கழித்து என்னை நீ பட்டணம் அழைத்துப்போவதாயிருந்தால், நானும் புறப்படச் சித்தமாயிருக்கின்றேன்.''

மாதவன், ''ஐயோ, அது பெரிய தப்பு தண்டாவாய் முடியுமே. மாதவி, உன்னைவிட்டு ஒரு க்ஷணமாவது பிரிந்திருந்தால் நான் படும் துன்பம் ஈசுவரனுக்கே தெரியும். இத்துன்பமே எனக்குச் சகிக்கக்கூடாததாயிருக்க, ஜனங்கள் என்கண்மணியைப் பற்றி அவதூறாய்ப் பேசினால், என் மனம் எப்படியிருக்கும்! வெயிலிலிருக்கும் புழுப்போல துடிப்பேனே! அத்துன்பம் என்னாலாற்றற்பாலதோ! ஆகையால் நாம் எக்காரியத்தையும் முன் பின் தீர ஆலோசித்துத்தான்செய்யவேண்டும். உனக்குத்தான் திருக்குறள் நெட்டுருவாயிற்றே. அதில்

''எண்ணித் துணிகக் கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு''

என்ற அடிகள் உனக்கு ஞாபகமில்லையா? எவற்றிலும் 'பொறுத்தார் பூமியாள்வார், பொங்கினார் காடாள்வார்.' எக்காரியத்தையுந் தீர ஆலோசித்தே செய்யவேண்டும். சற்று நிதானி, அவசரப்படாதே எல்லாம் நமது பக்ஷமாகவே முடியும். ஐந்து ஆறு தினங்களுக்குமுன் மிஸ்டர் ஜில்ஹேம் எனக்கொரு கடிதமெழுதினார். கவர்ன்மெண்ட் ஸெக்ரடேரியட் ஆபீஸில் 150 ரூபா வேலையொன்று கூடிய சீக்கிரத்தில் காலியாகப் போகிறதாம். அந்த வேலையை எனக்கு இஷ்டமானால் எனக்கே காயம்பண்ணுவதாய் எழுதியிருக்கிறார். நான் ஆகட்டுமென்று சொன்னேன். ஆனால் இன்னும் எத்தனை தினங்கள் காக்கவேண்டுமோ தெரியாது. வேலையாய் விட்டால் மாதவி, உடனே வந்து உன்னைக் கூட்டிப்போகிறேன். என் தகப்பனார் பெரிய பணக்காரரென்பதும் உனக்கும் எனக்கும் எவ்வளவு வேண்டுமானாலும் முகங்கோணாது தருவாரென்பதும் உண்மையே. ஆனால் அப்படிச்செய்வது என் மனதிற்குத் திருப்தியாயிராது. நாம் பிழைக்க ஒரு வேலையுந் தேடிக்கொள்ளாமல், என் காதலியைப் பட்டணமழைத்துப் போவதற்கு என் மனம் ஒப்பவில்லை.''

''மாதவா, என் கண்ணே, என்ன உன்கையில்?''

''என் தகப்பனார் சற்று முன் எனக்கொரு பரிசளித்தார். இரண்டு கெம்பு கடுக்கன்கள். எவ்வளவு அழகாயிருக்கின்றன பார்.''

''இவைகள் என் கண்களிரண்டையும் பறிக்கின்றன. உட்கார், நானே அவைகளை யுன் காதில் போடுகிறேன்.''

மாதவன் உட்கார்ந்தான். இந்துலேகை கடுக்கன்களைக் காதிற் போட்டாள். உடனே மாதவன் எழுந்தான்.

''உட்கார், என்ன அவஸரம் துள்ளிப்போகிறது. நானே உன் தலைமயிரை வாரி முடிபோடவேண்டும். அவைகளை முடித்து ஒரு பக்கம் போட்டு அப்புறம் உன் முகமும் கடுக்கன்களும் எப்படி ஒத்திருக்கின்றனவெனப் பார்க்கவேண்டும்.''

தலையை யொழுங்காய் வாரி முடிபோட்டுவிட்டு இந்துலேகை மாதவன் முகத்தையுற்று நோக்கினள். கடுக்கன்கள் அவன் முகத்திற்கொரு அழகு தந்தனவென்பதற்கடையாளமாக, மார்பு வெடித்துவிடும்படியாய் பெருமூச்செறிந்தாள். உடனே காமநோயின் கொடுமையால், அவனது சிவந்த கன்னங்களில் தன் ஆசைதீர முத்தங்களிட்டாள். மாதவன் ஆநந்த பரவசமானான். அவனை யறியாமல் அவன் உடலம் புளகாங்கிதம் மெய்தியது.

''ஆனால் நீ நாளைக்குப் போய்த்தான் ஆகவேண்டியதுபோலும். லாகாலேஜ் இன்னும் மூன்று தினங்களில் மூடப்படுமென்று மாமா எழுதினாரே. அவரை உடனே புறப்பட்டு வரச்சொல்லவும்'' என்று முணுமுணுத்தாள் இந்துலேகை.

காதலரிருவரும் இவ்வாறு ஸரஸ சல்லாபங்கள் செய்துகொண்டிருக்கையில், லக்ஷ்மிகுட்டியம்மாள் அறையின் கதவண்டை வந்து, ''யார் அங்கே சம்பாஷித்துக்கொண்டிருப்பது'' என்று கேட்டுக்கொண்டே உள்ளே வந்துவிட்டாள். ''உங்களிருவர்க்கும் மான ஈனமென்பது கிஞ்சித்துங் கிடையாதா'' நீங்களிருவரும் பைத்தியம் பிடித்திருக்கி

தீர்கள்போலும். கோவிந்தபாணிகர் தன் மகனை யழைத்துவரும்படி ஒரு ஆளை இங்கே அனுப்பியிருக்கிறார் மாதவா, அவருடன் பகற் போஜனத்திற்கு வருகிறேன் என்று சொல்லிவிட்டு இங்கு வந்து நீ ஸாஸமாடுவதின் அர்த்தமென்ன? நிஜமாய் இந்துலேகைக்கு இன்றையதினம் பசியென்பதே சிறிதுமில்லை. மூட பசங்களா! என் செல்வமே, நீ நாளைக்குச் சென்னைக்குப் போவது உண்மையா?'' என்று ஆசையுடன் கண்டித்தாள் லக்ஷ்மி.

"மணியெத்தனை யிப்போது" என்று கேட்டான் மாதவன்.

"பத்தரையாயிற்று."

"மணி பத்தரையாய்விட்டதா? இன்றைக்கோர் கடிதமெழுதியிருக்கவேண்டும். ஆனால் இப்போது நாழியாய்விட்டது. என் தகப்பனார் கோபமாயிருப்பார். நான் புறப்படுதற்குமுன் உன்னை இன்னொரு தடவை வந்து பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டு வெகு துரிதமாய்த் தன் பிதா வீட்டிற்குச் சென்றனன்.

கோவிந்தபாணிகர் ஒரு வாழையிலை போட்டுக் கொண்டு மாதவனுக்காகக் காத்திருந்தார். மாதவன் வந்தவுடன் அவனுக்குமோர் இலைபோடச் சொல்லிவிட்டு அவனைப்பார்த்து, "பையா, இவ்வளவு நேரமேன்? எங்குச் சென்றிருந்தனை?" எனக் கேட்டார். "நான்ஒருவருடன் பேசிக்கொண்டிருந்ததில் நாழியாய்விட்டது. அண்ணா, தாங்கள் சாப்பிடு நேரமாயிற்றென்பதை மறந்துவிட்டேன். எனக்காகத் தாங்கள் இவ்வளவுநேரம் பசியுடன் காக்க நேர்ந்தது எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது. என்னை மன்னிக்கவும்" என்று வணக்கத்துடன் மறுமொழி கூறினான் மாதவன்.

"உனக்காகமட்டுமல்ல நான் தாமதித்தது. இந்துலேகைக்காகவுந்தான். தப்பிதத்தை உன்மீதுமாத்திரஞ் சுமத்துவது நன்றாயிராது. அடே! கடுக்கனைக் காதிலிட்டுக்கொண்டுவிட்டனையே. இந்துலேகையின் காரியம்போலும் அல்லவா?" என்று சொன்னார் கோவிந்தபாணிகர்.

மாதவன் வெட்கத்தினாலும் வருத்தத்தினாலும் தலை குனிந்துகொண்டு சாப்பிட வாரம்பித்தான்.

சாப்பாடானவுடன், கோவிந்தபாணிகர் தன் மகனை வீட்டினுள்ளே அழைத்துப்போய் மார்போடு மார்த்தழுவி உச்சிமோந்து பின் வருமாறு சொல்லலாயினர்.

"உனக்கு இந்துலேகையைப்பற்றிய கவலை யதிகமாயிருக்கிறது. அதனால் நீ மனந்தளர்ச்சியுறவேண்டிய அவசியமில்லை. நம்பிக்கையாயிரு. எனக்கு அவளுடைய குணாதிசயங்கள் நன்றாய்த் தெரியும். அவளைப்போன்ற மனோதீரமுடையப் பெண் ஒருத்தியையும் யான் இதுகாறுங் கண்டதில்லை. அவளது ரூபலாவண்யத்தைக் கண்டேயன்று அவளுடைய புத்திசாலித்தனத்தையும், நல் நடத்தையையும், மனோதீரத்தையுங் கண்டு நான் அவளைப் பெரிதும் விரும்புகின்றேன். இந்த ஜன்மத்தில் அவள் உன் மீது காதலைமாற்றி பின்னொருவனை மணம் புரிவாளென்று நீ கிஞ்சித்துஞ் சமுசயிக்கவேண்டாம். இதைப்பற்றிக் கவலையை யொழித்திடு. பஞ்சமீனனாகட்டும், அவளுடைய விதியேயாகட்டும், உன்னையும் அவளையும் பிரித்துவைக்க எவ்வளவு முயன்றாலும் அவர்களுடைய பாக்ஷா பலியாது. அவர்கள் இந்த ஜன்மத்திலில்லை, இந்த உலகிலில்லை, அவளுடைய மனோதீரத்தை மாற்றுவது."

மாதவன் தன் தகப்பனாரின் மார்மீது தலையைச் சாய்த்துக்கொண்டு மௌனமாய் இருந்தான்.

கோவிந்தபாணிகர் பின்னும் மாதவனை நோக்கி, "இப்போது உன்னுடன் சீனனையும் அழைத்துப் போக உத்தேசித்திருக்கிறாயா" எனக் கேட்டார்.

"எனக்கதுதான் உத்தேசம். உமக்கு எது உசிதமாய்த்தோற்றுகிறதோ அவ்வாறே செய்கிறேன்." என்றான் மாதவன்.

"உன்னிஷ்டப்படி செய். நீ அவனை யழைத்துப் போனால், வேண்டிய செலவுகளுக்குப் பணந் தருகிறேன்" என்றார் கோவிந்தபாணிகர்.

"அண்ணா, நீ ஏன் தரவேண்டும். என் சிற்றப்பன் தானே கொடுக்கவேண்டும்" என்றான் மாதவன்.

"ஆனால், அவன் மாட்டேனென்கிறான். அவன் கொடுப்பானென்று எனக்குத் தோன்றவில்லை" என்றார் கோவிந்தபாணிகர்.

"அவன் கொடுக்காவிட்டால்................" என்றாரம்பித்தான் மாதவன்.

"அதுதான். அதைப்பற்றிச் [illegible]ண்டையிடாதே. பஞ்சமீனன் குணந்[illegible] உனக்குத்தெரியுமே. அவனுக்குக் கோ[illegible]ய வந்துவிட்டால் தலைகாலொன்றுந் தெ[illegible]றதில்லை. அப்போது தான் செய்வது சரி, தப்பு என்னும் பகுத்தறிவையெல்லாம் அவன் இழ

ந்துவிடுகிறான். ஏதாவது சண்டைசச்சரவு நடந்தால், உலகத்தார் அவன்காரணங்களை நன்கு ஆராய்வதில்லை. சண்டையிற் சம்பந்தப்பட்டவர்களைத் தாறுமாறாய்த் தூஷிப்பதே உலகத்தின் இயற்கை. ஒருவனாவது இவன் நியாயமாய்ச்சண்டையிட்டான், இவன் அநியாயமாய்ச் சண்டையிட்டான் என்பதைக் கருதுவதில்லை. ஆனால் லோகாபவாதம் மிகவுங்கெட்டது" என்றார் அவன் தகப்பனார்.

"அண்ணா, என்னைப்பற்றி இச்செலவு உனக்கு உண்டானது எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது" என்றான் மாதவன்.

"குழந்தாய்! இந்தச் செலவு ஒரு பெரியதா? இச்செலவினால் எனக்கு ஒன்றுங் குறைந்துப் போகவில்லை. உன் குடும்பத்தாருக்கு இருக்கும் அவ்வளவு திரவ்யம் எனக்கில்லையெனினும், உன் குடும்பத்தாரைப்போல அவ்வளவு செலவு எனக்கு இல்லையாகையால் நான் அதிகமாய்ச் சேர்த்துவைக்கிறேன். நான் செலவழிக்கவேண்டியது உனக்கு ஒருவனுக்குத்தானே. அப்படியிருக்க உனது நன்மைக்கும், உனது மனோபீஷ்டங்களை நிறைவேற்றிவைப்பதற்கும் என்செல்வத்தை உபயோகிக்கஎன்ன தடை. உனக்காக எவ்வளவு செலவு நேரிடினுங் கொடுக்க நான்தயாராயிருக்கிறேன். ஆகையால் சீனனை உன்னுடன் அழைத்துப்போ. ஆனால்முதன்முதலில் குடும்பத்தலைவனின் சம்மதத்தைப் பெற்றுக் கொள்.—வேண்டாம்; நீ போகாதே. நான் பையனுடைய தகப்பன் சீனுபட்டரை யனுப்பிக் கேட்டு வரச்சொல்கின்றேன். ஆனால், எப்படியிருந்தபோதிலும் நீ பஞ்சுமீனனிடம் 'போய்வருகிறேன்' என்று கூறி விடைபெற்றுக் கொள்ளவேண்டும். அவன் அப்பொழுது சண்டைக்கிழுத்தால் பதில் வார்த்தையொன்றுஞ் சொல்லாமல் திரும்பிவந்து விடு." என்றார் கோவிந்தபாணிகர்.

"நல்லது அண்ணா, அப்படியே செய்கின்றேன். இன்றிரவு உங்களுடன் சாப்பிட வருகிறேன். எனக்காகத் தாங்கள் கார்க்கவேண்டாம். தங்களுக்கும் எப்போது வேளையோ, அப்போது சாப்பிடுங்கள். நான் வந்து ...ப்பிட்டுப்போகிறேன்" என்றான் மாதவன்.

தந்தைக்கும் மகனுக்கும் இ... சம்பாஷணை நடந்து கொண்டிருக்கும்போது, கோவி...ணிகரைக் கண்டுபோகவந்த சீனுபட்டர் வெளித்தா...வாரத்தில் நின்றுகொண்டிருந்தார். பேச்சு முடிந்தவுடன் சீனுபட்டர் மெதுவாய் இருமினார்.

இருமலைக் கேட்ட கோவிந்தபாணிகர் "யார் அங்கே?" என்று வினவினார்.

"நான்தான்—சீனுபட்டர்."

"உள்ளே வாருங்கள்" என்றார் பாணிகர். உடனே தன் மகனைப்பார்த்து, மாதவா, நாம் அவரைப்பற்றி இப்போதுதான் பேசிக்கொண்டிருந்தோம்."

உடனே அறைக்குள் பிரவேசித்த சீனுபட்டரைப் பார்த்துக் கோவிந்தபாணிகர், "தயைபண்ணி உட்காரவேண்டும்" என்றார்.

"யார் இவர்? மாதவனா? என்ன சமாசாரம்; ஏதோகேள்விப்பட்டேனே. என்னமோ, மாதவனுக்கும் அந்த.........................................க்கும் வாக்கு வாதம் நடந்ததாமே. எஜமானர் முகத்தில் கோபக்குறிகள் மிகுதியாய்க் காணப்படுகின்றன. என்மேலென்ன அவருக்குக் கோபம்? காரணமொன்றும் புலப்படவில்லையே, கோயிலிலிருந்து வந்துகொண்டிருக்கும் போது வழியில் அவரைப் பார்த்தேன். என்னுடன் பேசவேயில்லை. தலை குனிந்துகொண்டு அப்புறம் ஒதுங்கிப் போய்விட்டார். இவ்வளவுகோபம் அவருக்கு வந்ததை நான் ஒருபோதுங் கண்டதில்லை. இதற்குமுன் ஒரு தடவையோ இரண்டு தடவையோ என் மீது அவருக்குக் கோபமுண்டாயிற்று. ஆனால் அவைகளுக்கெல்லாஞ் சரியான காரணங்களிருந்தன. ஆனால், இந்தத் தடவை இவ்வளவு மூர்க்கமாய் இருப்பதற்குக் கிஞ்சித்துங் காரணமில்லையே."

"நீ சீனனின் தந்தையன்றோ? அதுவே போதுமான முகாந்தரம்" என்றான் மாதவன்.

பக்கத்திலிருந்தவர்களெல்லாம் நகைத்தனர். கோவிந்தபாணிகர் சீனுபட்டரைப்பார்த்து, "நீர் இப்பொழுது போய் பஞ்சுமீனனிடம் சீனன் பட்டணம் போகப் போகிறானென்று சொல்லி, அதற்கு அவனுடைய அனுமதியைப்பெற்று வரவேண்டும். மற்றப் பணவிஷயம் ஒன்றையும்பற்றி நீர் அவனைக் கேட்கவேண்டியதில்லை. நான் சீனனுக்கு வேண்டிய பணமெல்லாம் தருகின்றேன் என்று அவனிடஞ்சொல்" என்று கூறினார்.

"அப்பா, அப்பா இப்பொழுதாபோய் அவனிடஞ் சொல்லுகின்றது? ஆனால் சீனனுக்குப்பணம் நானே தருவதாய்ச் சொல்கின்றேன். நான் கொஞ்

சம மரியாதையாய்ச் சொல்லிக்கொள்ள வேண்டும். என்ன சொன்னாலும் ஒன்றுதான். ஒன்றும் வேறு பாடு இராது. ஆனால் அவன் என்னைத் தூஷணையாய்ப் பேசினால், எதிரே பதிலுக்குப் பதில்சொல்லி விட்டு வந்து விடுகிறேன்" என்றார் சீனுபட்டர்.

"வேண்டாம், வேண்டாம். சண்டை சச்சரவு ஒன்றும் உண்டாக்கிக் கொள்ளாதே. சீனனுக்கு வேண்டியப்பணச்செலவை உனக்கு என்ன தோன்றுகிறதோ அதைச்சொல். ஆனால் பொய் மாத்திரஞ் சொல்லாதே" என்று சொன்னார் கோவிந்த பாணிகர்.

"அது உண்மையாயினும், இல்லாவிடினும் அப்படியே நான் சொல்கின்றேன்."

இம்மொழிகளைக் கேட்டுக்கொண்டிருந்த மாதவன் தகப்பனாரைப் பார்த்துச் சிரிக்கலானான். கோவிந்தபாணிகருஞ் சிரித்தார். கடைசியாய்ச் சீனுபட்டரும் நகைத்துத் தலையையாட்டிக்கொண்டு அப்படியே ஆகட்டுமெனச் சொல்லிவிட்டு உடனே பூவரங்கிக்குப் போய்விட்டார். பஞ்சுமீனனிருக்கும் மாடியறையினருகேயுள்ள வெளித் தாழ்வாரத்தில் நின்றுகொண்டிருந்தார். வெளியில் காத்திருப்பது யாரென்றறிந்துகொள்ள பஞ்சுமீனன் கேட்ட கேள்விக்குப் பட்டர் "நான்தான்—சீனு" என்று பதில்மொழி யளித்தார்.

"என்ன விசேஷம்? இங்கு வந்த காரணம் யாது" என்று அதிகாரக்குரலுடன் கேட்டான் பஞ்சுமீனன்.

"உம்மிடத்தில் சில விஷயத்தைப்பற்றிப் பேச வேண்டும். அதற்காகத்தான் வந்தேன். வேறொன்றும் விசேஷமில்லை."

"என்ன சமாசாரம்? சொல்" என்றான் பஞ்சுமீனன் கோபத்துடன்.

"நான் நமது பையன் சீனனுக்கு..............இ..............இங்.........இங்கிலீஷ் சொல்லிவைக்கப் போகின்றேன்" என்று நாக்குளற சொல்லிவிட்டான் சீனுபட்டர்.

"ஓய் உமக்கென்ன? இங்கிலீஷ் தெரியுமா" என்று கேட்டான் பஞ்சுமீனன்.

"நான் என் கைப்பணம் போட்டுச் சொல்லி வைக்கப் போகின்றேன் சீனனுக்கு" என்று ஸாவதானமாய்ப் பதில்சொன்னார் சீனுபட்டர்.

"போ; அப்படியே உன் மனோபீஷ்டத்தின்படி சொல்லிவை" என்றான் பஞ்சுமீனன்.

"அவனைப் பட்டணத்துக்கனுப்ப உத்தேசித்திருக்கிறேன்" என்றார் சீனுபட்டர்.

"பட்டணத்திற்காவதனுப்பு, பாடைக்காவதனுப்பு. இல்லாவிட்டால் கிணற்றில் தள்ளிப் பாறையைப்புரட்டு. நீ எப்படிச் செய்தாலென்ன. இங்கே யாருக்கென்ன வந்தது?" என்று உறுமினான் பஞ்சுமீனன்.

பெரியவர் தாங்கள் சொல்லியபடியே செய்ய அடியேன் காத்திருக்கிறேன். உங்கள் ஆசீர்வாதத்தின்படியே கிணற்றில் தள்ளிப் பாறையைப்புரட்டி விடுகிறேன். ஆனால், ஒரு விண்ணப்பம்; எமனது பட்டணத்தில் இங்கிலீஷ் கற்பிப்பதுண்டோ? இந்தச் சந்தேகம் எனக்குப் பெரிதாயிருக்கிறது. தாங்கள் தயவு செய்து இந்தச் சந்தேகத்தைத் தீர்க்க வேண்டும்" என்றார் சீனுபட்டர்.

"என்னடா உளறுகிறாய்? அடே, நீசப்பயலே! கிட்டவரத் தகாத பறையா! இந்தப் பிரசங்கங்களெல்லாம் என்னிடம் வேண்டாம். உன் அதிகப்பிரசங்கத்தனத்தை யெல்லாம் மூட்டையாய்க் கட்டிக் கக்ஷத்தில் வைத்துப்போ. ஓஹோ! என்னைத் தூஷிக்க மாதவன் உன்னை அனுப்பினான்போலும். கண் மறவாய்ப்போ. என்முன்னிலையில் நில்லாதே. அப்புறம்விலகும் அற்பக் கைம்பெண்டாட்டிப் பயலே. நீ மரியாதையாய்ப் போகப் போகிறாயா? என்ன? 'அடே, யாரடா அங்கே? இந்தப் பறப்பையலுக்கு அர்த்த சந்திரப்பிரயோகஞ் செய்தனுப்பு வெளியே" என்று ஊத்துக் கூவினான் பஞ்சுமீனன்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட சீனுபட்டர் சரேலென்று மாடியினின்றிறங்கி, "நான் பறப்பயலாயிருந்தால், உன் வீட்டுப் பெண்களுக்கும் எனக்கும் ஏதாவது சம்பந்தமிருக்குமா?" என்று முணுமுணுத்துக்கொண்டே போய்விட்டான்.

பஞ்சுமீனனுக்குண்டாகிய கோபத்தின் உக்கிரத்தையும் மும்முரத்தையுங் கண்டு பயந்து அவனிடம் விடைபெற்றுக் கொள்ளாமலே, மறுநாள் அருணோதய காலத்தில் சீனனை யழைத்துக்கொண்டு சென்னைக்குப் போய்விட்டான் மாதவன்.

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

உலகவாழ்க்கையின் உண்மை நிலை:—பாரத யுத்தம் முடிந்ததும் அதில் உயிர் இழந்த தமது பிள்ளைகள் முதலியவர்கள் விஷயமாகத்திருதராஷ்டிரன் பெருந்துக்கத்தில் மூழ்கி வருத்தப்படுங்கால் விதுரர் அவனை அணுகி உலகவாழ்க்கையின் உண்மை நிலையைப்பின்வரும் கதையால்நன்கு உணர்த்தி அவனைத் தேற்றினர்:—

ஒரு பிராமணன், ஒருஸமயத்தில் அணுகமுடியாத துஷ்ட மிருகங்கள் நிறைந்தது ஓர் காட்டுக்குள் வந்து சிக்கிக்கொண்டான். அதில் எங்கும் மிருகங்களின் சப்தம் அதிகமாகக் கேட்டுக்கொண்டே இருந்தது, இதனுல்பிராமணன்மனம்மிகப்பதறியது. அவன் உடனே அங்குமிங்கும் பயத்தால் ஓடத்தலைப்பட்டான். அந்தக்காட்டைச்சுற்றி வலைபோட்டிருந்தமையாலும், வெளியில் கோரமான ஒரு ஸ்திரீ தனது கையைப் பரப்பிக்கொண்டிருந்தமையாலும் அந்தப் பிராமணனுல் காட்டைவிட்டு வெளி வர முடியவில்லை. மேலும் அந்தக்காட்டில் பெரிதாகிய ஐந்து தலை நாகங்கள் உலாவிக்கொண்டிருந்தன. அங்கு ஒரு படுகுழி, பலமான செடி கொடிகளால் மூடப்பட்டிருந்தது. பயத்தால் வெருண்டு ஓடிவந்த பிராமணன் தலைகீழாய் அந்தக் குழியில் விழுந்து, செடிகொடிகளில், பலமாய்ச் சிக்கிக்கொண்டான். அப்பொழுது அவனுக்கு அநேக கஷ்டங்கள் உண்டாயின. அந்தக்குழி அடியில் ஒரு பெரும்பாம்பு இருப்பதையும், அந்தக் குழியின் கரையில் தன்னை நோக்கி ஒரு யானை வருவதையும் அவன் கண்டு மிகுந்த துக்கத்தை அடைந்தான். அந்த யானைக்கு ஆறுமுகமும், பன்னிரண்டு கால்களும் இருந்தன. அவன் தொங்கிக்கொண்டிருக்கும் கொடிகளை வெள்ளை எலிகளும் கருப்பு எலிகளும் அறுத்துக்கொண்டே இருந்தன. அந்தச் செடி கொடிகளின் மத்தியில் சிலதேனடைகள் இருந்தன. அதிலிருந்த தேனீக்கள் உலாவி வருகையில் அந்தப் பிராமணனைக் கொட்டிக் கொண்டிருந்தன. இந்தக் கஷ்டங்களின் மத்தியில் தேனடைகளிலிருந்து தேன் துளிகள் பிராமணன் கன்னத்தில் விழுந்தன. அதை நாக்கால் மிகுந்த கஷ்டத்தின்பேரில் நக்கிக்கொண்டு அவன் அத்தித்திப்பைப் பெரிதாகத் எண்ணி தான் படுங்கஷ்டங்களை மறந்து இன்னும் நமக்குத் தேன் கிடைக்காதா என்றும் அவ்வாறே தான் வீழ்ந்து சுகமடைய வேண்டும்என்றும்எண்ணிக்கொண்டு அங்குக் காலம் கழித்துவந்தான். இந்தக்கதையைவிதுரர் சொல்லி உலகவாழ்க்கை அந்தப் பிராமணன் வாழ்க்கை போன்றது என்று அறிந்து ஞானிகள் பாபங்களிலிருந்து விடுபடுகிறுர்கள் என்று வற்புறுத்தினர்.

ஆகையால் பிராமணன் அங்குமிங்கும் ஓடியகாடு ஒருமனிதன் வாழ்க்கையையும், துஷ்டமிருகங்கள் அவனுக்கு வரும் வியாதிகளையும், காட்டின் வெளியிலிருந்த கோரஸ்திரீ கிழத்தனத்தையும், குழிதேகத்தையும், குழி அடியிலிருந்த பாம்பு காலத்தையும், செடிகொடிகள், மனிதனுக்குள்ள தேகாபிமானத்தையும், யானை, ஆறு ருது, பன்னிரண்டு மாதங்களுடைய வருஷத்தையும், வெள்ளை எலி கருப்பு எலிகள் இராப்பகலையும், தேனீக்கள் ஆசைகளையும், தேன்துளிகள், ஆசையின் பூர்த்தியால் உண்டாகும் இஹலோகஸுகத்தையும், அவைகொட்டுவது நமது ஆசை பூர்த்தியாகாததால் உண்டாகும் கஷ்டத்தையும் உணர்த்துகின்றன.

இலவுகாத்த கிளிபோலாதல்.—இங்கு 'இலவு' என்பது 'இலவம்'-பஞ்சமரத்தின் காய்களைக்குறிக்கிறது. இது பார்ப்பதற்கு மிகவும் பச்சைவர்ணம் உடையதாயும், உயர்ந்ததாயும் அதிக இலைகள் இல்லாதகிளைகளை உடையதாயும், முட்கள் உடையதாயும் உள்ள ஓர் மரம். இதன்காய்கள் பச்சைவர்ணம் உடையனவாய் 8-விரல் நீளமும் ஸாதாரண வாழைப்பழம் அவ்வளவு பருமனும் உடையனவாக இருக்கும். இந்தக்காயை ஏதோ தின்னக்கூடிய காய் என்று பழங்களில் மிகுந்த பிரீதியுடைய கிளி எண்ணி இதன் அருகில்வந்து, இது பழுத்து மிருதுவாகும் வரையில் மற்றையப் பழங்களிடம் காத்திருப்பதுபோலக் காத்திருக்குமாம். இந்தக்காய் வர வரப் பழுக்கக் கிளிக்கு ஆசை அதிகரிக்கும். ஆனுல் அது மிருதுவாகாமலிருப்பதைக்கண்டு அதைத்தின்று பார்க்காமலிருக்க பின்னர், அதுஉலர்ந்துகொண்டே வந்து முடிவில் வெடிக்கும். உடனே அதிலிருந்து இலவம்பஞ்சு பரக்கத் தொடங்கிவிடும். இதனுல் வெடிக்குங்கால் மிகுந்தஆவலுடன் தின்பண்டம் கிடைக்கும் என்று காத்திருந்த கிளியின் நிலைமிகப்

பரிதாபப்படக் கூடியதாகவிருக்கும். மிகுந்த ஆவலுடன் கிளியைக் காத்திருக்கும்படியும், ஏதோ பசி அடக்கக்கூடிய உணவு கிடைக்கும் என்ற பூர்ண நம்பிக்கை அதற்கு வரும்படியும் செய்த இலவங்காய் முடிவில் வெடித்துப்பஞ்சாகப்பறந்து விட்டால் அதன் நிலை என்னமாக இருக்கும்! ஆகவே இலவுகாத்த கிளிபோலாதல் என்றால் ஓர் விஷயம் அல்லது மனிதனிடமிருந்து ஒருவன் தனக்கு மிகுந்த உபயோககரமான விஷயங்கள் உண்டாகும் என்று எண்ணியிருந்து முடிவில் அவ்வாறு ஆகாததுகண்டு பரிதவிப்பது என்பது பொருள், அதாவது நம்பி மோசம்போதல் என்பதே இதன் பொருள்.

இலவுகாத்தகிளிபோலாவதற்குச் சில உதாரணங்கள் கூறலாம். ஒரு தகப்பனுக்கு ஓர் அருமைப் பிள்ளை இருப்பதாக எண்ணிக்கொள்வோம். அவன் வியாதி ஒன்றும் இல்லாது ஸுகமாக வளர்ந்து நற்குணம்உடையவனாகி சிறந்தபண்டிதனாகிக்கொண்டு வருவதாகவும் வைத்துக்கொள்வோம். இவனிடம் தகப்பனுக்கு விசேஷ நம்பிக்கை உண்டாகும். 'இவன் எனது குலத்திற்கே நல்ல பெயர் வரும்படி செய்வான், மஹா கீர்த்திமானாக இருப்பான். நமது வயஸு காலத்தில் நம்மைக் காப்பாற்றுவான். இவனால் நமது குடும்பம் சிறப்படையும்' என்ற எண்ணங்கள் தகப்பன் மனதில் இராதா? இப்படி இருக்கையில் உலகில் ஸர்வஸாதாரணமாக உள்ளவைகளுக்கேற்ப, அந்தப்பிள்ளை இறக்கும்படி யாகவோ, அல்லது சித்தப்பிரமைபிடித்தவனாகும்படியாகவோ, அல்லது குணம்மாறிக்கெட்டவனாகும்படியாகவோ, அல்லது தாய் தகப்பன்களைக் கவனியாத கொடியவனாகும்படியாகவோ திடீரென்று நேர்ந்துவிட்டால் தகப்பன் உடனே இலவுகாத்தகிளி போலாவான். அன்பு மிகுந்த புருஷனை இழந்த பெண்மணியும், அருமைப் புதல்வனை இழந்த அன்னையும், நம்பிக்கையான மனிதன் மோசக்கருத்துடையவன் என்றறிந்த எஜமானனும், நியாயஸ்தலங்களுக்கு வழக்குக்கொண்டு போகிறவனும், பரீக்ஷை கொடுத்துவிட்டால் பெரியநிலைவரும்என்று எண்ணுபவனும், ஸன்மார்க்கத்திலிருந்தால் உலகஸுகம் வரும் என்று எதிர்ப்பார்ப்பவனும், உலக விஷயங்களிலிருந்து நி[illegible]மான ஸுகம் உண்டாகும் என்று எண்ணுபவனும் இலவுகாத்த கிளிகளே. 'வெளுத்ததெல்லாம்பால்கருத்ததெல்லாம் தண்ணீர்' என்றபடித் தோற்றங்களைக் கண்டு ஏமாறும் ஒவ்வொருவனும் இலவுகாத்த கிளியே.

கோகிலம் என்ற பறவைக்கு முட்டை பொறிக்கத் தெரியாதாம். அது முட்டையிட்டுக் காக்கையின் கூட்டில் தனது முட்டைகளைக் கொண்டு வைத்துவிடுமாம். காக்கை அதைத்தன் முட்டை என்று கருதி பொறித்துவிடுமாம். கோகிலமும் கருப்பாக இருப்பதால் அதன் குஞ்சும் முதலில் காக்கை குஞ்சுபோல இருக்கும். காக்கை அதைத் தன் குஞ்சு என்று கருதி வளர்த்து வருமாம். அடுத்த வஸந்தகாலம் வந்ததும் கோகிலக்குஞ்சு சப்திக்கும். அப்பொழுது அது தன் குஞ்சு அல்ல என்று காக்கைக்குத் தெரியவர அது கோகிலக்குஞ்சைத்துரத்தியடிக்குமாம். இங்கு காக்கையின் நிலை இலவுகாத்த கிளியின் நிலையே.

இந்த விஷயமாக ஓர் கட்டுக்கதை கூட உண்டு. இரண்டு பூனைகள் சேர்ந்து ஒரு அப்பத்தைத் திருடி வந்தன. வெளிவந்ததும் இதைப் பங்கு போட்டுக் கொள்ளுவதில் இரண்டிற்கும் வாக்குவாதம் வந்துவிட்டது. இவை இரண்டும் அருகாமையிலிருந்த குரங்கண்டை சென்று தமது வழக்கைத் தீர்க்கும்படிகுரங்கைவேண்டின. குரங்குஒருதராசைக்கொண்டுவந்து அப்பத்தை இரண்டுதுண்டாக்கி ஒவ்வொரு துண்டை ஒவ்வொரு தட்டில் போட்டது. உடனே ஒருபுறம் அதிக கனமாக இருப்பதைக்கண்டு அந்தத் தட்டிலிருந்த துண்டைக் குறைக்க அதில் ஒரு பாகத்தைக் கடித்துத் தின்றுவிட்டது. இப்படிச் செய்யும் பொழுதே கொஞ்சம் அதிகமாகக் கடித்துவிட இரண்டாவது தட்டு தணிந்துவிட்டது. அப்பொழுது அதை ஸமப்படுத்தவேண்டும் என்று பூனைகளுக்குச் சொல்லிவிட்டுஅங்கிருந்த துண்டைக்கொஞ்சம் அதிகமாகக்கடித்துவிட்டது. மறுபடியும் முதல் தட்டு தணிந்துவிட்டது. இம்மாதிரி பூனைகளுக்காக ஏதோ சிரத்தையாகப் பாடுபடுவதுபோலப் பாசாங்கு செய்து கொண்டுமெதுவாக அப்பம் முழுவதையும் குறங்குதின்றுவிட்டது. பூனைகளோ இலவுகாத்த கிளிபோல வெகு நாழிகை மிகுந்த ஆவலுடன் காத்திருந்து முடிவில் அப்பத்தை இழந்து மோசம்போயின.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

## சகுந்தலை அல்லது பிரிவினிலை

### 3. புாழறப் புகுந்த காதை

தனக்குயர்ந்த பெரியோன் ஒருவனிருக்க அவனுடைய விடைபெறாது, ஓர் காரியம் செய்தால் செய்தவன் மனம் என்ன நிலையுள் நிலைக்கும்? திருடத் தெரியாத ஒருவன் திருடி பலர்முன்பட்டால் அவன் மனம் எவ்விதம் துடிக்கும்? அவ்விதமே சகுந்தலையும் கண்வரைக்கண்டதும் மனம் பதைத்தாள். ஸோம தீர்த்தத்திற்குச் சென்றிருந்தவர் திரும்பி வரும்வழியில் நடந்தவை முற்றும் தனது ஞானத்தால் உணர்ந்தார். தன்னைக் கண்டதும் வெட்கமும் பயமும் கொண்டு பேசாதிருந்தவளைப்பார்த்து "உன் வயிற்றுள், உலகவுதவிக்காக வன்னிமரத்துள் நெருப்பு விளங்குவதுபோல், புகழ்கொண்ட கருவொன்று உள்ளதென்றெனக்குத் தெரியும். நீ பயப்படவேண்டாம். காதலர் இருவரும் மனம் ஒருமித்துக்கூடும் மணமே அரசர்க்கு உரியது. மந்திரம் முதலிய இல்லாத மணமாயிருந்தாலும் இவ்விதமாகிய காந்தர்வ மணமே அரசர்களுக்குள் சிறந்தது. உன் ஸந்தேஹத்தை ஒழி" என்றார் கண்வர்.

தகப்பனாயிருப்பினும் பெண்பாலார் அவனிடத்துத் தம் உள்மன நோக்கத்தைக் கூறுவது அரிது. வளர்த்த தந்தையிடம் கூறவெட்கமுண்டாவது அதிசயமன்று. சகுந்தலை இதுவரையும் வாயைத்திறவாதிருந்ததற்கிதுவே காரணம். பேசாததைக் கண்ட கண்வர் "குழந்தாய்! நீ என் விருப்பமின்றிச் செய்ததாக எண்ணி மனமுருகவேண்டாம். நீ நெறிதவறி ஒன்றும் செய்யவில்லை. இனியேனும் உன்பயத்தை ஒழி" என்றார். சகுந்தலை தலைக்குனிந்து நின்றாள். தன்னடத்தை இவர்க்கெவ்வாறு தெரிந்ததென்றவளுக்கு ஆஸ்சரியம்.

சற்று அயர்ந்துநின்றாள். ஸரி! என நிஸ்சயித்தாள். "எனக்குந் தெரியாது நான் செய்ததைக் குறித்து மன்னிக்கவேண்டும். நீங்கள் சொல்லிய மொழிகள் என் பதபதைப்பை ஒருவாறொழித்தது. எனக்குந்தெரியாது அம்மன்னன்மேல் நன்மையே விரும்பும்படி தோன்றுகிறது. ஏதோ நான் தெரியாது செய்துவிட்டேனாகிலும் அவர் என் தலைவன் ஆனார், என் உயிர்க்குள் இடம் கொண்ட இறைவனார். அவர்க்கு நல்லதே உண்டாகும் வண்ணம் உமது மனமிசைந்து வாழ்த்தவேண்டும்" என்று மெதுவாகச் சொல்லினாள். தவமுனிவரும் "உன் கணவன் மானிடர்க்குள் மணியாவன், பெரும் வள்ளல்; அவன் மகன் அவனினும் சிறந்தவனாவன். நீ எது கேட்பினும் நான் அளிக்கச் சித்தமாயிருக்கிறேன்" என்றார். சகுந்தலையும் மெதுவாகத் தன் நிலைமையை அடைந்து மனவமைதியோடு "புருவம்சத்து அரசர்கள் கோல் தாழாது, என்றும் அரசுபிரியாதிருக்கவேண்டும் என்ற ஈதோர் வரம் தா" என்று கூறினாள். முனிவரும் ஓம் என்றனர்.

துஷ்யந்தனைவிட்டுச் சகுந்தலை பிரிந்து நெடுநாளாயிற்று. சகுந்தலைக்கோர் ஆண் குழந்தை பிறந்தது. அது கொழுந்துவிட்டெரியும் நெருப்புபோல அழகு மிக்கு ஜ்வலித்தது. ஸாமுத்திரிகாலக்ஷணங்கள் முழுதுங் கொண்டு விளங்கிய இக்குழந்தைக்குக் கண்வர் நூல் முறைப்படி செய்யவேண்டியவைஎல்லாம்செய்தனர். மூன்றாவதுவயதிலேயே அவனது திறமை விளங்கியது. ஆறு வயதானதும் எதனிடத்தும் பயமின்றி சிம்ஹம் முதலிய எல்லா மிருகங்களையும் அடக்கியாளும் தன்மை உண்டாகியது. இதனாலே இவனுக்கு ஸர்வதமனன் என அங்குள்ளவர் பெயரிட்டார். இது நிற்க.

இன்னம் மன்னன் ஸகுந்தலையிடம் சொல்லிய வாக்கைக் காப்பாற்றவில்லை. ஒவ்வோர் தினமும் சகுந்தலைக்கிதுவே மனத்தைக் கலக்கும். மனக்குழப்பமின்றி இரவும் பகலும் அமையா. தன்னைப் பற்றிய கவலை அரசர்க்கு இல்லை என எண்ணினாள். ஆயினும் தான் நடத்தவேண்டிய தர்ம காரியங்களுள் அலுவலின்றி இருப்பினுமிருக்கலாம் என்று எண்ணிக்கொண்டு மேல் வருமாறு தனக்குள் நினைத்தாள். "கணவனை விட்டுப்பிரிந்த வாழ்க்கை பழிக்கும் இழிவிக்கும் வேரூன்றும். தாய்வீட்டாசை தன்னையே கெடுக்கும். இனி நான் இங்கிருக்கலாகாது. மன்னன்பால் செல்லவேண்டும். செல்லும்வழி அறியேன். நான் எளியள்; என் செய்வது. புகுமிடம் ஓர் பக்கமிருக்க அதை அடையாதிருப்பதழகாமோ? அன்றி அரசனும் என்னை ஒருவேளை மறந்துவிட்டனனோ? அவ்வாறாயில் எல்லாரும் கூறும் அவரது பெருமைநிலைக்குமா? என்னைவந்தழைத்துச் செல்லாதகாரணமென்னவோ?—எதுவிருக்கலாம்? அவர் மனத்தில் ஏதேனும்ஸந்தேஹமுண்டாயிருக்குமோ?

அன்றி ஏன் இவ்வளவுநாள் சென்றும் என்னை அழைத்துக்கொள்ளவில்லை. அன்றி அவருக்கே ஏதேனும் மனவமைதி இல்லையோ? இராச தருமத்திலுழைப் பதினல் அவுவவில்லையோ? அன்றி நான் கூறியவற்றுளேதேனுமவர் மனத்தில் வெறுப்புண்டாக்கியதோ? ஒன்று மென்னால் அறியமுடியவில்லை. ஒருவேளை என் பொறுமையைப் பரீக்ஷிக்கின்றனரோ? அப்படி இருப்பினும் இருக்கலாம். ஏதோ கண்டதும் மனமொத்து மணந்ததால் நமது குணமறிந்திலார் ஒருவேளை. ஆகையால் நமது குணமும் நெறியும் அறியுமாறு இவ்வாறு நம்மைத்தனியே விட்டிருப்பின் எந்த நிலைமையுள் இருக்கிறள் என்று அறியவேண்டி செய்திருந்தாலும் செய்திருக்கலாம் அல்லவா? இருப்பினும் இருக்கும். அன்றி முற்றும் மறந்திருந்தாலும் மறந்திருக்கலாம். அவ்வாறுமறந்திருப்பின் அவர் மனத்திற்கு அதை ஞாபக மூட்டுவதெவ்விதம்? இதற்கென்ன செய்வது? ஒருவேளை நீயென்மனைவி அல்ல என்று தடுப்பின்எவ்வாறவர்க்கு விடைகூறுவது? ஒன்றும் தெரியாதலைவதா? வருவது தானேவரட்டும்!—என்ன செய்வது. யாதும் நம்மால் ஆவதல்ல. கால மென்னும் கணக்கனிட்டவாறுதான் ஆகும். நாம் சாந்தியோடு இருப்போம். நமது கணவன்பா லிருக்குமன்பே நமது ஸுகத்திற்குக் காரணமாகும். ஆயினும் நமக்குக்கஷ்டம் வருவதாயிருந்தாலும் அதை அடைய வித்தமாயிருக்க வேண்டும். கஷ்டமின்றி ஸுகமெங்குண்டாகும்.''

இவ்வாறு மனமயங்கி நிற்கும் சகுந்தலையிடம் கண்வர் வந்தார். ஸர்வதமனனது விளையாடலை முற்றுங்கண்டு வியந்து 'இனி இவனைத் துஷ்யந்தனிடை அனுப்பினல் இளவரசுபட்டத்திற்குத் தகுந்தவனுவன்' என்று எண்ணி ''சகுந்தலே! பெண், தாய் வீட்டிலிருப்பது அவளுக்கழகல்ல. அவள் புகழுக்குத் தாழ்ச்சியுண்டாக்கும். தாய் வீட்டாசை பெண்களுக்குத் தாங்க முடியாக் கஷ்டங்களுக்காளாக்கிவிடும். தான் பிறந்தவீட்டிலன்றி, தன் தந்தை தாயர்க்குஉறைவினராகியர்வீட்டிலிருப்பதும் புகழுக்கிடமாகாது.கணவனை விட்டு தனித்திருப்பது பழிக்கே இடமாகும்.ஆகையால் நீ உன் தலைவன் வீட்டிற்குச் செல்லவேண்டும்'' என்று கூறி பக்கத்திலிருந்த சிஷ்யருள் சிலரை நீங்கள் ''சகுந்தலையையும் அவள் குழந்தையையும் துஷ்யந்தன் பால் விட்டுவா, வேண்டியவைகளைச் சித்தஞ்செய்யும்'' என்ருர். ''சகுந்தலை நீயும்சென்று உனக்கு வேண்டியவைகளை எடுத்துக்கொண்டு புறப்படுவாயாக!''

சாகுந்தலைக்கு வேண்டிய பொருளும் அளித்து, அவள் எவ்வாறு அரசனிடம் செல்லவேண்டுமோ அவ்வாறு அமைத்து தனது சிஷ்யர்களைக் கூவி நீங்கள் இவ்விருவரையும் கொண்டு துஷ்யந்தனிடம் ''உள்ளன்பு ஊறி இருவரும் சேர்ந்ததினல் உண்டான மகனிவன். இவளுன்மனைவி. தவத்திற்சிறந்த எமது குலத்திற்கும், புகழில் பெருத்த உமது குலத்திற்கும், இரண்டிற்கு நன்மையுண்டாகும் வண்ணம் இவரிருவரையும் கொள்வாயாக! அதற்குமேல் உண்டாவது பரம்பொருளின் செயல், எமதல்ல'' என்று நான்கூறியதாகச் சொல்லி, இவ்விருவரையும் விட்டு மற்றும் ''மீண்டுவருவீராக'' என்ருர்.

''சகுந்தலை! நீ யிதுவரையும் இங்கு விளையாட்டிலேயே பொழுது போக்கினை. ஆடல் முழுதும் இனிவிட்டுவிடு. கணவனுக்குபயோகமாக வேண்டுமென்பதே நோக்கங்கொண்டு தக்கவாறு நட. பெரியோரை வணங்கி இரு. வாய் படபடப்பு வேண்டாம். கோபங்கொண்டவரிடத்தும் அன்பாகவிரு. கணவன் கோபித்துக் கொள்ளினும் அருவருப்பின்றியிரு. அவன் கோபித்துக்கொள்ளும்போது நீ கோபித்துக்கொண்டால்அவன் கோபமதிகமாகுமே அன்றி குறையாது. அது உனக்கு நன்மையாகாது. சிறந்த பெருமை வந்ததாக எண்ணி கர்வம் வேண்டாம். அது கீழ்மைக்கு வழியைத்தேடும். மாமி மாமன்களைத் தெய்வம்போல் பாராட்டு. அவர்ஸுகமடைந்தால் உனக்கு ஸுகமுண்டாகும். அவர் மனத்திற்கு ஆயாஸமுண்டாயில் அவரது ஆயாஸம் உனது ஸுகத்தை அழிக்கவந்த பெருநெருப்பென்றறி. பதைபதைத்த மொழியும், பாசாங்கும் பழிக்கு ஆளாக்கிவிடும். எது நடப்பினும் மனத்துள் வைத்து நட. உன்னை வைவோரது மொழிகளை ஒருகாதால் வாங்கி மறுகாதால் விட்டுவிடு. உன் பெரியோர் சொல்லும் கொடுமொழிகள் உனக்கு நன்மை பயக்கவந்த மந்திரமென்றிரு. அவர் ஹ்ருதயத்தில் உனக்குத் துன்பமுண்டாக்க வேண்டும் என்ற எண்ணம் கிடையாது. அவர் எண்ணுவது கொடுமையே என்று எண்ணுவதற்கு உனக் கதிகாரமில்லை. உன் சக்களத்திகளிடத்து அன்புடன் கூடி வாழ். வீட்டு மொழிகளை வெளியிட வேண்டாம். அவ்வாறு செய்யின் அது உனக்கே

துன்பமுண்டாக்கும். கூடிப்பார்ப்பவர்க்கு வேடிக்கை அது; உனக்குக் கஷ்டத்துக்கு வேராகும். உன் கீழ் இருப்பாரிடம் மரியாதையோடிரு. உன் பெற்றோர் உற்றோர் எல்லாரையும் மறந்து கணவன், மாமன், மாமி முதலியோரை நினை. அதுதான் உனது தருமம். அவர் மனம் கோணாது நடத்தலே உனக்கழகு. அவ்வாறு நடத்தல்தான் நீ வந்த வீட்டில் பெருமையை விளக்கும். அவ்வாறு நடவாதவள் இரு வீட்டையுங் கெடுக்கவந்த பாவி ஆகிறாள். 'குலத்தைக் கெடுக்கவந்தக் கோடரிக்காம்பு'போலாவாள். உன்னைக்கடுமையாக உன் கணவன் நடத்தினாற்கூட உன்னை நன்றாக நடத்துவதாக நீ வெளிக்காட்டினால் அதுவே அவன் மனதைமயக்கி உன் வசப்படுத்தும். மாயாவியாய், ஒன்றும் செய்யாதவனைப் பற்றி நீ தூறேற்றித் திரிவாயானால் கணவன் உன்பால் ஆசைகொள்வனென்று கனவிலுமெண்ணவேண்டாம். நன்றாயிருந்துநலம்பெற்றுபுகழ் அடைவாயாக! இதுதான் யான் கூறவேண்டியது. இனி நீ செல்லலா''மென்றார் கண்வர்.

சகுந்தலையும் கண்வர்கூறிய ஒவ்வோர் மொழியையும் மனதிற் பதித்துக்கொண்டு தனது தந்தையின் ஆசீர்வசனங்களைப் பெற்றுக் குழந்தையுடன் தனது கணவனூர்ப்புகக் காலடி எடுத்துவைத்தாள். அப்பொழுதவளுக்கிரு கண்களும் துடித்தன. அச்சமும் வியப்பும் உண்டாகியது. ஆயினும் சிஷ்யரிருவரும் முன்வழிகாட்டிச் செல்ல தானும் தன் குழந்தையுமாக அவர் போனவழியில் நடக்கலானாள்.

பவழம்.—இது சமுத்திரத்திலுள்ள ஒருவகைப் பூச்சிகளிலிருந்து உண்டாகும் பதார்த்தம். அஃது அந்தப் பூச்சிகளின் தேகத்திலிருந்து வெளிவருகின்றது. அதுவே அந்தப் பூச்சிகள் வசிப்பதற்கு வீடாய் ஏற்படுகின்றது. அது பல வர்ணங்களாயிருக்கும். அவைகளுள் சிவப்பு வர்ணமானதை நம் தேசத்தவர் கொண்டாடி ஆபரணங்களாய்ச் செய்து கொள்ளுகிறார்கள். அது பல வடிவங்களாய்ப் படரும்; சிலவேளை ஒரு செடியைப்போல் படர்ந்திருக்கும். ஆதலால் சாமான்னிய ஜனங்கள் அஃதொரு செடியேயென்று தப்பிதமாய் நினைக்கின்றார்கள்; அதைச்சேர்த்து எடுப்பதைப்பற்றியும் வேடிக்கையான கதைகள் சொல்லுகின்றார்கள்.

# விசேஷ வர்த்தமானங்கள்

## GENERAL NEWS

ஹாலியின் வால் நக்ஷத்திரம்.—இவ்வால் வெள்ளி இப்பொழுது சுமார் இருபது நாளாக நன்றாகத் தெரிகிறது. முதலில் சாயங்காலத்தில் $7\frac{1}{2}$-மணிக்குள் கண்ணிற்குத் தெரியாது மயங்கிவிட்டுக்கொண்டிருந்தது. இப்பொழுது 7-அல்லது 8-நாளாகக் காலை நக்ஷத்திரமாகக் காண்கிறோம். இதன் வால் மேல் நோக்கிக்கொண்டு சுக்கிரவக்ருஹத்திற்கு வடகிழக்கில் காணப்படும். கோடைக்கானல் ஜ்யோதிஷ உப்பரிகையில் (Observatory) இவ்வால் வெள்ளி நன்றாகப் புலப்படுகிறது. இதற்கு 7-வால்கள் இருப்பதாகத் தெரிகின்றது. மேனாட்டு வான சாஸ்திரிகள் பரிக்ஷை செய்ததில் இதன்வால் 2-கலை (2°) நீண்டிருப்பதாகத் தெரிகிறது. அதாவது 15-லக்ஷம் மைல் நீண்டு இருப்பதாகத் தெரியவரும். இதனால் சிலபேர் வரும் மேமீ 19-ம் தேதியன்று இத்தூமகேது பூமியின் பக்கில் நெருங்கி செல்லுமிடத்து பூமியதன் வாலாகிய தூமத்திரளின் உள் ஊடுருவிச் செல்லவேண்டியதாய் வரும் என்று சிலர் எண்ணுகிறார்கள். இவ்வாறு நடக்குமாகில் பூமியிலுள்ளவர் ஹாலி வால் வெள்ளியின் வாலாகிய வாயுத்திறளாகிய உஷ்ணப்புகையில் சில நாழிகை கம்மியிருக்கவேண்டிவரும். நீராவியில் குளிப்பது போல் உடல் வியர்வைவிட நேரலாம். ஆனால் இவ்வாறு நடப்பதரிதென்றெண்ணப்படுகிறது. நடக்குமாயினும் நடுப்பகல் வேளையில் நாம் நேராகக்காணும் படியாகத்தான் நடக்கும்.

***

கஸ்தூரி.—இது கொழுப்பு சம்பந்தமான பதார்த்தம்; அது வாசனையுள்ளது; ஹிமாலயப் பிராந்தியங்களிலிருக்கும் கஸ்தூரி மான் என்னும் மிருகத்தின் நாபிப்பிரதேசத்திலொரு பையிலிருந்து எடுக்கப்படுகின்றது; ஒருவகை எருமைக்கடாவிலிருந்தும் கஸ்தூரி எடுக்கிறார்கள். அதனை வாசனைத்திரவியமாகவும் மருந்தாகவும் உபயோகிக்கிறார்கள். வாசனையில் வித்தியாசத்தினாலும் பருமனில் வித்தியாசத்தினாலும் குணமும் விலையும் வித்தியாசப்படுகின்றன.

***

வஜ்ரபசை.—இது கொஞ்சம் ஒளியுருவத்தக்கதொரு வஸ்துவாகும். பதனிட்ட தோலைச் செதுக்கிய துண்டுகள், மாட்டின் குளம்பு முதலிய

வைகளைத் தண்ணீரில் வேகவைத்து, அவை கரைந்துகெட்டியான பாகாய் ஆனபிறகு அந்தப் பாகை யுலர்த்தியெடுப்பதே வஜ்ரப்பசையாகும். அதனை நெருப்பின்மீது இளகவைத்துத் தடவி மரப்பலகை முதலியவைகளை யொட்டிச் சேர்க்கலாம்.

***

சணற்றழை எருவு.—கும்பகோணம் விவசாய சங்கத்தார் இந்த வருஷத்தில் ஜனங்களுக்கு அனுபோககரமாய் ரூபிக்க தங்களுடைய சங்கத்தின் பண்ணையில் பயிர்செய்த சடம்பு (சணல்) பயிர், தஞ்சாவூர் ஜில்லாவில் விவசாயம்செய்யும் ஒவ்வொருவருக்கும் நிரம்பவும் உபகாரப் படத்தக்கது. ஜூன்மீ மத்தியில் காலில் ஜலம்வந்தவுடன் வயல்களில் தண்ணீரைப்பாய்ச்சி, உழுது, எகர் ஒன்றுக்குச் சுமார் 6 (ஆறு) பட்டணம்படி விதை தெளிக்கப்பட்டது. ஆகஸ்டுமீ 22உயில் மேல்சொன்ன பயிரைப்பார்க்கும்பொழுது அது சுமார் 3-அடி (இரண்டுமுழம்) உயரம் வளர்ந்திருந்தது. நெல் சாகுபடி செய்யுமுன் இதை நிலத்தில் தழை எருவுக்கென்று அப்பால் உழப்பட்டது. இந்த நிலத்திற்கு வேறு குப்பை எரு முதலானதுகள் போடாமல் இந்தப்பயிரையே உழுது மக்கவைத்திருப்பதின் மாசூல், எப்படிக்காணுமென்று ஆவலுடனும் சிரத்தையுடனும் எதிர்பார்க்கலாம். இப்படித் தழைப்பயிர்செய்து அதை உழுது எருவாக உபயோகிப்பதில் விதை சிலவே தவிர வேறொன்றில்லை. பயிர் உண்டாக்க உழவு முதலானதுகளில் சிலவாகுமென்று கொஞ்சப்பேர் ஆக்ஷேபனை சொல்லலாம். ஆனால் நெல் சாகுபடிசெய்யும் நிலங்கள் ஆகஸ்டு மாதத்தில் முதல்முதல் உழவாவது வழக்கம். அப்படிக்கில்லாமல் தழைப்பயிர் செய்ய பிரயத்தனம் சேய்யும்போது காலில் ஜலம் வந்தவுடன் ஜூன் மாதத்தில் முதல் உழவு போடப்படுகிறது. ஆகவே பின்னால் செய்யப்பட்ட உழவு முன்னால் செய்யப்படுவதால், உழவு செலவு ஜாஸ்தி இதனாலாகிறதென்று சொல்ல மார்க்கமில்லை.

***

அவுரித்தழை எருவு.—பிரம்பலூர் தாலுக்காவில் அவுரிப்பயிரானது சாயத்திற்கென்று அனேக வருஷங்களாய் பயிரிடப்பட்டு வந்தது. ஆனால் அவுரி மருந்தின் (நீலத்தின்) விலை சகாயமானது. கொஞ்சகாலமாய் இந்தப்பயிரானது தழை எருவுக்கென்று சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கிருஷிகருக்குத் தழை எருவு சுலபமாய் அகப்பட மார்க்கமில்லாததினாலும் தழை எருவு உமயோகிப்பதின் குணம் சிலாக்கியமானதென்று குடியானவர்களுக்குத் தெரிந்து எல்லாரும் அதை உபயோகிப்பதால் ஜாஸ்தி தழை எரு அகப்பட மார்க்கமில்லாமையினாலும், இந்த அவுரிப்பயிரை இந்தத் தாலுக்காவில் தழை எருவுக்கென்று பயிர் செய்கிறார்கள். பிரம்பலூர் தாலுக்காவின் மேற்குப் பாகத்திலிருப்பவர்கள் தங்களுடைய சொந்த சாப்பாடு உபயோகத்திற்காக நஞ்சை நிலங்களிலும், கிணற்று இறவை நிலங்களிலும், கேழ்வரகு, கம்பு முதலாகிய பயிர்களைச் சாகுபடி செய்கிறார்கள். தங்களுக்கு நேரிடும் ரொக்க பணச்செலவுகளுக்காக நெல்லும் சாகுபடி செய்கிறார்கள். ஆகவே கிணறகளிருக்கும் ஒவ்வொருவரும் நெல் கட்டாயமாய் சாகுபடி செய்து வருகிறார்கள். அந்தப் பிரகாரமே நஞ்செய் சாகுபடி செய்யும் குடியானவர்கள் ஒவ்வொருவரும் கிணறுகள் தங்கள் நிலங்களில் வெட்டியிருக்கிறார்கள். அப்படிக்கில்லாவிட்டாலும் கிணற வெட்டவேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். ஆகையால் நஞ்செய் நிலங்களும் கிணற்றுப்பாய்சசல் நிலங்களும் எப்போதும் பயிரிடப்பட்டுக்கொண்டு இருக்கப்படுகின்றன.

மேல்சொன்ன நிலங்களில் தாள்மாற்றி (பயிர் மாற்றி) சாகுபடி செய்கிற வழக்கமுமிருக்கிறது. இவ்விடத்தில் சாதாரணமாய் கையாடிவரும் பின் குறித்த தாள்மாறிப் பயிரிடுதல் மிக சிலாக்கியமானதாக இருக்கிறது. அதாவது மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில் கோர்டைக்கம்பு கிணற்று இறவைப் பயிராக சாகுபடி செய்யப்படுகிறது. இத்துடன் ஏக்கர் ஒன்றுக்குச் சுமார் 3-பட்டணம்படி அவுரி விதையும் கலந்து தெளிக்கப்படுகிறது. கம்புப் பயிர் சூலைமாதத்து கடைசிக்குமுன் அறுவடையாகிவிடும். அப்பால் அதில் விதைத்திருக்கும் அவுரிப்பயிரை ஆகஸ்ட், ஸெப்டம்பர் மாதம்வரை வளரும்படி செய்து அப்பால் அதைச் சேற்றில் சடைச்சம்பா நெல் நடுமுன் உழுது மக்க வைக்கிறார்கள். அடுத்த வருஷத்தில் நெல்லுக்குப் பின்னால், இந்தக் கம்பும் அவுரியையே விதைக்கிறார்கள். இல்லாவிட்டால் கரும்பு சாகுபடி செய்கிறார்கள். மேல்சொன்ன கம்புப்பயிரும், கரும்புப்பயிரும் செய்யாவிட்டால் கேழ்வரகு நடுகிறார்கள். இதற்கு மாட்டுச்சாணி குப்பை முதலாகிய எருக்கள் போடுகிறார்கள். இது அறுவடை செய்தபின் காட்டுத்தழை எருவிட்டுச் சேற்றில் சடைசம்பா நெல்சாகுடடி செய்கிறார்கள்.

மேல்சொன்னபிரகாரம் அவுரித்தழை பசும்தாள் எருவுக்காகப் பயிரிடச் செலவு 3-பட்டணம்டடி விதையேதவிர வேறில்லை. ஆகையால் இவ்விதமான கிணற்று இறவைப்பயிர்களும் நீர்ப்பாய்ச்சும் சாதனமும் உள்ள எல்லா ஜில்லாக்களிலும் மேல்சொன்ன பிரகாரம் தழை எரு சுலபவாய் செய்யக்கூடும்.

# புத்தக விமர்சை

## REVIEWS

சந்திரகாந்தா.—இது ம-ா-ா-ஸ்ரீ ஜே. ஆர். இரங்கராஜு அவர்களால் எழுதப்பட்ட நவீனம். இதைப் படிக்கும்பொழுது சிலசமயங்களில் ஆங்கிலத்தில் ஆலிவர் கோல்ட்ஸ்மித் (Oliver Goldsmith) தால் எழுதப்பட்ட "வேக்பீல்ட் நகரத்து பிரதிகரு" (Vicar of Wakefield) என்னும் நவீனத்திற் பதிந்த சில பத்திரங்களின் குணம் மனதிற்கு ஆயாஸமின்றி ஞாபகத்திற்கு வருகின்றது. அண்ணுசாமி, சொண்டேர்ராஜா, சந்திரவதனு, சுந்தரகாந்தா, திருக்கள்ளூர் பண்டாரசன்னதி இவர்கள் சில வேறுபாடுகளுடன் பர்ச்செல், ஸ்கியர்தார்ண்ஹில், சோபைபா, வோவிவியா, ஜென்கின்ஸின் இவர்களது தமிழ் அவதாரமென்று சில ஸமயங்களில் ஊஹிக்கலாமென்று தோன்றுகிறது. கோவிந்தனது துப்பறியும் தன்மையும் அண்ணுசாமியின் மனவமைதியும் மனதைப் பிரமிக்கச்செய்யும்: சன்னியாஸ வேஷங்கொண்டவர்கள் செய்யும் தவறு காரியங்களும், பெரிய குடியிற் பிறந்தவாது அகந்தையும் நன்ருக வெளியிட்டது. ஜாதியின் குணத்தை யுயர்த்தும் ; இராகவரெட்டியின் மேன்மை பெருந்தன்மை இவை சந்திரவதனுவின் குணங்களுடன்தான் ஒற்று விளங்குமென்பது, இனமினத்தோடோ வாழ்தலைக்காட்டும். சந்திரவதனுவின் முன் புத்தியையும் சந்தரகாந்தாவின் பின் புத்தியையும் விளக்கிக் காட்டுமாறு முதலும் கடையும் கொண்டு சந்திரகாந்தாவென்று பெயர் இந்நவீனத்திற்கியைத்தது இயற்றியாரது ஆழ்ந்தறியும் குணத்தை விளக்கும். முதல் அத்யாயத்தில வ்யவாஹாரம் செய்த நாயகி தொழில் மனதை இழுத்ததால் இன்னம் ஜானகி, கமலம் இவரது பின் சரிதை சிறிது வந்திருந்தால் மிகவும் நன்ருயிருக்குமென்று நமது அபிப்பிராயம். கதை மனதைக் கவரச் செய்வதுபோல் பதிப்பும் மனத்தைத் தன்பாலிழுக்கின்றது.

ரத்நாவளி.—வடமொழியின்கண் ஸ்ரீ ஹர்ஷனியற்றிய நாடகமிது. ம-ா-ா-ஸ்ரீ ப. சம்பந்தமுதலியாரால் தமிழ்ப்பிக்கப்பட்டது. வடமொழியின் ஆழ்ந்த ஒளி இதனிடத்து வீசாவிடினும் தமிழர்கட்கு ஸ்ரீஹர்ஷனது இரத்நாவளியின் காதையைக் காட்டும் ஓர்வழியாக இருக்கின்றது. தாமாய் சில பாத்திரங்களை யுத்பவித்து நாடகத்தைத் தன் மனத்திற்கேற்றவண்ணம் சிலசெப்பஞ் செய்துளார். இயற்கையி லவரப்பொழுதமெழுதும் ஸ்வபாவத்திலேயே இந்நாடகமுமெழுதப்பட்டுள்ளது. புத்தகப் பதிப்புமிக நன்ருக அமைக்கப்பட்டுள்ளது.

ஸந்நியாசிகீதமும் பாரதஜாதிய கீதமும்.—விவேகாநந்தராலும், பாபாப்ரேமாநந்த பாரதியாரின் சிஷ்யையான அந்தோனி அம்மையாராலும் முறையே இயற்றப்பட்ட ஆங்கிலப்பாக்களின் தமிழ் மொழிப்பெயர்ப்பாகி. இப்பாடல்கள் படிப்பவர் மனதையும் இருதயத்தையும் ஆநந்தத்தில் மூழ்கச்செய்து பரவசமடையச் செய்யும் என்பதிற்கையமில்லை. மதுரை காலேஜ் பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ கோபாலக்கிருஷ்ணய்யரால் இயற்றப்பட்டது. இப்பாக்கள் இனிமையுடையனவாயிருத்தலுமன்றி முதனூலினின்று வேறுபடா திருத்தல் களிப்படையச் செய்யும்.

விநாயகரநுபூதி.—இது மாயூரம் பண்டிதர்ஸ்ரீ எஸ். வேலாயுதம் முதலியாரால் இயற்றப்பட்டது. கந்தரநுபூதி நடையிலெழுதப்பட்டது. இம்மாதிரி பழைய நடையில் தானுய் சில காவியங்கள் செய்வாராயின் தமிழ் பாஷைக்கு வரவாகும். இருப்பதைப் போல் பல எழுதுவதைவிட தானே தனது கவி சமத்காரத்தின் வன்மையால் புதியதோர் காவியம் புனைந்திடில் அது மிகவும் எமக்கின்பம் பயக்கும். இவர் எழுதிய நடைக்குதாரணமாக இந்நூலின் 45-வது செய்யுள் வருமாறு:—

அதுவென் றிதுவென் றறிதற் கமையாப்
பொதுவொன் றுமயக் ககலப் புரிமோ
முதுகா ரணஞா னமுனோர் வலபை
யதிமோ கபுரந் தரவா தியனே.

பொய்யாமொழிப்புலவர் சரிதம்.—இது கோவைச்சாரதாவிலாஸ் செந்தமிழ்ச்சங்கக் காரியதரிசியாகிய ஸ்ரீ. சி. கு. நாராயணஸ்வாமி முதலியாரால் தொகுக்கப்பட்டது. இத்தகைய நூல் தமிழ் பாஷைக்கு மிகவேண்டியதாக இருக்கின்றது. இதில் புலவர் பெருமானது கால முதலியவைகளைப் பற்றி ஆராய்ச்சிசெய்ததுடன் அவரது குணவிசேடங்களும் கூறப்பட்டுள்ளது. தனிப்பாடற்றிரட்டு, விநோதரசமஞ்சரி முதலிய நூல்களுள் ஸரியான விஷயம் கிடைப்பதரிதாகி, இடை இடையே சில பாக்கள் மாத்திரங்கிடைப்பின் அது இத்தகையப் பாவலரும் இருந்தனரோ என ஐயங்கொள்ளுமாறு செய்யும் எண்ணத்தை ஒழிக்குமாறே இச்சிறிய நூல் எழுதப்பட்டதாகத் தெரிகிறது. தஞ்சைவாணன் கோவையை இயற்றிய இப்புலவரது காலம் 12-ம் நூற்ருண்டில் விளங்கிய நாற்கவிராச நம்பி காலத்திற்கும், சிந்தாமணி இயற்றிய திருத்தக்க தேவர் காலத்திற்கும் இடை இருக்கலாமென்று சர்ச்சை செய்யப்பட்டிருக்கின்றது.

3644

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, REGISTERED 2 - JUL 1910 MADRAS.



## மாட்சிமைப்பெற்ற அரசன்—சத்ரபதி

### ஏழாவது எட்வர்டாரின் தேக வியோகம்

கனவிலும் நினைக்கமுடியாது இருந்தாற்போலிருந்து அரசன் மரிக்க நேர்ந்த விஷயம் இந்தியநாட்டின் மனத்தைக்கவிந்து துன்பஸாகரத்தில் ஆழ்த்திவிட்டதென்று நாம் ஏன் கூறவேண்டும்? அது கூறாமலே வெளிப்படை? 1901௵ ஜனவரி௴ 2-தேதி யன்று இறந்த மாட்சிமைப்பெற்ற அரசி விக்டோரியாவின் பிரிவானது சற்று மறைவதன் முன்னமே நமது அரசனும் 9௵ 3௴ 14 நாட்கள் அரசு புரிந்து இறந்துமாகிவிட்டது. இதுவும் காலத்தின்கொடுமை! இவரைக் கொலைபுரிய பலபேர் போட்டிக்கொண்டிருந்தனர். முதலில் நோய்: அது 1871௵ விஷஜ்வர ரூபமாகியும் 1902௵ ஓர் கட்டிவடிவாகியும் தோன்றி அரசரை மிக்கதுன்பத்திற்காளாக்கிப் பின்னவரை உயிரோடுவிட்டது தெய்வச்செயல்தான். இரண்டாவது அரசுரிமை த்வேஷர்கள் (Anarchists): இவர்கள் கூட்டத் தொருவனாகிய ஸ்பீடீ என்பவன் நமது காலஞ்சென்ற அரசர் ருஷ்யா (Russia) தேசத்தில் சேன்ற பீட்டர்ஸ்பர்க் (St. Petersburg) என்னு நகரில் சென்றுகொண்டிருக்கும் பொழுது கொலை புரிய

யத்தனித்தது. ஆனால் அப்பொழுது தப்பித்துக்கொண்டதன்றி, தன்னைக்கொலை செய்ய வந்தவனை இவரெதிரில் கொண்டு நிறுத்தின பொழுது மிக்க மன அமைதியோடு "வெறும் முட்டாள்" என்று பதில் கூறினர். மூன்றுவது நமன்: இவன் தன் இயற்கைபோல் இவருயிரைக்கவர்ந்து சென்று நமது நாட்டைத் துன்பக்கடலில் மூழ்த்தினன்.

தன் தாயின் குணமுற்றுங்கொண்டு, எல்லார்க்கு நன்மைபுரிய வேண்டுமென்று கவலையுற்று வாழ்ந்து, தான் இந்தியர்க்காக மிக்க அன்புபாராட்டியதன்றித் தான் அரசுரிமைப் பூண்டதும் இந்தியர் நிலைமையை உயர்த்த புதிய சட்டங்களியற்றியதும், எத்தேசத்திலும் சண்டை சச்சரவு கூடாதென்று 'மத்யஸ்த'மாகி நின்று நடுநிலைமையை நாட்டியதும், சிறுபொழுது முதலிலிருந்து ஜனங்களுடன் பயின்று அவர்களுக்குவேண்டியவற்றையறிந்து வாழ்ந்ததும், இவை முதலாகிய விஷயங்களை யறியாதவருமுண்டோ? ஆனால் இந்தியர்களுக்கு அரசன் மரணம் ஏதோ தூரதேசத்தில் வாழ்ந்து, தன் பிரதிநிதிகளின் மூலமாகத் தமதுநாட்டை ஆண்டவன் இறந்தான் என்னும் விஷயமாத்திர மன்று. அவர்களுக்கு அரசன் என்னும் லக்ஷியம் தெய்வீகத்தன்மைப் பெற்று, பெருமை சிறுமை என்பதைக் கவனியாது, அஞ்சாமன உறுதியோடு தாக்ஷண்யமின்றி நியாயத்தை நடத்தி, மிக்க அன்பொடு, துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனஞ் செய்யும் தெய்விக மூர்த்தமென்னும் எண்ணம் மனத்தைக் கவிந்திருப்பதோடு, ஆங்கில அரசருள் முதல் முதல், தாயின் அநுக்ரஹத்தோடு, இந்தியநாட்டிற்கு வந்து கோரக ஜனங்களின் இயற்கையையறிந்து சென்றனன் என்னும் ஞாபகம் மூட்டவும், செங்கோல் கைக்கொண்டதும் ஜனங்களுக்கெழுதிய உறுதிமொழியும் நமது ஜனங்களின் ஹ்ருதயத்தை உருக்கியதை நாம் சொல்லவும் வேண்டுமோ?

நமதரசாது மரணம் நமது ஸமூஹத்தார்க்கு மாத்திரமன்றி உலகமுழுதிற்கும் துன்ப மூட்டும்; எங்கும் அவர் எல்லாராலும் நன்கு மதிக்கப்பட்டவர். இவ்வாறெல்லாரும் வ்யஸனிப்பது ஓர்பாலிருக்க மாட்சிமைப் பெற்ற அரசி அலக்ஸாண்டரா அம்மையாரின் மனமும், அவர் குழந்தைகளின் ஹ்ருதயமும் எவ்வாறு அலையும், கலங்கும், துன்பக்கடலில் ஆழும் என்று எண்ணுவதும் மிகக்கடினம். வீட்டிற்குத்தலைவனும் நாட்டிற்குத்தலைவனுமிறந்தால் ஒரே குழப்பந்தான். அரசன் இறந்தது எல்லார் மனதையும் ப்ரமையுள் ஆழ்த்திவிடினும், உலகிலெல்லோருடைய ஸுகத்திற்கும் தேசத்தின் க்ஷேமத்திற்கு ஆளாகி நின்று மிக உழைத்த மன்னன் மரித்தான் என்றெல்லோரும் அலமந்து நிற்பினும், தேசமுழுதும் மணியிழந்த நாகம்போல் நிலைமையுறினும், அரசியார்பாலும், அவர் மக்கள்பாலும், உறவினர்பாலும் வீட்டிற்குப்பெரியோன் உயிர் நீத்ததால் உண்டான அநுதாபமின்னதென்று சொல்லிமுடியாது. ஆகையால் தமிழ்வகுப்பார் மாத்திரமன்றி, எல்லா இந்தியர்க்குத்தமது ஹ்ருதயத்தில் மூண்டு கிளம்பி மேலெழும்பு அநுதாபத்தை, அவர் பொருட்டு இப்பத்திரிகை வாயிலாக வெளியிடுவதன்றி இப்பெருந் துன்பப்பெருக்கைத் தாங்கக்கடவுள் அரசியார்க்குஅவர் மக்கள், உறவினர் யாவர்க்கு மனவலியளிக்கவும் விரும்புவதோடு உலகமுழுதும் கவிந்து நிற்கும் துன்பப்பெருக்கத்தையும் வெளியிடுகிறோம்.

3645

OFFICE OF THE REGISTRAR OF BOOKS,
REGISTERED
2 - JUL 1910
MADRAS.



சென்னை கண்ணாடித்தொழிற்சாலை—ஸோடா ஸீஸா பண்ணும் இடம்

377, 378-ம் பக்கங்களைப் பார்க்க